
தினபூமி
thinaboomi.com
பூமி: 23 சுற்று: 245 ஆடி 16
புதுச்சேரி, வெள்ளி, ஆகஸ்ட் 01, 2025
சென்னை ▸ மதுரை ▸ திருச்சி ▸ கோவை ▸ நெல்லை ▸ சேலம் ▸ வேலூர் ▸ புதுச்சேரி
பக்கம் 8 ₹ 3.00



## இந்தியாவும் - ரஷ்யாவும் செத்த பொருளாதாரங்கள்: அதிபர் ட்ரம்ப் கடும் விமர்சனம்

....2-ம் பக்கம்

## மாலேகான் வழக்கு: பிரக்யா சிங் உள்பட 7 பேரும் விடுதலை

...3-ம் பக்கம்

## இந்திய டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் மாபெரும் சாதனை படைத்த கில்

....6-ம் பக்கம்






முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச்செயலகத்தில், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப்பள்ளிகளில் பயின்று, 2025-26-ம் கல்வி ஆண்டில் புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களான இந்திய தொழில்நுட்ப கழகம், ஒன்றிய பல்கலைக்கழகங்கள், தேசிய ஃபேஷன் தொழில்நுட்ப நிறுவனம், தேசிய சட்டப் பல்கலைக்கழகம் போன்றவற்றில் சேர்க்கை பெற்ற 136 மாணவ, மாணவியர்களுக்கு மடிக்கணினிகள் மற்றும் பாராட்டு சான்றிதழ்களை வழங்கி வாழ்த்தினார். இந்த நிகழ்ச்சியில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மா.மதிவேந்தன், தலைமைச் செயலாளர் முருகானந்தம் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

### தமிழகம் முழுவதும் நாளை 1,256 இடங்களில் நடைபெறும்

# 'நலம் காக்கும் ஸ்டாலின்' முகாமை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்

## பொதுமக்களுக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் வேண்டுகோள்

சென்னை, ஆக. 01-

**`நலம் காக்கும் ஸ்டாலின்' மருத்துவ முகாம்களை நாளை (ஆகஸ்ட் 2-ம் தேதி) முதல்வர் மு.க. ஸ்டாலின் தொடங்கி வைக்கிறார். இந்த முகாம்களில் மக்கள் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவும், பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ளவும் முதல்வர் மு.க. ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார்.**

**அனைத்துத் திட்டங்கள்**

இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள செய்திக்குறிப்பில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:- 2021-ம் ஆண்டு நமது திராவிட மாடல் அரசு அமைந்த பிறகு, 'எல்லார்க்கும் எல்லாம்' என்ற உன்னதமான நோக்கத்தை நமது திட்டங்கள் வழியாகச் செயல்வடிவத்தில் கொண்டுவந்து, தமிழ்நாட்டை அனைத்துத் துறையிலும் முன்னேறிய மாநிலமாக உயர்த்திக் காட்டியிருக்கிறோம். அனைத்துத் துறை வளர்ச்சி, அனைத்து மாவட்டத்து வளர்ச்சி, அனைத்துச் சமூக வளர்ச்சி என்ற அடிப்படையில், ஒவ்வொரு மனிதரின் தேவைகள், கோரிக்கைகள், விருப்பங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றைச் செய்து தரும் வகையில், அனைத்துத் திட்டங்களும் உருவாக்கப்பட்டு வருகின்றன.

**மருத்துவ முகாம்களை**

அந்த வகையில், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில், மக்களைத் தேடி மருத்துவம், நம்மைக் காக்கும் 48 ஆகிய திட்டங்களைத் தொடர்ந்து, மருத்துவச் சேவைகளைக் கடைக்கோடி மனிதருக்கும் கொண்டு சேர்க்க வேண்டும் என்று எண்ணத்தைச் செயல் வடிவமாக்க, பல்வேறு ஆய்வுக் கூட்டங்களுக்குப் பிறகு, ஒரு திட்டத்தை உருவாக்கினோம். அதன் அடிப்படையில், மருத்துவம் மற்றும் மக்கள்நல்வாழ்வுத் துறை அமைச்சர், கடந்த 21.04.2025 அன்று தமிழ்நாடு சட்டமன்றத்தில், "உயர் மருத்துவ சேவைகள் வழங்க ரூ.12.78 கோடி செலவில் மருத்துவ முகாம்கள் நடத்தப்படும்" என்று அறிவித்தார். இந்த அறிவிப்பினைச் செயல்படுத்தும் விதமாக, எதிர்வரும் ஆகஸ்ட் 2-ம் நாளன்று "நலம் காக்கும் ஸ்டாலின்" மருத்துவ முகாம்களை, சென்னை செயின்ட் பீட்ஸ் ஆங்கிலோ இந்தியன் மேல்நிலைப் பள்ளியில் தொடங்கி வைக்க உள்ளேன். தமிழ்நாட்டில் உள்ள 38 மாவட்டங்களிலும் நடைபெறவுள்ள இந்தச் சிறப்பு மருத்துவ முகாம்களில் அமைச்சர்கள், நாடாளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் பங்கேற்றிட வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறேன்.

> **அனைத்து பொதுமக்களும், குறிப்பாக "உங்களுடன் ஸ்டாலின்" முகாம்களில் நடத்தப்படும் முதற்கட்ட பரிசோதனையின் அடிப்படையில் மருத்துவ நிபுணர்களின் விரிவான பரிசோதனைக்கு பரிந்துரைக்கப்பட்டவர்கள் இந்த முகாம்களில் அவசியம் கலந்து கொண்டு பயனடைய வேண்டும்.**
>
> **- முதல்வர் மு.க.ஸ்டாலின்**

**மொத்தம் 1,256 முகாம்கள்...**

ஒரு வட்டாரத்திற்கு 3 முகாம்கள் வீதம் 388 வட்டாரங்களில் 1,164 முகாம்களும், ஒரு மண்டலத்திற்கு ஒரு முகாம் வீதம் பெருநகர சென்னை மாநகராட்சியில் 15 முகாம்களும், ஒரு மாநகராட்சிக்கு 4 முகாம்கள் வீதம் 10 லட்சம் மக்கள் தொகைக்கு அதிகமாக உள்ள 5 மாநகராட்சிகளில் 20 முகாம்களும், ஒரு மாநகராட்சிக்கு 3 முகாம்கள் வீதம் மக்கள் தொகை 10 லட்சத்திற்குக் குறைவாக உள்ள 19 மாநகராட்சிகளில் 57 முகாம்களும் என மொத்தம் 1,256 முகாம்கள் நடத்த திட்டமிடப்பட்டுள்ளன.

**பொருளாதார ரீதியில்...**

இம்முகாம்கள் சிறப்பு மருத்துவ வசதிகள் குறைந்த ஊரக பகுதிகள், குடிசைப் பகுதிகள், பழங்குடியினர் அதிகம் வசிக்கும் பகுதிகளில் முன்னுரிமை அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்டு நடத்தப்பட உள்ளன. 40 வயதிற்கு மேற்பட்டோர், நீரிழிவு மற்றும் உயர் ரத்த அழுத்த நோயால் பாதிக்கப்பட்டவர்கள், மனநல பாதிப்புடையோர், இதய நோயாளிகள், கர்ப்பிணித் தாய்மார்கள் மற்றும் பாலூட்டும் தாய்மார்கள், வளர்ச்சி குன்றிய குழந்தைகள், மாற்றுத் திறனாளிகள், பழங்குடியினர் மற்றும் சமூக-பொருளாதார ரீதியில் பின்தங்கிய மக்களுக்கு இம்முகாம்களில் முன்னுரிமை வழங்கப்பட உள்ளன.

**பல்வேறு துறைகள் மூலம்**

ஒவ்வொரு மாவட்டத்திலும் வாரந்தோறும் சனிக்கிழமைகளில் காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை இம்முகாம்கள் நடத்தப்பட உள்ளன. உள்ளாட்சி அமைப்புகள், பள்ளிக்கல்வித் துறை, உயர்கல்வித் துறை, ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை, சமூகநலம் மற்றும் மகளிர் உரிமைத் துறை, தொழிலாளர் நலன் மற்றும் திறன்மேம்பாட்டுத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத்துறை, வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத்துறை உள்ளிட்ட பல்வேறு துறைகளை ஒருங்கிணைந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளி/கல்லூரி வளாகங்களில் இம்முகாம்கள் நடத்தப்பட உள்ளன.

**குறுஞ்செய்தி வாயிலாக**

இம்முகாம்களில் ரத்த அழுத்த பரிசோதனை மற்றும் அனைத்துப் பயனாளிகளுக்கும் ரத்த மாதிரிகள் சேகரிக்கப்பட்டு, முழுமையான இரத்த அணுக்களின் எண்ணிக்கை, இரத்த சர்க்கரை, சிறுநீரகச் செயல்பாட்டு பரிசோதனைகள் (யூரியா, கிரயாட்டினின்) செய்யப்பட்டு, மருத்துவ முகாமிலேயே பயனாளிகளின் பரிசோதனை விவரங்கள் அவர்களுக்கு குறுஞ்செய்தி வாயிலாக உடனடியாக தெரிவிக்கப்படும். இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

### உயர்கல்விநிறுவனங்களில் சேர்க்கை பெற்ற

# மாணவ - மாணவிகள் 136 பேருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் பாராட்டு

சென்னை, ஆக. 01-

**ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, புகழ்பெற்ற உயர்கல்விநிறுவனங்களில் சேர்க்கை பெற்ற 136 மாணவ - மாணவியர்களுக்கு மடிக்கணினிகளும், பாராட்டுச் சான்றிதழ்களையும் முதல்வர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்.**

இதுகுறித்து, தமிழ்நாடு முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் தனது எக்ஸ் பதிவில் தெரிவித்திருப்பதாவது:-

நலம்பெற்றுப் பங்கேற்ற முதல் நிகழ்ச்சியே மனமகிழ்ச்சி தரும் நிகழ்ச்சியானது. ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலப் பள்ளிகளில் பயின்று, புகழ்பெற்ற உயர்கல்வி நிறுவனங்களில் சேர்க்கை பெற்ற 136 மாணவ - மாணவியர்களுக்கு மடிக்கணினிகளும் பாராட்டுச் சான்றிதழ்களும் வழங்கினேன். மிகவும் பின்தங்கிய - துன்பங்களை அனுபவித்த குடும்பங்களில் இருந்து மேலெழுந்து புகழ்பெற்றிருக்கும் அவர்களது கல்விப் பயணத்தையும் - கல்வி மீதான அவர்களது பற்றையும் கேட்டு உள்ளம் நெகிழ்ந்து கண்கள் கலங்கினேன்.

கல்விதான் உண்மையான பெருமையைத் தேடித் தரும் என உயர்படிப்புகளுக்குச் சென்றுள்ள இவர்கள் வாழ்வின் அத்தனை உயரங்களையும் காண வேண்டும் என உள்ளன்போடு வாழ்த்துகிறேன். இப்படி கல்வியால் - உழைப்பால் முன்னேறிச் சாதனை படைப்பவர்களைத்தான் தமிழ்ச்சமூகம் முன்மாதிரியாக எடுத்துக்கொள்ள வேண்டும். இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### கிராமங்களில் தொழில் செய்பவர்கள்

# லைசென்ஸ் வாங்க வேண்டும் உத்தரவை ரத்து செய்தது அரசு

சென்னை, ஆக.01-

**கிராமங்களில் தொழில் செய்பவர்கள் லைசென்ஸ் வாங்க வேண்டும் என்ற அரசு உத்தரவு ரத்து செய்யப்பட்டுள்ளது.**

கிராம பகுதிகளில் தொழில் செய்பவர்கள் கட்டாயம் லைசென்ஸ் வாங்க வேண்டும் என்றும், இது டீக்கடை முதல் அனைவருக்கும் பொருந்தும் என்றும் தமிழக அரசு உத்தரவிட்டு இருந்தது. இதற்கு அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி கண்டனம் தெரிவித்து இருந்தார்.

அவருக்கு பதில் அளிக்கும் வகையில், ஊரக வளர்ச்சித்துறை அமைச்சர் ஐ.பெரியசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- தொழில் உரிமம் பெறுவதற்கான சட்டப்பிரிவு பல ஆண்டுகளாக இருந்த போதும் முறையான விதிகள் இல்லாததால் ஒவ்வொரு கிராம ஊராட்சிகளிலும் தங்களது தீர்மானத்தின் அடிப்படையில் பல்வேறு விதமான கட்டணங்கள் நிர்ணயம் செய்து அதிக அளவில் கட்டணங்களை வசூலித்து வந்தன.

இந்த குறைகளை நீக்கும் பொருட்டு பல்வேறு வணிகர்களின் கோரிக்கைகளை ஏற்று இப்போது புதிதாக விதிகள் உருவாக்கப்பட்டு அறிவிக்கை வெளியிடப்பட்டு உள்ளது.

வணிகர் நலனுக்காக பல்வேறு நலத்திட்டங்களை அறிவித்து செயல்படுத்தியுள்ள திராவிட மாடல் அரசின் நல்லெண்ணத்தின் மீது பழிபோட பழனிசாமி பகல் கனவு காண வேண்டாம். இந்நிலையில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பாக உரிமம் பெறுவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துவது குறித்து கோரிக்கை மனுவை முதல்வரிடம் சமர்ப்பித்துள்ளனர். இந்த அதில் லைசென்ஸ் விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக துறை அலுவலர்கள் மற்றும் வணிகர் சங்க அமைப்புகளின் பிரதிநிதிகளை கொண்ட ஆலோசனைக் குழு ஒன்றை அமைக்க முதலமைச்சர் உத்தரவிட்டுள்ளார்.

இந்தக்குழு, கிராமப்புறங்களில் சிறு வணிகர்கள் வணிக உரிமம் பெறுவது குறித்த நடைமுறையை எளிமைப்படுத்துவது குறித்து ஆய்வு மேற்கொண்டு அரசுக்கு பரிந்துரைகளை வழங்கும். அதன் அடிப்படையில் புதிய சட்டத்தை நடைமுறைபடுத்துவது குறித்து முடிவு மேற்கொள்ளப்படும்.

இவ்வாறு அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையில் கிராமங்களில் தொழில் செய்ய லைசென்ஸ் வாங்க வேண்டும் என்ற அரசு உத்தரவு ரத்து செய்யப்பட்டிருப்பதாக தகவல் வெளியாகி உள்ளது. ஆலோசனை குழு சமர்ப்பித்த பிறகு இதில் முடிவெடுக்கப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

### தொடர்ந்து முடங்கும் பாராளுமன்றம்:

# எதிர்க்கட்சிகள் கடும் அமளியால் இரு அவைகளும் ஒத்திவைப்பு

புதுடெல்லி, ஆக. 01-

**அமெரிக்க வரி விதிப்பு, வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சிகள் கடும் அமளியில் ஈடுபட்டதால் பாராளுமன்ற இரு அவைகளும் ஒத்திவைப்பட்டன. இதனால் அவை நடவடிக்கை முடங்கின.**

பாராளுமன்றத்தின் மழைக்கால கூட்டத்தொடர் கடந்த 21-ந் தேதி தொடங்கியது. பஹல்காம் பயங்கரவாத தாக்குதல், ஆபரேஷன் சிந்தூர் விவகாரம் உள்ளிட்ட பிரச்சினைகளை விவாதிக்க வேண்டும் என்று கோரி காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சிகள் பாராளுமன்றத்தில் கடும் அமளியில் ஈடுபட்டன. இதனால் மக்களவையும், மாநிலங்களவையும் முடங்கின. இதையடுத்து ஆபரேஷன் சிந்தூர் பற்றி விவாதிக்க மத்திய அரசு முன்வந்தது.

இந்நிலையில் நேற்று (ஜூலை 31) மக்களவை கூடியதும் அமெரிக்க வரி விதிப்பு, வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக விவாதிக்கக் கோரி எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர்.

மக்களவை சபாநாயகர் ஓம்.பிர்லா பலமுறை எச்சரித்தும் எதிர்க்கட்சி எம்.பி.,க்கள் கடும் அமளியில் ஈடுபட்டனர். போராட்டம் நடத்தும் உறுப்பினர்கள் கோஷங்களை எழுப்புவதை நிறுத்திவிட்டு தங்கள் இருக்கைகளுக்குத் திரும்ப வேண்டும். நீங்கள் (போராட்டம் நடத்தும் உறுப்பினர்கள்) பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க விரும்பவில்லையா? என்று அவர் கூறினார், மேலும் மக்கள் உங்களை சபையில் கோஷமிடத்தான் தேர்ந்தெடுத்தார்களா என்று கேட்டார். சபை பிரச்சினைகளைப் பற்றி விவாதிப்பதற்கானது, உறுப்பினர்களின் நடத்தை பொருத்தமானதல்ல என்று கூறி அவையை பிற்பகல் 2 மணி வரை சபாநாயகர் ஓம்.பிர்லா ஒத்திவைத்தார்.

அதேபோல், எதிர்க்கட்சிகள் அமளி காரணமாக மாநிலங்களவையும் பிற்பகல் 2 மணி வரை ஒத்திவைக்கப்பட்டது. பாராளுமன்றம் தொடர்ந்து முடங்கி வருகிறது.

### கல்வி நிதி வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி

# தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் இன்று விசாரணை

புதுடெல்லி, ஆக. 01-

**கல்வி நிதி வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி தமிழ்நாடு அரசு தொடர்ந்த வழக்கில் சுப்ரீம் கோர்ட்டில் இன்று விசாரணை நடைபெறுகிறது.**

தமிழ்நாட்டுக்கு, கடந்த கல்வி ஆண்டுக்கான (2024-25) 'சமக்ரா சிக்சா' திட்டத்தின்கீழ் தர வேண்டிய ரூ.2,291 கோடி நிதியை மத்திய அரசு நிறுத்தி வைத்துள்ளது. மும்மொழி சார்ந்த தேசிய கல்விக்கொள்கையை அமல்படுத்தினால்தான் அந்த நிதி வழங்கப்படும் என்று மத்திய அரசு திட்டவட்டமாக தெரிவித்துவிட்டது.

இதனையடுத்து கல்வி நிதி ரூ.2,291 கோடியை வழங்க மத்திய அரசுக்கு உத்தரவிடக்கோரி சுப்ரீம் கோர்ட்டில் தமிழ்நாடு அரசு வழக்கு தொடர்ந்துள்ளது. இந்த வழக்கை சுப்ரீம் கோர்ட்டு தலைமை நீதிபதி பி. ஆர். கவாய் தலைமையிலான அமர்வு இன்று (வெள்ளிக்கிழமை) விசாரிக்கிறது.

### பரபரக்கும் தமிழக அரசியல் களம்:

# முதல்வர் மு.க.ஸ்டாலினை சந்தித்த பிரேமலதா, ஓ.பி.எஸ்.

சென்னை, ஆக. 01-

**முன்னாள் முதல்வர் பன்னீர்செல்வம் முதல்வர் ஸ்டாலினை அவரது வீட்டில் நேற்று (ஜூலை 31) சந்தித்தார்.**

தமிழக முதல்வரும், தி.மு.க. தலைவருமான மு.க. ஸ்டாலினை, ஓ. பன்னீர்செல்வம் நேற்று காலை சந்தித்துப் பேசினார். சென்னை, அடையாறு பூங்காவில் நேற்று காலை நடைப்பயிற்சி சென்றபோது இருவரும் சந்தித்துப் பேசிக் கொண்டனர். அப்போது, முதல்வர் ஸ்டாலினிடம் உடல்நலம் குறித்து ஓபிஎஸ் கேட்டறிந்ததாகக் கூறப்படுகிறது.

சென்னையில் வியாழக்கிழமை முக்கிய அறிவிப்பு வெளியிடப்படும் என முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் தெரிவித்திருந்த நிலையில், மதியம் செய்தியாளர்களைச் சந்தித்த ஓபிஎஸ் அணியினர் பாஜக தலைமையிலான தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகுவதாகத் தெரிவித்தனர்.

இந்த நிலையில், சென்னை ஆழ்வார்பேட்டையில் முதல்வர் மு.க.ஸ்டாலின் வீட்டுக்கு நேற்று மாலை திடீரென சென்ற ஓ.பன்னீர்செல்வம் அவருடன் சந்திப்பு நடத்தினார். ஓ.பன்னீர்செல்வத்தை துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் வீட்டு வாசல் வரை வந்து வரவேற்றார்.

தேமுதிக பொதுச் செயலர் பிரேமலதா விஜயகாந்த் நேற்று காலை முதல்வர் ஸ்டாலினை நேரில் சந்தித்திருந்த நிலையில், ஓ.பன்னீர் செல்வமும் முதல்வரைச் சந்திருப்பது பேசுபொருளாகியுள்ளது. தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகியுள்ள ஓ.பன்னீர்செல்வம், தமிழக வெற்றிக் கழகத்தில் இணைவார் என எதிர்பார்த்திருந்த நிலையில், முதல்வர் ஸ்டாலினுடன் சந்தித்துள்ளதால், அவர் தி.மு.க.வுடன் கூட்டணி வைக்க வாய்ப்புள்ளதா? என்ற கேள்வியும் எழுந்துள்ளது.


**மார்க்கெட் விலை நிலவரம்**



| BSE | NSE |
|---|---|
| -296.28 | -86.70 |
| பாயிண்ட் 81,185.58 | பாயிண்ட் 24,768.35 |




**தங்கம்**
1 சவரன் ₹73,360
1 கிராம் ₹9,170



**வெள்ளி**
1 கிலோ ₹125,000
1 கிராம் ₹125.00

**டாலர்** ₹87.56



**பெட்ரோல்** ₹102.63
**டீசல்** ₹94.24

# இந்தியாவும் – ரஷ்யாவும் செத்த பொருளாதாரங்கள்

## அமெரிக்க அதிபர் ட்ரம்ப் விமர்சனம்

**புதுடில்லி, ஆக.01-**

இந்தியாவும் ரஷ்யாவும் செத்த பொருளாதாரங்களைக் கொண்டிருப்பதாக அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் விமர்சித்திருக்கிறார்.

இது உலகளவில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியிருக்கிறது. இந்தியாவுக்கு 25 சதவீத வரி விதித்திருந்த நிலையில், நேற்று இந்தியாவை நேரடியாகத் தாக்கிப் பேசியிருக்கிறார் டிரம்ப். தன்னுடைய ட்ரூத் எனப்படும் சமூக வலைத்தளத்தில், டிரம்ப் இந்தியா- ரஷ்யா குறித்து கடுமையான விமர்சனங்களை முன் வைத்துள்ளார்.



அதில், ரஷ்யாவுடன் சேர்ந்து இந்தியா என்ன செய்தாலும் அதுபற்றி எனக்குக் கவலையில்லை. அவர்கள் தங்களது செத்தப் பொருளாதாரங்களை ஒன்றாக சேர்ந்து மேலும் வீழ்ச்சிக்குக் கொண்டு செல்கிறார்கள். அது பற்றி பரவாயில்லை.

வீழ்ந்து கிடக்கும் பொருளாதாரத்தை இந்தியா, ரஷ்யா மேலும் வீழ்ச்சிக்குக் கொண்டு செல்கிறார்கள். நாங்கள் இந்தியாவுடன் இணைந்து மிகக் குறைவான வணிகத்தையே மேற்கொள்கிறோம். அவர்களது கட்டணம் மிக அதிகம். இந்த உலகிலேயே, பிற நாடுகளுடன் ஒப்பிட்டால் இந்தியாவில் கட்டணம் அதிகம். அதுபோல, ரஷ்யாவும் அமெரிக்காவும் இணைந்து வணிகம் மேற்கொள்வதில்லை என்று தெரிவித்துள்ளார்.

இந்தியா - அமெரிக்கா இடையே வணிக ஒப்பந்தம் இறுதி செய்யப்படாதது குறித்து இந்திய அதிகாரிகள் கூறுகையில், அதிபரின் இந்த அறிவிப்பு புது டில்லி மீது அழுத்தத்தை ஏற்படுத்தும் வகையில் உள்ளது, அமெரிக்கா வைக்கும் வலியுறுத்தல்கள் அனைத்தையும் இந்தியாவை ஏற்க வைப்பதற்கான உக்தி இது, அண்மைக் காலமாக ஜப்பான், பிரிட்டன், ஐரோப்பிய யூனியன் நாடுகளுடன் இந்தியா மிகவும் சிறந்த வர்த்தக ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது என்றார்.

# பாக்.கிடம் இந்தியா எண்ணெய் வாங்கும் சூழல் வரலாம்: ட்ரம்ப்

**வாஷிங்டன், ஆக.01-**

ஒருநாள் இந்தியாவுக்குக் கூட பாகிஸ்தான் எண்ணெய் விற்பனை செய்வார்கள் என ட்ரம்ப் கூறியுள்ளார்.

அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தனது சமூக வலைதள பக்கத்தில் கூறியதாவது:- நாங்கள் பாகிஸ்தானுடன் ஒரு ஒப்பந்தத்தை செய்துள்ளோம். இந்த ஒப்பந்தம் நிறைவு பெற்று உள்ளது. இதன் மூலம் பாகிஸ்தானும் அமெரிக்காவும் தங்கள் மிகப்பெரிய எண்ணை இருப்புக்களை வளர்ப்பதில் இணைந்து செயல்படும். பாகிஸ்தானில் எண்ணெய் சேமிப்பு கிடங்கை அமைக்கப்போகிறோம். யாருக்கு தெரியும், ஒருநாள் இந்தியாவுக்குக்கூட பாகிஸ்தான் எண்ணெய் விற்பனை செய்வார்கள்.

பல நாடுகளின் தலைவர்களுடன் வர்த்தக ஒப்பந்தங்கள் குறித்து உரையாடினேன். அவர்கள் அனைவரும் அமெரிக்காவை மிகவும் மகிழ்ச்சியடையச் செய்ய விரும்புகிறார்கள் என்று அதில் தெரிவித்துள்ளார்.

இதற்கிடையே பாகிஸ்தான் அரசாங்கம் கூறும்போது, பாகிஸ்தானுக்கும் அமெரிக்காவிற்கும் இடையே எட்டப்பட்ட புதிய வர்த்தக ஒப்பந்தம், அமெரிக்காவால் இறக்குமதி செய்யப்படும் பாகிஸ்தான் பொருட்களுக்கான வரிகளைக் குறைக்கும் என்று தெரிவித்தது.

ட்ரம்ப்பின் இந்த விவகாரமான பேச்சு சர்வதேச அளவிலும், இந்திய அரசியலிலும் பெரும் சர்ச்சையை உருவாக்கியுள்ளது.

# பிரபல ராப் பாடகர் வேடன் மீது பாலியல் வன்கொடுமை புகார்

**திருவனந்தபுரம், ஆக.01-**

பிரபல ராப் பாடகர் வேடன் மீது பாலியல் வன்கொடுமை புகார் அளிக்கப்பட்டுள்ளது.

மலையாள திரையுலகில் மிகவும் பிரபலமானவர் ராப் பாடகர் வேடன். வேற்றுமைகளுக்கும், அடக்குமுறைகளுக்கும் எதிராகத் தொடர்ந்து பாடி வருவதால் இவருக்கென தனி ரசிகர்கள் பட்டாளமே உருவாகியுள்ளது. சுயாதீன பாடகராக மட்டமல்லாமல் திரைப்படங்களிலும் பாடி வருகிறார்.

தன்னைத் திருமணம் செய்துகொள்வதாகக் கூறி வேடன் பாலியல் வன்கொடுமை செய்ததாக பெண் மருத்துவர் ஒருவர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார். அப்புகாரில், இன்ஸ்டாகிராம் மூலம் பழக்கமான வேடன் கடந்த 2021 முதல் 2023 ஆம் ஆண்டு வரை தன்னிடம் அடிக்கடி பணம் பெற்றதுடன் திருமணம் செய்துகொள்வதாகக் கூறி பலமுறை பாலியல் வன்கொடுமை செய்தார் எனத் தெரிவித்துள்ளார்.

இப்புகார் குறித்து காவல் துறையினர் விசாரணையைத் துவங்கியுள்ளனர். சில மாதங்களுக்கு முன் வேடன் போதைப்பொருள் வழக்கில் கைதாகி விடுதலையானது குறிப்பிடத்தக்கது.

# ஆணவ படுகொலை செய்யப்பட்ட கவின் உடலை வாங்க உறவினர்கள் மறுப்பு

**நெல்லை, ஆக. 01-**

4-வது நாளாக ஆணவ படுகொலை செய்யப்பட்ட கவினின் உடலை வாங்க உறவினர்கள் மறுத்து வருகின்றனர்.

தூத்துக்குடி மாவட்டம் ஏரல் அருகே உள்ள ஆறுமுகமங்கலத்தை சேர்ந்தவர் சந்திரசேகர். இவருடைய மனைவி தமிழ்செல்வி. இவர்களது மகன் கவின் (வயது 27). இவர்கள் தற்போது தூத்துக்குடி பிரையண்ட் நகர்பகுதியில் வசித்து வருகிறார்கள். நெல்லை பாளையங்கோட்டை கே.டி.சி.நகர் பகுதியைச் சேர்ந்தவர் சரவணன். இவரது மனைவி கிருஷ்ணகுமாரி. இவர்களுக்கு சுர்ஜித் (24) என்ற மகனும், ஒரு மகளும் உள்ளனர்.

இதில் சரவணன் ராஜபாளையம் பட்டாலியனிலும், கிருஷ்ணகுமாரி மணிமுத்தாறு பட்டாலியனிலும் சப்-இன்ஸ்பெக்டர்களாக பணியாற்றி வந்தனர். இவர்கள் இதற்கு முன் தூத்துக்குடியில் வசித்து வந்தனர்.

அப்போது, கவினும், சுர்ஜித்தின் அக்காளும் ஒரே பள்ளியில் படித்து வந்தபோது பழகியுள்ளனர். சென்னையில் தகவல் தொழில்நுட்ப என்ஜினீயராக பணியாற்றி வந்த கவின் விடுமுறைக்காக ஊருக்கு வந்தார்.

தற்போதும் கவின், அந்த பெண்ணிடம் பேசிவந்ததாக கூறப்படுகிறது. இதை அறிந்த சுர்ஜித் கடந்த 27-ந்தேதி பாளையங்கோட்டைக்கு வந்த கவினை அரிவாளால் சரமாரியாக வெட்டிக்கொலை செய்தார். இதுகுறித்து பாளையங்கோட்டை போலீசார் வழக்குப்பதிந்து, சுர்ஜித்தை கைது செய்தனர்.

மேலும் கொலைக்கு தூண்டியதாக அவரது தந்தை சரவணன், தாயார் கிருஷ்ணகுமாரி ஆகியோர் மீது போலீசார் வழக்குப்பதிவு செய்தனர். கடந்த 3 தினங்களுக்கு முன்பு அவர்கள் 2 பேரும் பணி இடைநீக்கம் (சஸ்பெண்டு) செய்யப்பட்டனர்.

இந்த கொலை வழக்கில் கவினின் செல்போனும் முக்கிய பங்கு வகிப்பதாக கூறப்படுகிறது. கவின் கொலையாவதற்கு முன்பாக யார், யாரிடம் பேசினார். அதில் காணப்படும் படங்கள் ஆகியவற்றை கண்டறியும் முயற்சியில் போலீசார் ஈடுபட்டு வருகின்றனர். இதற்கிடையே கவின் உடல் பாளையங்கோட்டை அரசு ஆஸ்பத்திரியில் பிரேத பரிசோதனை செய்யப்பட்டு வைக்கப்பட்டு இருக்கிறது.

இந்தநிலையில், நெல்லையில் ஆணவப் படுகொலை செய்யப்பட்ட கவினின் உடலை வாங்க 4-வது நாளாக உறவினர்கள் மறுப்பு தெரிவித்துள்ளனர். கவினை படுகொலை செய்த சுர்ஜித்தின் தந்தை கைது செய்யப்பட்ட நிலையில் தாயை கைது செய்யவும் கோரிக்கை வைக்கப்பட்டது.

தனது சகோதரியை காதலித்ததால் பட்டியலின இளைஞர் கவினை சுர்ஜித் படுகொலை செய்தார். சுர்ஜித் சரணடைந்த நிலையில் உதவி ஆய்வாளர்களான அவரது பெற்றோரை கைது செய்ய வேண்டும் என கவினின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அந்த அம்மாவையும் கைது பண்ணனும்; அதன் பிறகுதான் என் மகனின் உடலை வாங்குவேன் நெல்லையில் ஆணவப்படுகொலை செய்யப்பட்ட ஐ.டி. மென்பொறியாளர் கவினின் தந்தை கூறியுள்ளார்.

தினபூமியில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

# பிரேசிலுக்கு 50 சதவீத வரி விதிப்பு: அமெரிக்கா அதிபர் ட்ரம்ப் உத்தரவு

**வாஷிங்டன், ஆக. 01-**

அமெரிக்க ஜனாதிபதியாக டொனால்டு ட்ரம்ப் பதவியேற்றதில் இருந்து பல உத்தரவுகளை பிறப்பித்து வருகிறார். சட்டவிரோத குடியேறிகளுக்கு எதிராக கடுமையான நடவடிக்கைகளை ட்ரம்ப் எடுத்துள்ளார்.

அமெரிக்காவின் பொற்காலம் மீட்கப்படும் வகையிலான நடவடிக்கையை எடுப்பேன் என தெரிவித்த அவர், சீனா உள்ளிட்ட பல்வேறு நாடுகளுக்கு எதிராக கடுமையான வரி விதிப்புகளை அமல்படுத்தி உத்தரவிட்டார். இந்நிலையில், பிரேசில் நாட்டுக்கு மொத்தம் 50 சதவீத வரி விதிப்பதற்கான உத்தரவில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்டு ட்ரம்ப் கையெழுத்திட்டு உள்ளார். இதுபற்றிய அந்த உத்தரவில், பிரேசில் அரசின் கொள்கைகள் மற்றும் நடவடிக்கைகள், அமெரிக்க வர்த்தகத்தில் எதிர்மறையான தாக்கங்களை ஏற்படுத்தியது. அமெரிக்க குடிமக்களின் சுதந்திர பேச்சுரிமையையும் அது பாதித்து உள்ளது. அமெரிக்க வெளியுறவு கொள்கை மற்றும் பொருளாதார நலன்களுக்கு அச்சுறுத்தலாக உள்ளது என தெரிவிக்கின்றது.

இதனை தொடர்ந்து பிரேசிலுக்கு எதிராக கூடுதலாக 40 சதவீத வரி விதிக்கப்படுகிறது. இதனால், பிரேசிலுக்கு ஏற்கனவே விதித்த 10 சதவீத வரியுடன் சேர்த்து, மொத்தம் 50 சதவீத வரி விதிக்கப்படுகிறது. எனினும், விமான பாகங்கள், அலுமினியம், உரம் உள்ளிட்ட சில பொருட்களுக்கு விலக்குகளும் அளிக்கப்பட்டு உள்ளன.

அவர் நேற்று இதற்கான உத்தரவில் கையெழுத்திட்ட நிலையில், 7 நாட்களில் அது நடைமுறைக்கு வரும் என கூறப்படுகிறது. இதேபோன்று, இந்திய பொருட்களுக்கு 25 சதவீத வரி விதிக்கப்படும் என்றும் அவர் அறிவித்துள்ளார்.

அமெரிக்க பொருட்களுக்கான இந்தியாவின் வரிகள் மிக அதிக அளவில் உள்ளன. அது உலகிலேயே மிக அதிக வரிவிதிப்பாகவும் உள்ளது. எனவே ஆகஸ்டு 1-ந்தேதி முதல் இந்தியா 25 சதவீத வரியை செலுத்தும் என அவர் தெரிவித்து உள்ளார்.

# 6.5 ரிக்டர் அளவில் குரில் தீவுகளில் நிலநடுக்கம்

**குரில் தீவுகள், ஆக. 01-**


குரில் தீவுகளில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டது.

ரஷ்யாவிற்கும் ஜப்பானிற்கும் இடையே குரில் தீவுகள் அமைந்துள்ளது. இந்த தீவின் கடல் பகுதியில் நேற்று காலை 10.57 மணியளவில் சக்தி வாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவுகோலில் 6.5 ஆக பதிவாகி உள்ளது என தேசிய நில அதிர்வு மையம் தெரிவித்துள்ளது.

குரில் தீவுகளில் 10 கிலோமீட்டர் ஆழத்தை மையமாக கொண்டு இந்த நிலநடுக்கம் 49.51 டிகிரி வடக்கு அட்சரேகையிலும், 158.75 டிகிரி கிழக்கு தீர்க்கரேகையிலும் இருக்கும் என முதலில் தீர்மானிக்கப்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட பாதிப்புகள் பற்றிய விவரங்கள் எதுவும் உடனடியாக வெளியிடப்படவில்லை. இந்த சக்திவாய்ந்த நிலநடுக்கத்தால் அப்பகுதி மக்கள் அச்சத்தில் உள்ளனர். முன்னதாக நேற்று முன்தினம் காலை 8 மணியளவில் ரிக்டர் 6.3 அளவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம் ஏற்பட்டிருந்தது குறிப்பிடத்தக்கது.

**01-08-2025**



## இன்றைய ராசி பலன்கள்

**மேஷம்:-** மிகவும் பிரபலமான நபருடன் ஏற்படும் நட்பால் நன்மைகள் பல அடைவீர்கள். பல்வேறு வழிகளிலும் பணவரவு அதிகரிக்கும். மனைவி மூலம் மகிழ்ச்சியும், நன்மைகளும் ஏற்படும்.

**ரிஷபம்:-** புதிய வாகனம் வாங்க நினைக்கும், உங்கள் எண்ணங்கள் ஈடேறும். அதன் காரணமாக புதிய உற்சாகங்கள் பொங்கும். தொழிலில் புதிய விரிவாக்க நடவடிக்கைகளுக்குத் துணைபுரியும் நாள்.

**மிதுனம்:-** உயர் அதிகாரிகளிடம் பேசும்போது, அதிர்ந்து பேசாமல், அமைதியாக பேசுவது, உயர்வுக்கு வழி வகுக்கும். சுயநம்பிக்கை அதிகரிக்கும், முன்னேற்ற வாய்ப்புகள் கதவைத் தட்டும்.

**கடகம்:-** தன வருவாய் போதுமான அளவுக்கு திருப்திகரமாக இருந்தாலும், வழக்கு விவகாரங்களில் சில சிக்கல்களை சந்திக்க நேரும். உடல் நிலையில் அக்கறை தேவை, தானுண்டு தன் வேலையுண்டு என்று இருக்க வேண்டிய நாள்.

**சிம்மம்:-** மனதில் உற்சாகமும், மகிழ்ச்சியும் பொங்கும். பணியில் கூடும் சம்பள உயர்வால், சம்பாதிக்கும் திறன் அதிகரிக்கும். வேலை பார்க்கும் இடத்தில் அதிகாரிகள் பாராட்டு கிடைக்கும்.

**கன்னி:-** தேவையற்ற பழிகளைச் சுமக்காமல் இருக்கக் குடும்பத்தாரிடம் பேசும் போது மிகுந்த எச்சரிக்கையுடன் பேசவும். கவனமாக படித்தால் தடைகளைத் தகர்த்தெரியலாம். உடல் சோர்வு அதிகரிக்கும்.

**துலாம்:-** தொழில் விரிவாக்கத்தில் ஈடுபட படுபவர்களுக்கு, எண்ணியபடி வங்கிக் கடன்கள் சுலபமாக கிடைக்கும். அதன் காரணமாக முன்னேற்றம் காண்பர். இனிய பேச்சு சாதுர்யத்தால் எடுத்த காரியங்கள் வெற்றி பெறும்.

**விருச்சிகம்:-** நல்லபடியாக உங்கள் ஆரோக்கியத்தைப் பேண வேண்டிய நாள். வாகனங்களை வெளியில் எடுக்கும் முன் அனைத்து பாகங்களையும் சோதித்துப் பார்த்து, எடுப்பது நல்லது.

**தனுசு:-** தனலாபமும், எல்லா வகையிலும் நன்மையும் ஏற்படும். அரசு வேலைக்கு மனு செய்தவர்கள் சாதகமான பதிலை எதிர்பார்க்கலாம். கடினமான பணியை கூட சுலபமாக முடித்துவிடுவார்கள்.

**மகரம்:-** அனைத்துக் காரியங்களும் அனுகூலமாக நடக்கும். அரசிடம் எதிர்பார்க்கும் சலுகைகள் அனைத்தும் தடை, தாமதங்கள் இன்றி கிடைக்கும். புதிய வேலைவாய்ப்புகள் உருவாகும்.

**கும்பம்:-** மனைவியின் மனம் மகிழ, மலையை கூட அசைத்து விடுவார்கள். மழலைச் செல்வங்கள், மடியில் போட்டுக் கொஞ்சும் நாள் விரைவில் வரலாம். தான தர்ம சிந்தனைகள் ஏற்படும்.

**மீனம்:-** எந்த ஒரு விஷயத்திலும் மிகவும் எச்சரிக்கையாக இருக்கவேண்டிய நாள். அனைவருக்கும் நன்மை செய்யும் எண்ணத்தைக் கைக் கொள்வது நல்லது. பெண்ணால் குடும்பத்தில் கலகம் உருவாகலாம்.

# கவினின் பெற்றோரை சந்தித்து கனிமொழி நேரில் ஆறுதல்



**தூத்துக்குடி, ஆக. 01-**

காதல் விவகாரத்தில் படுகொலை செய்யப்பட்ட கவின் இல்லத்திற்கு நேரில் சென்று அவரது பெற்றோருக்கு ஆறுதல் கூறிய கனிமொழி எம்.பி, ஆணவக் கொலை தொடர்பாக சட்டம் நிறைவேற்றப்படும் என நம்புவதாக கூறியுள்ளார்.

ஆறுமுகமங்கலம் பகுதியில் உள்ள கவினின் வீட்டிற்கு, திமுக துணைப் பொதுச் செயலாளரும், தூத்துக்குடி தொகுதி எம்பியுமான கனிமொழி, நேற்று நேரில் சென்று ஆறுதல் கூறினார். மேலும், குற்றம் செய்தவர்கள் மீது தக்க நடவடிக்கை எடுப்பதில் முதலமைச்சர் உறுதியாக உள்ளதாகவும் தெரிவித்தார். அப்போது கனிமொழியிடம், சுர்ஜித்தின் தாயாரையும் கைது செய்ய வேண்டும் என கவினின் பெற்றோர் கோரிக்கை விடுத்தனர்.

மேலும், கொலை நடந்த இடத்தின் 2 கேமரா காட்சிகளை மட்டுமே போலீசார் தங்களிடம் காட்டியதாகவும், இந்த கொலைக்கு முழுக்க முழுக்க குற்றவாளியின் பெற்றோர்தான் காரணம் என்றும் கூறினர். குறிப்பாக, குற்றம் நடந்த நாளில் காவல் நிலையத்தில் தங்களை கடுமையாக அலைகழித்ததாகவும், தங்களை தனியாக ஒரு அறையில் அடைத்து வைத்ததாகவும் கவினின் தாயார் குற்றம்சாட்டினர்.

அதனைத் தொடர்ந்து செய்தியாளர்களை சந்தித்த கனிமொழி எம்.பி, “இப்படிப்பட்ட கொலைகள், குறிப்பாக ஆணவக் கொலைகள் நடக்கக் கூடாது என்பது தான் இந்த சமூகத்தின் உணர்வாக இருக்கிறது. இப்படியொரு நிகழ்வு நடந்திருக்கக் கூடாது. தங்களது இளம் மகனை இழந்த தவிப்பில் உள்ள பெற்றோருக்கு ஆதரவாக நிற்கிறோம். முதலமைச்சர் சார்பில் அமைச்சர்களும், நானும் இங்கு வந்திருக்கிறோம்.

கவினின் பெற்றோருக்கு நியாயம் கிடைக்க தமிழக அரசு நிச்சயம் உறுதுணையாக நிற்கும். அந்த நம்பிக்கையை தருவதற்காகத்தான் நாங்கள் இங்கு வந்தோம். விசாரணை நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. அதன் பிறகு தான் அடுத்தகட்ட நடவடிக்கை எடுக்க முடியும். அதற்காகத்தான் வழக்கு சிபிசிஐடிக்கு மாற்றப்பட்டுள்ளது. இதில் யார் யார் தவறு செய்திருக்கிறார்களோ, அத்தனை பேர் மீதும் தக்க நடவடிக்கை எடுக்கப்படும்” என்றார்.

ஆணவ கொலைக்கு எதிராக தனிச்சட்டம் இயக்குவது குறித்து பத்திரிகையாளர்கள் கேட்டதற்கு, “இது நாடு தழுவிய பிரச்சினையாக இருக்கிறது. இது குறித்து நானும், திருமாவளவனும் நாடாளுமன்றத்தில் பல முறை பேசியிருக்கிறோம். குறிப்பாக, நேற்று திருமாவளவன் அங்குள்ள அமைச்சர்களை சந்தித்து இது குறித்து கோரிக்கை வைத்திருக்கிறார். விரைவில் ஆணவக் கொலைக்கு எதிரான சட்டம் நிறைவேற்றப்படும் என்று நம்புகிறோம்” என்று கூறினார்.

# பாசனத்திற்காக மேட்டூர், பவானிசாகர் அணைகளில் இன்று நீர் திறக்க உத்தரவு

**சென்னை, ஆக. 01-**

மேட்டூர் அணையிலிருந்து இன்று முதல் தண்ணீர் திறந்துவிட அரசு உத்தரவிட்டுள்ளது.

தமிழக அரசு வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:- திருச்சி மற்றும் அரியலூர் மாவட்டங்களில், புள்ளம்பாடி வாய்க்கால் மூலம் 22 ஆயிரத்து 114 ஏக்கர் நிலங்களும், திருச்சி மற்றும் தஞ்சாவூர் மாவட்டங்களில், புதிய கட்டளை மேட்டு வாய்க்கால் மூலம் 20 ஆயிரத்து 622 ஏக்கர் நிலங்களும் பாசன வசதி பெறும் வகையில், மேட்டூர் அணையிலிருந்து ஆகஸ்டு 1-ந்தேதி (இன்று) முதல் தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டு உள்ளது.

ஈரோடு மாவட்டம், பவானிசாகர் அணையிலிருந்து கீழ்பவானித் திட்டப் பிரதானக் கால்வாய் இரட்டைப் படை மதகுகள் மற்றும் சென்னசமுத்திரம் பகிர்மான கால்வாய் ஒற்றைப்படை மதகுகள் மூலமாக ஒரு லட்சத்து 3 ஆயிரத்து 500 ஏக்கர் பாசன நிலங்களுக்கு 31-ந்தேதி (நேற்று) முதல் ஆகஸ்டு 14-ந்தேதி முடிய நாளொன்றுக்கு 2 ஆயிரத்து 300 கனஅடி வீதம் 15 நாட்கள் சிறப்பு நனைப்பிற்கு 2 ஆயிரத்து 980.80 மில்லியன் கன அடிக்கு மிகாமலும், ஆகஸ்டு 18-ந்தேதி முதல் டிசம்பர் 12-ந்தேதி முடிய 120 நாட்களுக்கு, முதல்போக நன்செய் பாசனத்திற்கு 23 ஆயிரத்து 846.40 மில்லியன் கன அடிக்கு மிகாமலும், மொத்தம் 135 நாட்களுக்கு 26 ஆயிரத்து 827.20 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டு உள்ளது.

இவ்வாறு அதில் கூறப்பட்டு உள்ளது.

# 2-வது நீண்டகால இந்திய பிரதமர்: மோடிக்கு அமீரக அதிபர் வாழ்த்து

**அபுதாபி, ஆக. 01-**

இந்திய பிரதமர் மோடிக்கு அமீரக அதிபர் தொலைபேசியில் வாழ்த்து தெரிவித்தார்.

இந்தியாவில் தொடர்ந்து 3 முறை பிரதமராக நரேந்திர மோடி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். இந்திய வரலாற்றில் முன்னாள் பிரதமர் ஜவஹர்லால் நேரு 17 ஆண்டுகள் பொறுப்பில் இருந்தார். அதனை அடுத்து பிரதமர் நரேந்திர மோடி தற்போது 11 ஆண்டுகளை கடந்து இந்தியாவின் 2-வது நீண்டகால பொறுப்பில் உள்ள பிரதமர் என்ற பெருமையை பெற்றுள்ளார்.

இந்த நிலையில் அமீரக அதிபர் மேதகு ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் தொலைபேசியில் பிரதமர் நரேந்திர மோடியுடன் பேசினார். இதில் அமீரகம்-இந்தியா இடையிலான விரிவான கூட்டு முயற்சிகள் குறித்து பேசப்பட்டது. அதேபோல் நிலைத்தன்மை வாய்ந்த வளர்ச்சி மற்றும் பரஸ்பர இருதரப்பு மக்களுக்கு எதிர்காலத்தில் கிடைக்க கூடிய அனைத்து வாய்ப்புகளிலும் ஒத்துழைப்பு பெறுவதற்கான முயற்சிகள் குறித்து விவாதிக்கப்பட்டது.

தொடர்ந்து இந்திய வரலாற்றில் 2-வது நீண்டகாலம் பணியாற்றும் பிரதமராக பெருமை சேர்த்த மோடிக்கு அமீரக அதிபர் மேதகு ஷேக் முகம்மது பின் ஜாயித் அல் நஹ்யான் வாழ்த்து தெரிவித்தார். இதில் அவர் இதே போல வரும் காலத்திலும் இந்திய மக்களுக்கு சேவை புரிவதில் வெற்றியடைய வாழ்த்துவதாக குறிப்பிட்டார். தொடர்ந்து அமீரக அதிபரின் வாழ்த்துகளுக்கும், இந்தியா மற்றும் அதன் மக்களுக்கு அவர் வெளிப்படுத்திய அன்பான உணர்வுகளுக்கும் பிரதமர் மோடி நன்றி தெரிவித்துக்கொள்வதாக கூறினார்.

# சீனாவில் கனமழைக்கு 44 பேர் பலி

**பீஜிங், ஆக. 01-**

சீனாவில் கடந்த வாரத்தில் தொடங்கிய கனமழை மற்றும் வெள்ளம் காரணமாக, 44 பேர் உயிரிழ்ந்தனர், 9 பேர் மாயமாகினர். சாலைகள் சேதமடைந்தன. மின்சாரம் துண்டிக்கப்பட்டது. பொதுமக்கள் பாதுகாப்பு முகாம்களில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து அதிகாரிகள் கூறியதாவது:-

பெய்ஜிங்கின் வடக்கு மலை மாவட்டங்களான மியுன் மற்றும் யாங்கிங்கில் தான் உயிரிழப்புகள் அதிகம். கடந்த வாரம் கனமழை தொடங்கியது. அதனை தொடர்ந்து நாட்டின் சில பகுதிகளுக்கு வெள்ளம் மற்றும் பேரழிவுகளுக்கு மத்தியில் மக்களின் உயிர் மற்றும் சொத்துக்களுக்கு பாதுகாப்பை உறுதிசெய்ய அதிபர் ஜி ஜின்பிங் உத்தரவிட்டிருந்தார்.

அதன்படி முன்னெச்செரிக்கையாக 80 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டனர். வெள்ளத்தால் 31 சாலைப் பகுதிகள் சேதமடைந்தது.136 கிராமங்களில் மின்சாரம் துண்டிக்கப்பட்டுள்ளது. மீட்பு பணிகள் துரிதப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறு அதிகாரிகள் கூறினர்.

# முதல்வர் மு.க.ஸ்டாலினுடன் பிரேமலதா, சுதீஷ் சந்திப்பு

**சென்னை, ஆக.01-**

முதல்வர் ஸ்டாலினை அவரது ஆழ்வார்பேட்டை இல்லத்தில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா, சுதீஷ் சந்தித்து நலம் விசாரித்தனர்.

கடந்த ஜூலை 21ம் தேதிக்கு முதல்வருக்கு தலை சுற்றல் ஏற்பட்டது. அவர் அப்போலோ மருத்துவமனையில் தங்கி சிகிச்சை பெற்றார்.

அங்கு அவருக்கு இதயத் துடிப்பை சீராக வைக்க உதவும், 'பேஸ் மேக்கர்' கருவி பொருத்தப்பட்டது.

பின்னர் டாக்டர்கள் ஓய்வில் இருக்குமாறு அறிவுறுத்தினர்.

இந்நிலையில் நேற்று (ஜூலை 31) முதல்வர் ஸ்டாலினை அவரது ஆழ்வார் பேட்டை இல்லத்தில் தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா, சுதீஷ் சந்தித்து நலம் விசாரித்தனர். இதற்கிடையே, டாக்டர்கள் அறிவுறுத்திய ஓய்வுக்குப் பின், நேற்று (ஜூலை 31) முதல்வர் ஸ்டாலின் தலைமைச் செயலகம் வந்தார்.

வரவிருக்கும் சட்டசபை தேர்தலில், தி.மு.க. கூட்டணியில் சேர தே.மு.தி.க. முயற்சி செய்து வருவதாக தகவல்கள் வெளியாகி வருகின்றன. இத்தகைய சூழ்நிலையில், பிரேமலதா, சுதீஷ் ஆகியோர், முதல்வரை நேரில் சென்று சந்தித்துப் பேசியுள்ளனர்.

பிரேமலதா சந்திப்பு குறித்து சமூக வலைதளத்தில் புகைப்படங்களை பகிர்ந்து, ''நட்புடன் நலம் விசாரித்தமைக்கு நன்றி!'' என முதல்வர் ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

# இந்திய பொருளாதாரத்தை பா.ஜ.க. அழித்து விட்டது: ராகுல் குற்றச்சாட்டு

**புதுடெல்லி, ஆக.01-**

அதானிக்கு உதவுவதற்காக பா.ஜ.க. அரசு இந்திய பொருளாதாரத்தை நாசமாக்கிவிட்டது என்று ராகுல் காந்தி தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு இறக்குமதியாகும் பொருட்களுக்கு 25% வரி விதிக்கப்படும் என அமெரிக்க அதிபர் டிரம்ப் அறிவித்துள்ளார். இரண்டு நாட்களில் அமெரிக்காவின் பரஸ்பர வரி காலக்கெடு முடிவடையும் நிலையில், டிரம்பின் இந்த அறிவிப்பு வந்துள்ளது. டிரம்பின் இந்த அறிவிப்பு இந்திய தொழில் நிறுவனங்களிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது. இதனிடையே, இந்தியா மீது அமெரிக்கா விதித்துள்ள வரி விதிப்பு குறித்து கவனத்தில் எடுத்துள்ளதாகவும், இந்த வரிவிதிப்பால் ஏற்படும் தாக்கம் குறித்து ஆராய்ந்து வருவதாக மத்திய அரசு கூறியுள்ளது. இந்த விவகாரத்தில் மத்திய அரசை காங்கிரஸ் எம்.பி ராகுல் காந்தி சாடியுள்ளார்.

ராகுல் காந்தி கூறியதாவது: இந்திய பொருளாதாரம் மோசம் அடைந்துவிட்டது. அதானி-மோடி கூட்டணி, பணமதிப்பிழப்பு, தவறான ஜி.எஸ்.டி., தோல்வியடைந்த "அசெம்பிள் இன் இந்தியா", எம்.எஸ்.எம்.இக்கள் அழிப்பு, விவசாயிகள் நசுக்கப்படுதல் ஆகியவை இதற்கு காரணம். இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லாததால் எதிர்காலம் பாழாக்கப்பட்டுள்ளது" என்று கூறியுள்ளார்.

இந்திய பொருளாதாரத்தை காலமான பொருளாதாரம் என்று டொனால்டு டிரம்ப் கூறியது பற்றி ராகுல் காந்தியிடம் செய்தியாளர்கள் கேட்டனர். இதற்கு பதிலளித்த ராகுல் காந்தி, சரியாகத்தான் கூறியிருக்கிறார். இந்திய பிரதமர் மற்றும் நிதி அமைச்சகத்தை தவிர எல்லோருக்கும் இந்த உண்மை தெரியும். டிரம்ப் இந்த உண்மையை சொன்னதில் நான் மகிழ்ச்சி அடைகிறேன். அதானிக்கு உதவுவதற்காக பா.ஜ.க. அரசு இந்திய பொருளாதாரத்தை நாசமாக்கிவிட்டது'' என்றார்.

# இந்திய நலன்களில் சமரசம் இல்லை: அமைச்சர் பியூஷ் கோயல் திட்டவட்டம்

**புதுடில்லி, ஆக.01-**

இந்திய நலன்களில் சமரசம் இல்லை என மத்திய வர்த்தக துறை அமைச்சர் பியூஷ் கோயல் தெரிவித்தார்.

இது தொடர்பாக, அவர் லோக்சபாவில் கூறியதாவது: உலகப் பொருளாதாரங்களுடனான எந்தவொரு வர்த்தக ஒப்பந்தத்தையும் தொடரும்போது இந்தியா தனது தேசிய நலனைப் பாதுகாக்கும். இந்திய பொருட்கள் மீது அமெரிக்கா அறிவித்த வரி விதிப்பின் தாக்கங்கள் குறித்து ஆராய்ந்து வருகிறோம். வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் ஏற்றுமதியாளர்கள், மற்றும் அனைத்து பங்குதாரர்களுடனும் பேச்சு வார்த்தை நடத்தி, இந்தப் பிரச்னை குறித்த அவர்களின் மதிப்பீடு குறித்த தகவல்களைச் சேகரித்து வருகிறோம்.

இருதரப்பு வர்த்தக ஒப்பந்தம் குறித்து விவாதிக்க இரு நாடுகளுக்கும் இடையே ஏற்கனவே நான்கு சுற்று பேச்சு வார்த்தைகள் நடந்துள்ளது.

இருப்பினும், முக்கிய நலன்களில் இந்தியா சமரசம் செய்ய வாய்ப்பில்லை.மொத்த உள்நாட்டு உற்பத்தியின் அடிப்படையில் இந்தியப் பொருளாதாரம் விரைவில் உலகின் மூன்றாவது பெரிய நாடாக மாறும்.

தற்போது உலகின் வேகமாக வளர்ந்து வரும் பெரிய பொருளாதார நாடாக திகழ்கிறது.

சீர்திருத்தங்கள், விவசாயிகள், சிறு, குறு மற்றும் நடுத்தர நிறுவனங்கள் மற்றும் தொழில்முனைவோர்களின் கடின உழைப்பின் அடிப்படையில், சில ஆண்டுகளில் இந்தியா உலகின் 11வது பெரிய நாடாக இருந்து 5வது பெரிய நாடாக முன்னேற்றம் கண்டது. உலகளாவிய நிறுவனங்களும் பொருளாதார வல்லுநர்களும் இந்தியாவை உலகப் பொருளாதாரத்தில் ஒரு பிரகாசமான இடமாகப் பார்க்கிறார்கள். இவ்வாறு அவர் பேசினார்.

# உண்மை தெரியாமல் பேச வேண்டாம்: சுர்ஜித்தின் சகோதரி வீடியோ வெளியீடு

**நெல்லை, ஆக.01-**

என் அப்பா, அம்மாவை விட்டுவிடுங்கள். உண்மை தெரியாமல் பேச வேண்டாம் என்று சுர்ஜித்தின் சகோதரி தெரிவித்துள்ளார்.

நெல்லையில் ஐ.டி. ஊழியர் கவின் செல்வகணேஷ் கொல்லப்பட்ட வழக்கில், சுர்ஜித் கைது செய்யப்பட்டார். அவர் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது. சுர்ஜித்தின் தந்தை, காவல் உதவி ஆய்வாளர் சரவணனும் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார். நெல்லை மாநகர காவல்துறையினர் அவரைக் கைது செய்தனர். கவின் செல்வகணேஷ் கொலை வழக்கை சி.பி.சி.ஐ.டிக்கு மாற்றி, தமிழக அரசு உத்தரவிட்டிருந்தது. சுர்ஜித்தின் தாயாரையும் கைது செய்ய வேண்டும் என்று கவின் குடும்பத்தினர் வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில், கவினின் தோழி ஒரு வீடியோவை வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: ''கவினின் கொலையில் என் பெற்றோருக்கு தண்டனை கொடுப்பது தவறு. என் அப்பா, அம்மாவுக்கு எதுவும் தெரியாது. கவினுக்கும் எனக்குமான உறவு எங்களுக்கு மட்டுமே தெரியும். என் அப்பா, அம்மாவை விட்டுவிடுங்கள். உண்மை தெரியாமல் பேச வேண்டாம். என் உணர்வுகளைப் புரிந்து கொள்ளுங்கள்,'' என்று தெரிவித்துள்ளார்.

சுர்ஜித்தின் சகோதரி மேலும் ஒரு வீடியோ வெளியிட்டுள்ளார். அதில் அவர் கூறியிருப்பதாவது: ''நானும் கவினும் உண்மையாகக் காதலித்தோம். கொஞ்சம் செட்டில் ஆக நேரம் தேவைப்பட்டது. கவினுக்கு போன் செய்த சுர்ஜித், 'பொண்ணு கேக்க வாங்க' என்று சொல்லியிருக்கிறான். 'எனக்கு திருமணம் முடிந்தால்தான் என்னுடைய தொழிலைப் பார்க்க முடியும்' என்று சொல்லியிருக்கிறான். அது எனக்குத் தெரியும். தேவையில்லாமல் யாரும் இஷ்டத்திற்கு வதந்தியை கிளப்ப வேண்டாம். உங்களுக்கு தோன்றுவதை எல்லாம் பேசாதீர்கள். என் அப்பா, அம்மாவுக்கு இதில் எந்த சம்மந்தமும் கிடையாது,. இதை இத்துடன் விட்டுவிடுங்கள். விட்ருங்க அவ்வளவு தான்'' என்று கூறியுள்ளார்.

# கோவையில் ஆக.5-ல் அ.தி.மு.க. சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம்

## எடப்பாடி பழனிசாமி அறிவிப்பு

**சென்னை, ஆக.01-**



காரமடை கார் ஸ்டாண்ட் அருகில் வரும் 5-ம் தேதி கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும் என எடப்பாடி பழனி சாமி தெரிவித்துள்ளார்.

அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி வெளியிட்டுள்ள அறிக்கையில், கோவை புறநகர் வடக்கு மாவட்டம், மேட்டுப் பாளையம் தொகுதி, காரமடை நகராட்சி சந்தைகடை ஏலத்தில் முறைகேடு செய்து நகராட்சிக்கு வருமான இழப்பு ஏற்படுத்தப்பட்டுள்ளது.

இங்குள்ள மின் மயானம் பல மாதங்களாக செயல்படுவதில்லை. நகராட்சிக்கு உட்பட்ட இடங்களில் அமைக்கப்பட்டுள்ள தார் சாலைகள், கான்கிரீட் சாலைகள், சாக்கடை கால்வாய்கள் தரமற்று அமைக்கப்பட்டுள்ளது.

இங்கு, வீடு கட்டுவதற்கு அனுமதி வழங்குவதிலும், புதிய வரி விதிப்பிலும் பெருமளவு முறைகேடுகள் நடைபெற்றுள்ளது. இங்குள்ள சாக்கடைகள் முறையாக பராமரிக்கப்படுவதில்லை.

இதனால் சுகாதார சீர்கேடு ஏற்பட்டுள்ளது

இந்நிலையில், கோவை புறநகர் வடக்கு மாவட்டம், மேட்டுப்பாளையம் தொகுதி, காரமடை நகராட்சி சந்தைகடை ஏலத்தில் முறைகேடு செய்து நகராட்சிக்கு வருமான இழப்பை ஏற்படுத்தியும்; நகராட்சியில் நிலவி வரும் பல்வேறு நிர்வாக சீர்கேடுகளை சரிசெய்வதற்கு உரிய நடவடிக்கைகளை மேற்கொள்ளாமல் மெத்தனப் போக்கோடும் இருந்து வரும் விடியா திமுக-வின் ஸ்டாலின் மாடல் அரசு மற்றும் நகராட்சி நிர்வாகத்தைக் கண்டித்தும்; மக்களின் அத்தியவாசிய, அடிப்படைத் தேவைகளை உடனடியாக நிறைவேற்றிட வலியுறுத்தியும், அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக கோவை புறநகர் வடக்கு மாவட்டத்தின் சார்பில் 5.8.2025 செவ்வாய் கிழமை காலை 10 மணியளவில், காரமடை கார் ஸ்டாண்ட் அருகில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறும்.

இந்தக் கண்டன ஆர்ப்பாட்டம், கழக அமைப்புச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செல்வராஜ், தலைமையிலும்; கோவை புறநகர் வடக்கு மாவட்டக் கழகச் செயலாளர் அருண்குமார், மாவட்ட அண்ணா தொழிற்சங்கச் செயலாளர் சின்னராஜ், காரமடை நகரக் கழகச் செயலாளர் ஆறுமுக சாமி ஆகியோர் முன்னிலையிலும் நடைபெறும்.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# கேரள கன்னியாஸ்திரிகள் கைது விவகாரம்: பிரியங்கா தலைமையில் போராட்டம்

**புதுடெல்லி, ஆக.01-**

கேரள கன்னியாஸ்திரிகள் கைது விவகாரத்தில், பிரியங்கா காந்தி தலைமையில் நடந்த போராட்டத்தை சசி தரூர் புறக்கணித்தார்.




சத்தீஸ்கரில் கேரளாவைச் சேர்ந்த இரண்டு கன்னியாஸ்திரிகள் ஆட்கடத்தல் மற்றும் கட்டாய மதமாற்ற குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இதற்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று நாடாளுமன்ற வளாகத்தில் காங்கிரஸ் பொதுச் செயலர் பிரியங்கா காந்தி வதோரா தலைமையில் போராட்டம் நடைபெற்றது.

கேரள எம்.பிக்கள் நடத்திய இந்த போராட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் மூத்த தலைவர் சசி தரூர் கலந்து கொள்ளவில்லை.

இந்த போராட்டத்தின் போது பிரியங்கா காந்தி கூறுகையில், ''சத்தீஸ்கரில் கட்டாய மதமாற்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக கேரள கன்னியாஸ்திரிகள் மீது வீண் பழி சுமத்தி அவர்களை கைது செய்துள்ளனர்.

போலீஸார் அவர்கள் மீது தாக்குதலும் நடத்தியுள்ளனர்.

சிறுபான்மையினர் மீதான இந்த வகையான தாக்குதல்களுக்கு நாங்கள் தொடர்ந்து எதிர்ப்பு தெரிவித்து வருகிறோம்'' என்றார்.

அதேநேரம் இப்பிரச்சினை தொடர்பாக நேற்று முன்தினம் கேரள எம்.பி.க்கள் நாடாளுமன்ற வளாகத்தில் நடத்திய போராட்டத்தில் சசி தரூர் கலந்து கொண்ட நிலையில், பிரியங்கா தலைமையிலான போராட்டத்தை அவர் புறக்கணித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# மாலேகான் குண்டுவெடிப்பு: பிரக்யா சிங் உள்பட 7 பேரும் விடுதலை

**மும்பை, ஆக.01-**



மாலேகான் குண்டுவெடிப்பு வழக்கில் பா.ஜ.க. முன்னாள் எம்.பி. பிரக்யா சிங் தாக்கூர் உள்பட 7 பேரையும் விடுவிக்க தேசிய புலனாய்வு முகமை சிறப்பு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

நாசிக் மாவட்டத்தில் அமைந்துள்ள மாலேகான் நகரில் உள்ள ஒரு மசூதி அருகே 2008-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 29-ந் தேதி அன்று மோட்டார் சைக்கிளில் வைக்கப்பட்டு இருந்த வெடி குண்டு வெடித்தது. இதில் 6 பேர் கொல்லப்பட்டதுடன், 100-க்கும் மேற்பட்டோர் காயம் அடைந்தனர்.

பா.ஜனதா மூத்த தலைவரும், முன்னாள் எம்.பி.யுமான பிரக்யா சிங் தாக்குர், லெப்டினன்ட் கர்னல் பிரசாத் புரோகித், ஓய்வுபெற்ற ராணுவ மேஜர் ரமேஷ் உபாத்யாய், அஜய் ரகிர்கர், சுதாகர் திவேதி, சுதாகர் சதுர்வேதி மற்றும் சமீர் குர்கர்னி ஆகிய 7 பேர் இந்த வழக்கில் குற்றம் சாட்டப்பட்டனர். இவர்கள் மீது சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்பு சட்டம்(உபா) மற்றும் இந்திய தண்டனை சட்டங்களின் கீழ் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொள்ளப்பட்டது. வழக்கை முதலில் மராட்டிய பயங்கரவாத எதிர்ப்பு படை விசாரித்து வந்தது. பின்னர் 2011-ம் ஆண்டு தேசிய புலனாய்வு முகமைக்கு (என்.ஐ.ஏ) மாற்றப்பட்டது. கடந்த 2018-ம் ஆண்டு தொடங்கிய இந்த வழக்கு விசாரணை கடந்த ஏப்ரல் மாதம் 19-ந் தேதி நிறைவடைந்தது. பின்னர் வழக்கு தீர்ப்புக்காக ஒத்தி வைக்கப்பட்டது.

இந்தநிலையில், வெறும் கருத்து மற்றும் தார்மீக ஆதாரங்களை வைத்து நீதிமன்றம் யாரையும் தண்டிக்க முடியாது; உறுதியான ஆதாரங்கள் இருக்க வேண்டும். குண்டுவெடிப்புக்கான சதித்திட்டம் தீட்டியதற்கான எந்த ஆதாரமும் இல்லை. ஸ்ரீகாந்த் புரோகித் ஆர்.டி.எக்ஸ். கொண்டு வந்ததற்கான எந்த ஆதாரமும் இல்லை. குண்டு இருந்ததாக கூறப்பட்ட மோட்டார் சைக்கிள் சாத்விக்கு சொந்தமானது என ஆதாரம் இல்லை என கூறி பா.ஜ.க. முன்னாள் எம்.பி. பிரக்யா சிங் தாக்கூர் உள்பட 7 பேரையும் விடுவிக்க தேசிய புலனாய்வு முகமை சிறப்பு நீதிமன்றம் உத்தர விட்டுள்ளது.

17 ஆண்டுகால வழக்கில் நீதிமன்றம் இந்த தீர்ப்பை அளித்துள்ளது.

மேலும் குண்டுவெடிப்பில் பலியான ஆறு பேரின் குடும்பங்களுக்கும் தலா ரூ.2 லட்சம் வழங்கப்படும், காயமடைந்த அனைவருக்கும் ரூ.50,000 இழப்பீடாக வழங்கப்படும் என்று நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

# கவின் குடும்பத்தினரை சந்தித்து நயினார் நாகேந்திரன் ஆறுதல்

**தூத்துக்குடி, ஆக.01-**

இது போன்ற சம்பவங்கள் தமிழகத்தில் இனி நடைபெறாமல் இருக்க வேண்டும் என கவின் குடும்பத்திற்கு ஆறுதல் தெரிவித்த பின் தமிழக பா.ஜ. தலைவர் நயினார் நாகேந்திரன் தெரிவித்துள்ளார்.

திருநெல்வலேியில் ஆணவக்கொலை செய்யப்பட்ட கவின் குடும்பத்திற்கு அமைச்சர்கள் கே.என்.நேரு, அனிதா ராதாகிருஷ்ணன், கனிமொழி எம்பி மற்றும் பா.ஜ. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் ஆகியோர் நேரில் ஆறுதல் தெரிவித்தனர். பின்னர் நிருபர்கள் சந்திப்பில் நயினார் நாகேந்திரன் கூறியதாவது: இளைஞர் கவின் படுகொலை செய்யப்பட்டு இருப்பது மிகவும் கண்டிக்கதகுந்தது. மிகவும் வருந்ததக்கது. இது போன்ற சம்பவங்கள் தமிழகத்தில் இனி நடைபெறாமல் இருக்க வேண்டும். அதற்காக அரசாங்கம் தனியாக ஒரு சட்டமே கொண்டு வர வேண்டும் என்று தமிழக அரசை கேட்டு கொள்கிறேன். சம்பந்தபட்ட நபர் உடனடியாக கைது செய்யப்பட வேண்டும். பாதிக்கப்பட்டவருக்கு நீதி கிடைக்க வேண்டும் என்பது என்னுடைய கோரிக்கை.

இது போன்ற நிகழ்வுகளை தடுப்பதற்கு அந்தந்த மாவட்ட எஸ்.பி., நடவடிக்கை எடுக்க வேண்டும். அரசாங்கம் கடுமையான சட்டங்களை இயற்ற வேண்டும். இவ்வாறு நயினார் நாகேந்திரன் கூறினார்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி

# ஆணவ கொலைகளுக்கு சாதி பெருமையே காரணம்

## திருமாவளவன் பேட்டி

**சென்னை, ஆக.01-**

சாதிப் பெருமைதான் ஆணவக் கொலைகளுக்கு காரணம் என்று திருமாவளவன் கூறினார்.

சென்னை விமான நிலையத்தில் வி.சி.க. தலைவரும், எம்.பி.யுமான திருமாவளவன் செய்தியாளர்களை சந்தித்தார். அப்போது அவர் பேசியதாவது; நெல்லையில் இளைஞர் கவின் ஆணவப் படுகொலை அதிர்ச்சி தருகிறது. சுர்ஜித், அவரது தாய், தந்தை ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. எப்.ஐ.ஆர்-ல் குறிப்பிடப்பட்டுள்ள நபர்களை கைது செய்வதில் காவல்துறைக்கு தயக்கம் ஏன்..? சி.பி.சி.ஐ.டி. போலீசார் நேர்மையுடன் வழக்கை விசாரிக்க வேண்டும்.

வட இந்திய மாநிலங்களில் நடக்கும் சாதிய படுகொலைகள் தென்னிந்திய மாநிலங்களிலும் அதிகரித்துள்ளது. சாதிப் பெருமைதான் ஆணவக் கொலைகளுக்கு காரணம். ஆணவக் கொலைகளை தடுக்க மத்திய அரசு தேசிய அளவில் சட்டம் இயற்ற வேண்டும்.''

இவ்வாறு அவர் கூறினார்.

# நெல்லை ஆணவக்கொலை வழக்கு: சுர்ஜித்தின் தந்தை கைது

**திருநெல்வேலி, ஆக. 01-**

கொலையான கவின் செல்வகணேஷ், கொலை செய்ததாக சரணடைந்த சுர்ஜித், சுர்ஜித்தின் தந்தை எஸ்.ஐ. சரவணனை போலீசார் கைது செய்தனர்.

நெல்லையில் ஐ.டி. ஊழியர் கவின் செல்வகணேஷ் கொல்லப்பட்ட வழக்கில் ஏற்கெனவே கைதான சுர்ஜித்தின் தந்தை காவல் உதவி ஆய்வாளர் சரவணன் கைது செய்யப்பட்டார். நெல்லை மாநகர போலீஸார் அவரைக் கைது செய்தனர். முன்னதாக நேற்று முன்தினம், கவின் செல்வகணேஷ் கொலை வழக்கை சிபிசிஐடிக்கு மாற்றி தமிழக அரசு உத்தரவிட்டது குறிப்பிடத்தக்கது. தூத்துக்குடி மாவட்டம் ஆறுமுகமங்கலம் பகுதியைச் சேர்ந்த பட்டியலின சமூக இளைஞரான மென்பொருள் பொறியாளர் கவின் செல்வகணேஷ் கடந்த 27-ம் தேதி திருநெல்வேலி கேடிசி நகரில் வைத்து வெட்டிப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்த சம்பவத்தில் இவர் காதலித்ததாக கூறப்படும் பெண்ணின் சகோதரன் சுர்ஜித் பாளையங்கோட்டை காவல் நிலையத்தில் சாரணடைந்த நிலையில் சுர்ஜித் மற்றும் அவரது பெற்றோரான சரவணன் மற்றும் கிருஷ்ணகுமாரி ஆகியோர் மீது முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டது.

தொடர்ந்து சுர்ஜித்தை பாளையங்கோட்டை போலீஸார் கைது செய்தனர். அவரது பெற்றோரான சிறப்பு காவல் படை உதவி ஆய்வாளர்கள் சரவணன், கிருஷ்ணகுமாரி ஆகிய இருவரும் பணியிடை நீக்கம் செய்யப்பட்டனர். இருப்பினும், இருவரையும் கைது செய்தால் மட்டுமே கவின் செல்வகணேஷின் உடலை வாங்குவோம் என உறவினர்கள் தொடர்ந்து போராட்டம் நடத்தி வருகின்றனர். இந்த வழக்கில் கைது செய்யப்பட்ட சுர்ஜித், குண்டர் தடுப்பு சட்டத்தில் சிறையில் அடைக்கப்பட்டார். இந்நிலையில், சுர்ஜித்தின் தந்தை எஸ்.ஐ. சரவணன் நெல்லை மாநகர போலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

# 'மை டி.வி.கே.' செயலி வழியாக 3 லட்சம் பேர் த.வெ.க.வில் இணைந்தனர்

**சென்னை, ஆக.01-**

'மை டி.வி.கே.' செயலி வழியாக நேற்று காலை வரை சுமார் 3 லட்சம் பேர் த.வெ.க.வில் இணைந்து உள்ளனர்.

த.வெ.க.வில் 2 கோடி புதிய உறுப்பினர்களை சேர்க்க இலக்கு நிர்ணயிக்கப்பட்டு உள்ளது. இதைத் தொடர்ந்து நவீன டிஜிட்டல் தொழில் நுட்பத்தில் பல்வேறு வசதிகளுடன் 'மை டி.வி.கே.' செயலி உருவாக்கப்பட்டது. பிரத்யேகமாக உருவாக்கப்பட்டுள்ள இந்த செயலியை கட்சி தலைவர் விஜய் நேற்று முன்தினம் அறிமுகம் செய்து வைத்தார்.

செயலி மூலம் 1 நொடிக்கு 18 ஆயிரம் உறுப்பினர்கள் சேர வசதி செய்யப்பட்டு உள்ளது. மேலும் தமிழகம் முழுவதும் உள்ள பூத் நிர்வாகிகளை விஜய் நேரடியாக கண்காணித்து அறிவுரை வழங்கவும் வசதிகள் உருவாக்கப்பட்டு உள்ளது. முதல் 15 நாட்களுக்கு கட்சியில் உள்ள பூத் முகவர்கள், நிர்வாகிகள் இணைவதற்கும் 15 நாட்களுக்கு பிறகு பொதுமக்கள் இணையவும் அறிவுறுத்தப்பட்டு இருந்தது.

செயலி மூலம் புதிதாக த.வெ.க.வில் இணைவதற்கு பொதுமக்களிடையே தீவிர ஆர்வம் ஏற்பட்டது. இதைத் தொடர்ந்து நேற்று முதல் பொதுமக்களும் இணைந்து கொள்ள ஏற்பாடுகள் செய்யப்பட்டது. இதையடுத்து பொதுமக்கள் பலர் 'செயலி' மூலம் கட்சியில் ஆர்வமுடன் சேர தொடங்கினர். நேற்று முன்தினம் முதல் நேற்று காலை வரை சுமார் 3 லட்சம் பேர் த.வெ.க.வில் இணைந்து உள்ளனர்.

கட்சியில் சேர்ந்தவர்களில் பெரும்பாலானோர் பெண்கள் மற்றும் இளம் தலைமுறையினர். த.வெ.க. புதிய உறுப்பினர்கள் சேர்க்கை குறித்து பொதுமக்களுக்கு மேலும் விழிப்புணர்வை ஏற்படுத்தி நேர்மையான முறையில் உறுப்பினர்களை சேர்க்க வேண்டும் என கட்சி தலைவர் விஜய் உத்தரவின் பேரில் பொதுச்செயலாளர் என்.ஆனந்த் வலியுறுத்தி வருகிறார்.

# தமிழக அரசியலில் புதிய திருப்பம்: பா.ஜ.க கூட்டணியில் இருந்து வெளியேறினார் ஓ.பி.எஸ்...!

**சென்னை, ஆக.01-**



தேசிய ஜனநாயக கூட்டணியில் இனி தொண்டர்கள் உரிமை மீட்பு குழு இடம் பெறாது என்று பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியுள்ளார்.

அ.தி.மு.க. தொண்டர்கள் உரிமை மீட்பு குழு தலைவர் ஓ.பன்னீர்செல்வம் தனது ஆதரவாளர்களுடன் நேற்று ஆலோசனையில் ஈடுபட்டார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் பா.ஜ.க. கூட்டணியில் நீடிக்கவோ, விலகவோ நிர்வாகிகளிடையே கருத்து முரண்பாடு ஏற்பட்டது. இதனால் நிர்வாகிகளிடையே வாக்குவாதம் ஏற்பட்டது. இதன் பின்னர் ஓ.பன்னீர் செல்வம் தரப்பினர் செய்தியாளர்களை சந்தித்தனர்.

அப்போது ஓ.பன்னீர் செல்வம் முன்னிலையில் பண்ருட்டி ராமச்சந்திரன் கூறியதாவது; 3 மணி நேரமாக நடைபெற்ற ஆலோசனை கூட்டம் நிறைவு பெற்றுள்ளது. ஆலோசனை கூட்டத்தில் 3 முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டுள்ளது. அதன் விபரம்;

1. தேசிய ஜனநாயக கூட்டணியில் தொஉமீகுழு இடம்பெற்றிருந்தது. ஆனால் இன்று (நேற்று) முதல் தொஉமீகுழு தனது உறவை முறித்துக்கொண்டது. தேசிய ஜனநாயக கூட்டணியில் இனி தொஉமீகுழு இடம்பெறாது.

2.ஓ.பன்னீர்செல்வம் விரைவில் தமிழகத்தின் பல்வேறு இடங்களுக்கு சுற்றுப் பயணம் மேற்கொள்கிறார்.

3.எந்த கட்சியுடனும் கூட்டணி என்பது தற்போது இல்லை. எதிர்காலத்தில் நிலைமைக்கு ஏற்ப கூட்டணி குறித்து முடிவு செய்யப்படும்.''

இவ்வாறு அவர் கூறினார்.

பா.ஜ.க. கூட்டணியில் இருந்து ஓ.பன்னீர்செல்வம் தரப்பு விலகியது தமிழக அரசியலில் புதிய திருப்பமாக பார்க்கப்படுகிறது.

## தலைவர்கள் சொல்வதை படிங்க....



இந்தியாவின் வலிமை என்னவென்றால், நாம் சீனாவைப் போல ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரம் அல்ல. நமக்கு வலுவான உள்நாட்டு சந்தை உள்ளது. நமது பேச்சுவார்த்தைக்குழுவிற்கு வலுவான ஆதரவு தேவை. நல்ல ஒப்பந்தத்திற்கு உடன்படவில்லை எனில், நாம் விலகுவது சிறந்தது.

**- சசி தரூர்**



அ.தி.மு.க.வுடன் பா.ஜ.க. கூட்டணி அமைத்து இருப்பது மிகவும் மகிழ்ச்சியாக இருக்கிறது. இந்த கூட்டணிக்கு மேலும் கட்சிகள் வருவது பற்றி அ.தி.மு.க.-பா.ஜ.க. மேலிட தலைவர்கள் பேசி முடிவு செய்வார்கள். மற்றபடி கூட்டணி விவகாரங்கள் பற்றி நான் மேலிட அனுமதி இல்லாமல் பேச இயலாது. எங்கள் கூட்டணிக்கு விஜய் வர வேண்டும்.

**- குஷ்பு**



ஜாதியும், மதமும் தான் இங்கு அரசியல் செய்கிறது. உள்துறை அமைச்சர் அமித்ஷா மதுரையில் பேசும்போது இந்திய மக்களின் ஒற்றுமை என்றுதான் பேசி இருக்க வேண்டும். அதைவிடுத்து ஒரு குறிப்பிட்ட சமயம் மதம் சார்ந்தவர்கள் மீது வெறுப்பை கொட்டுவதை தங்களது அரசியல் என இருந்தால், நாடு எப்படி சரியாக இருக்கும்.

**- சீமான்**



பா.ம.க. தலைவர் என்ற பெயரோடு அடையாளத்தோடு யார் என்ன சொன்னாலும் அதை கேட்க வேண்டாம். தலைமைக்கும், தலைவருக்கும் கட்டுப்படாமல் யார் எந்த யாத்திரை போனாலும் ஒரு துளியும் பயனில்லை.தொண்டர்களும் ஏற்க மாட்டார்கள். பொதுமக்களும் ஏற்க மாட்டார்கள்.

**- ராமதாஸ்**

# திருவொற்றியூர் மணலி மண்டலங்களில் காற்று மாசை கண்காணிக்க சென்சார்: அதிமுக கவுன்சிலர் டாக்டர் கே.கார்த்திக் கோரிக்கை



**திருவொற்றியூர் ஆக.01**

மாநகராட்சி கழிவறைகள் கட்டி பராமரிக்க தனியாருக்கு ரூ.1,243 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதில் முறைகேடுகள் நடந்திருப்பதாக அதிமுக குற்றம் சாட்டியுள்ளது. சென்னை மாநகராட்சி மன்ற கூட்டம் முடிந்தபின் அதிமுக மாமன்ற குழு செயலாளர் டாக்டர் கே.கார்த்திக் பத்திரிகையாளர்களிடம் கூறியதாவது:-

சென்னை மாநகராட்சி சார்பில் கழிவறைகள் கட்டி அதை பராமரிக்க தனியாருக்கு ரூ.1,243 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது இதில் 430 கோடி ரூபாய் செலவு செய்யப்பட்டுள்ளதாக கூறப்படுகிறது கடந்த இரண்டு ஆண்டுகளாக இந்த பணி நடைபெற்று வருகிறது. இதில் பல முறைகேடுகள் நடந்துள்ளதாக செய்திகள் வந்துள்ளன.

இதுகுறித்து விரிவான அறிக்கை மாநகராட்சி தரவேண்டும் மேலும் ஏற்கனவே சென்னை மாநகரில் பல்வேறு சாலைகள் அமைக்க திட்டங்கள் தீட்டப்பட்டு டெண்டர் விடப்பட்டத ஆனால் போடப்படவில்லை தற்போது 100 கோடி ரூபாய் செலவில் மீண்டும் சாலைகள் போடுவதற்கு மன்றத்தில் தீர்மானம் வைக்கப்பட்டுள்ளது.

முதலில் ஏற்கனவே டெண்;டர் விட்ட சாலைகளை போட வேண்டும் மாநகராட்சி சார்பில் சென்னை நகர் முழுவதும் 75 இடங்களில் காற்று மாசுவை கண்காணிக்க சென்சார்கள் அமைக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

வடசென்னையில் திருவொற்றியூர் மணலி மண்டலத்தில் இது போன்ற கருவியை அதிக அளவில் அமைக்க வேண்டும்;. மேலும் காற்று மாசு அதிகம் உள்ள பகுதிகளில் இதற்காக என்ன நடவடிக்கை எடுக்கப்படும் என்ற விவரங்கள் இல்லை டெல்லியில் காற்று மாசு ஏற்பட்டது போன்ற நிலை ஏற்படுவதற்கு முன் தக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். இவ்வாறு டாக்டர் கே.கார்த்திக் கூறினார்.

# எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்த போது தான், தமிழகத்தில் நீட் தேர்வை ஒன்றிய பாஜக அரசு கொண்டு வந்தது: அமைச்சர் மா.சுப்பிரமணியன் பேட்டி



**சென்னை,ஆக.01**

அமைச்சர்.மா.சுப்பிரமணியன் சென்னை, ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை கூட்டரங்கில், 2025-26 ஆம் ஆண்டிற்கான மருத்துவம் மற்றும் பல் மருத்துவம், அரசு பள்ளி மாணவர்களுக்கான 7.5% உள் ஒதுக்கீடு, சிறப்பு பிரிவு ஒதுக்கீடு ஆணைகளை வழங்கினார்கள். பிறகு அமைச்சர் செய்தியாளர்களிடம் தெரிவித்ததாவது:-

மருத்துவக் கலந்தாய்வில் அரசு பள்ளியில் பயின்ற மாணவர்களுக்கான 7.5 சதவிகித சிறப்பு உள் ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கும் நிகழ்ச்சி இன்று நடைபெற்றது. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் வழிகாட்டுதலோடு, இந்த அரசு பொறுப்பேற்றதற்கு பிறகு ஒவ்வொரு ஆண்டும் கலந்தாய்வு நடத்தி 7.5% சிறப்பு உள் ஒதுக்கீடு பிரிவு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டு வருகிறது. அந்தவகையில் இந்தாண்டு 494 எம்பிபிஎஸ் இடங்களுக்கும், 119 பல் மருத்துவ இடங்களுக்கும் ஆக மொத்தம் 613 இடங்களுக்கு கலந்தாய்வு நடத்தப்பட்டு மாணவர்கள் தேர்வு செய்யப்பட்டு அவர்கள் அனைவருக்கும் தற்போது ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டுள்ளது. இந்த 613 மாணவர்களின் குடும்பத்தினரும் ஏறத்தாழ 4000க்கும் மேற்பட்டோர் வருகை புரிந்து ஆணைகளை பெற்றுச் சென்றிருக்கிறார்கள். கலந்தாய்வில் கலந்து கொள்ள வந்த அனைவருக்கும் துறையின் சார்பில் உணவு போன்ற பல்வேறு வசதிகள் செய்து தரப்பட்டுள்ளது. அதோடு மட்டுமல்லாமல் இந்த கலந்தாய்வில் மாற்றுத்திறனாளிகள் அவர்களுக்கான ஒதுக்கீட்டு ஆணைகளும் தரப்பட்டிருக்கிறது. விளையாட்டுத்துறையில் சிறந்து விளங்கும் மாணவ, மாணவிகளுக்கு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது. முன்னாள் இராணுவப் பிரிவைச் சார்ந்த 11 பேருக்கும் ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது. ஆக மொத்தம் 699 மாணவ, மாணவிகளுக்கு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது.

முதலமைச்சர் அவர்கள் 7.5% இடஒதுக்கீட்டை சட்டப்பூர்வமாக கொண்டு வந்து கடந்த 4.5 ஆண்டுகளாக சிறப்பு பிரிவு ஒதுக்கீட்டு ஆணைகளை வழங்கிக் கொண்டிருக்கிறார்கள். இதோடுமட்டுமல்லாமல் இந்த மாணவர்களுக்கு கல்விக்கட்டணம், விடுதிக் கட்டணம், உணவுக்கட்டணம் உட்பட அனைத்துக் கட்டணங்களும் தமிழ்நாடு அரசே பொறுப்பேற்று முழுவதும் இலவசமாக இவர்களுக்கு ஒதுக்கீட்டு ஆணைகள் வழங்கப்பட்டிருக்கிறது. இதோடுமட்டுமல்லாமல் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் பொறியியல், வேளாண்மை, கால்நடை மருத்துவம், மீன்வளம், சட்டம் போன்ற தொழில்முறை படிப்புகளுக்கு 7.5% இடஒதுக்கீட்டை தொடர்ந்து செயல்படுத்தி இந்தியாவிலேயே தமிழ்நாடு முன்மாதிரி மாநிலமாக செயல்படுத்திக் கொண்டிருக்கிறது.

நீட் தேர்விற்கு விலக்கு தரவேண்டும் என்று மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நீண்ட காலமாக சட்ட ரீதியாக போராட்டிக் கொண்டிருக்கிறார்கள். சட்ட பூர்வமான போராட்டம் மட்டுமல்ல தொடர்ந்து அனைத்து வகையான போராட்டங்களை நடத்தி நீட் தேர்விலிருந்து விலக்கு குறித்த நடவடிக்கைகளை செய்து கொண்டு இருக்கிறார்கள். தேர்வு எழுதும் அனைவரும் மிகவும் சிரமப்பட்டு தான் தேர்வு எழுதி வருகிறார்கள்.

தமிழ்நாடு அரசின் சார்பில் அவர்களுக்கான அந்த பயிற்றுவித்தல் மையங்களையும் அரசே இலவசமாக நடத்தி வருகிறது. தனியார் மையங்களில் சென்று படித்தால் இலட்சக்கணக்கில் செலவாகும் என்பதையும் தாண்டி இலவச பயிற்சி மையங்கள் நடத்தப்பட்டு அதன் மூலமாவும் பயிற்சி பெறுகிறார்கள். நீட் தேர்விற்கு விலக்கு என்பது தான் நமது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் முதல் குறிக்கோள் ஆகும்.

நீட் தேர்வை கொண்டு வந்தது ஒன்றிய அரசு, அதனால் ஒன்றிய அரசு பிரதிநிதிகள் தமிழ்நாடு வரும் போது அவர்களிடம் பத்திரிக்கையாளர்களாகிய நீங்கள் கேட்க வேண்டும், நீட் தேர்விற்கு எப்போது விலக்கு பெற்றுத்தரப்படும் என்று. நீட் தேர்வு இங்கு வருவதற்கு காரணமாக இருந்த எடப்பாடி பழனிசாமி அவர்களை பார்த்து கேட்க வேண்டும். ஆனாலும் தமிழ்நாடு அரசு நீட் தேர்வு விலக்கிற்கு சட்டப்பூர்வமான நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது.

நீட் தேர்வு விலக்கு நீதிபதி இராஜன் தலைமையில் கமிட்டி அமைக்கப்பட்டு தீர்மானங்கள் நிறைவேற்றியது, அதையும் கவர்னர் அவர்கள் ஒப்புதல் தராமல் இருந்தது போன்ற அதன்பிறகு பல்வேறு போராட்டங்களுக்கு பிறகு ஆளுநர் குடியரசுத் தலைவர் அவர்களுக்கு அனுப்பியது, குடியரசு தலைவர் அவர்கள் உள்துறை அமைச்சகத்திற்கு அனுப்பி, உள்துறை அமைச்சகம் வாயிலாக தமிழ்நாடு உயர்கல்வித்துறை, மக்கள் நல்வாழ்வுத்துறை, ஆயுஷ் நிர்வாகம், தொடர்ச்சியாக பல்வேறு விளக்கங்கள் கேட்டு 7 முறை தெளிவுரைகள் கேட்டு, சட்ட வல்லுநர்கள் மூலம் ஒவ்வொரு முறையும் அதற்கான விளக்கங்கள் தொடர்ந்து வழங்கி வருகிறோம். இத்தகைய நீட் விலக்கு நெடும்பயணம் தொடர்கிறது.

நீட் தேர்வு என்பது 2017 ஆம் ஆண்டு எடப்பாடி பழனிச்சாமி முதலமைச்சராக இருந்தபோது மட்டும்தான் கொண்டு வரப்பட்டது. அவருக்கு முன்பு அம்மையார் ஜெயலலிதா முதல்வராக இருந்தபோது கொண்டு வரப்படவில்லை. அதற்கு முன்பு கலைஞர் முதலமைச்சராக இருந்தார் அப்போதும் கொண்டு வரப்படவில்லை. எடப்பாடி பழனிச்சாமி ஒன்றிய அரசிடம் இணக்கமாக இருந்தபோது இந்த சட்டத்தை கொண்டு வர ஒப்புதல் வழங்கினார். மேலும் சட்டமன்றத்தில் அனைத்துக் கட்சிகளும் குரல் கொடுத்த பிறகு 7.5% என்பது கொண்டு வரப்பட்டது. இந்த இடஒதுக்கீடு அனைத்துக் கட்சித் தலைவர்களின் ஒப்புதலுடன் கொண்டு வரப்பட்டது. இந்த இடஒதுக்கீட்டு சட்ட மசோதாவிற்கு ஆளுநர் அவர்கள் ஒப்புதல் தராமல் இருந்து, பிறகு இன்றைய முதலமைச்சர் அவர்களின் தலைமையில் ஆளுநர் மாளிகை முன்பு மிகப் பெரிய அளவில் போராட்டம் நடத்தி பெரிய மக்கள் போராட்டங்கள் நடத்தப்பட்டது. பிறகு தான் 7.5% இடஒதுக்கீட்டு சட்டம் கொண்டு வரப்பட்டது என்றார்.

இந்நிகழ்வில் மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத் துறை அரசு முதன்மைச் செயலாளர் முனைவர் ப.செந்தில்குமார், மருத்துவக்கல்வி மற்றும் ஆராய்ச்சி இயக்குநர் (பொ) மரு.தேரணிராஜன், தமிழ்நாடு அரசு பன்னோக்கு உயர்சிறப்பு மருத்துவமனை இயக்குநர் மரு.மணி, துணை இயக்குநர்கள் மரு.சுகந்தி, மரு.சாந்தினி, மரு.ஷீபா மற்றும் உயரலுவலர்கள் உடனிருந்தனர்.

# சென்னையில் 24 போலீசார் ஓய்வு: கமிஷ்னர் ஆ.அருண் பாராட்டி சான்றிதழ்கள் வழங்கினார்



**சென்னை ஆக 01-**

சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற 24 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்களின் பணி நிறைவு விழாவில், சென்னை பெருநகர காவல் ஆணையாளர் கலந்து கொண்டு காவல் துறையினரின் பணியை பாராட்டி சான்றிதழ்கள் வழங்கினார். சென்னை பெருநகர காவல், 14 காவல் உதவி ஆய்வாளர்கள் மற்றும் 10 சிறப்பு உதவி ஆய்வாளர்கள் என மொத்தம் 24 காவல் அதிகாரிகள் மற்றும் ஆளிநர்கள் நேற்றுடன் பணி ஓய்வு பெறுகின்றனர். சென்னை பெருநகர காவல் ஆணையர் ஆ.அருண், நேற்று வேப்பேரி, சென்னை பெருநகர காவல் ஆணையரகத்தில் நடைபெற்ற பணி நிறைவு விழாவில், சென்னை பெருநகர காவலில் பணிபுரிந்து நேற்று ஓய்வு பெறுகின்ற 24 காவல் துறையினர், சுமார் 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறப்பாக பணிபுரிந்ததை பாராட்டி, தமிழக காவல்துறைக்கும், சென்னை பெருநகர காவல்துறைக்கும் பெருமை சேர்த்ததை நினைவு கூர்ந்து, சால்வை மற்றும் மாலை அணிவித்து பாராட்டி, சான்றிதழ்கள் வழங்கினார்கள்.

காவல் ஆணையர் அவர்கள், ஓய்வு பெறுகின்ற காவல் குடும்பத்தினரிடம், காவல்துறைக்கு ஒத்துழைப்பு அளித்தமைக்காக நன்றி தெரிவித்தும், பணி ஓய்வு பெறுகின்ற காவல் அதிகாரிகள், அலுவலர்கள் தங்களது உடல் நலத்தையும், குடும்பத்தையும் பேணி காக்க வேண்டும் என அறிவுறுத்தினார்.

இந்நிகழ்ச்சியில் சென்னை பெருநகர காவல் கூடுதல் ஆணையர் (தலைமையிடம்), விஜயேந்திர பிதாரி, துணை ஆணையர்கள் .ஹரிகிரண் பிரசாத், ஜி.சுப்புலட்சுமி, காவல் அதிகாரிகள் மற்றும் ஓய்வு பெறுகின்ற காவல் அலுவலர்களின் குடும்பத்தினர் கலந்து கொண்டனர்.



வடசென்னையில் சுகம் மருத்துவமனை நிர்வாகம் சார்பில் தலைமை இயக்குனர்கள் டாக்டர் டி.பி.டி சத்தியகுமார், ஷீலா சத்யகுமார் ஆகியோர் திருவொற்றியூர் 7வது வட்டத்தில் உள்ள பூக்கடைநடத்தும் பெண்ணுக்கு அதிமுக மாமன்ற கவுன்சிலர் டாக்டர் கே.கார்த்திக் நிழற்குடைவழங்கினார். அவருடன் வட்ட செயலாளர் எம்.கண்ணன் முன்னாள்செயலாளர் எஸ். ஸ்டீபன் உட்பட பலர் உடனிருந்தனர்.



மதுரவாயல் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட போரூரில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாம் நிகழ்ச்சியில் காரம்பாக்கம் க.கணபதி எம்.எல்.ஏ பயனாளிகளுக்கு நலத்திட்டங்களை வழங்கினார். உடன் மண்டலக் குழுத் தலைவர் நொளம்பூர் வே.ராஜன், மாமன்ற உறுப்பினர்கள் ச.சங்கர்கணேஷ்,கே.ராஜு,ஹேமலதாகணபதி,சாந்தி ராமலிங்கம், தலைமை செயற்குழு உறுப்பினர் எஸ்.அருணாசலம் உள்ளனர்.

# ராஜீவ் காந்தி சாலையில் போக்குவரத்து மாற்றம்: காவல்துறை அறிவிப்பு

**சென்னை ஆக 01-**

போக்குவரத்து நெரிசலை குறைக்கும் வகையில் ராஜிவ் காந்தி சாலையில் இன்று (1ம் தேதி) காலை 8 மணி முதல் 11 மணி வரை போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டுள்ளது. இதுகுறித்து போக்குவரத்து காவல்துறை வெளியிட்ட அறிக்கையில் கூறியிருப்பதாவது:- ராஜிவ் காந்தி சாலையின் மத்திய கைலாஷ் சந்திப்பிலிருந்து டைடல் பார்க் சந்திப்பு வரையிலான மேம்பால கட்டுமானப் பணிக்காக அச்சாலையின் அகலம் குறைக்கப்பட்டுள்ளது. இதன் காரணமாக காலை நேரங்களில் ராஜிவ் காந்தி சாலையில் போக்குவரத்து நெரிசல் நிலவுகிறது. எனவே, காலை நேரங்களில் (8.30 மணி முதல் 11 மணி வரை) போக்குவரத்து நெரிசலைக் குறைக்க, பின்வரும் போக்குவரத்து மாற்றம் செய்யப்படுகிறது. தற்போதுள்ள போக்குவரத்து பாதைக்கு கூடுதலாக, மத்திய கைலாஷ் சந்திப்பிலிருந்து டைடல் பூங்கா நோக்கி செல்லும் வாகனங்கள், 'எதிர் பாதையின்' ஒரு பகுதி சாலையான (டைடல் பூங்காவிலிருந்து மத்திய கைலாஷ் வரை) பயன்படுத்தி வி.ஹெச்.எஸ் மருத்துவமனைக்கு அருகிலுள்ள யு-டர்ன் வரை சுமார் 300 மீட்டர் தூரம் செல்ல அனுமதிக்கப்படும். இந்த போக்குவரத்து ஏற்பாடு இன்று (1ம்தேதி) காலை 8.30 மணி முதல் காலை 11 மணி வரை மட்டுமே செயல்படுத்தப்படும். வாகன ஓட்டிகள் ஒத்துழைப்பு வழங்க வேண்டும்.

# ரூ.205.64 கோடி மதிப்பில் பசுமை பத்திரங்கள்: சென்னை மாநகராட்சி வெளியிடுகிறது

**சென்னை ஆக 01-**

சென்னை மாநகராட்சி,முதல் முறையாக ரூ.205.64 கோடி மதிப்பில் பசுமை பத்திரங்களை வெளியிடுகிறது. பசுமை பத்திரங்கள் என்பவை சுற்றுச்சூழலுக்கு உகந்த திட்டங்களுக்கு நிதி திரட்ட பயன்படும் முதலீட்டு வழிமுறைகள்.

இவை மரம் நடுதல், மறுசுழற்சி, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி போன்ற திட்டங்களுக்கு பணத்தை திரட்ட உதவுகின்றன. முதலீட்டாளர்கள் இந்த பத்திரங்களை வாங்கி, வட்டியுடன் தங்கள் பணத்தை திரும்பப் பெறுவார்கள்.இவை சுற்றுச்சூழலை பாதுகாக்கவும், நகரங்களை மேம்படுத்தவும் உதவுகின்றன.

சென்னை மாநகராட்சி முதன்முறையாக ரூ.205.64 கோடி மதிப்பில் பசுமை பத்திரங்களை வெளியிடுகிறது. இந்தப் பணம் கொடுங்கையூர் குப்பை மேட்டில் 252 ஏக்கர் நிலத்தை மீட்கும் பயோமைனிங் திட்டத்திற்கு பயன்படும். மொத்த திட்டச் செலவு ரூ.640.83 கோடி. இதில் மாநகராட்சியின் பங்கு ரூ.385.64 கோடி. இதில் ரூ.205.64 கோடி பசுமை பத்திரங்கள் மூலமும், ரூ.180 கோடி ஜெர்மனியின் கேஎப் டபுள்யூ வங்கி கடன் மூலமும் திரட்டப்படும்.பசுமை பத்திரங்கள் மற்ற நகரங்களில் பெரிய வெற்றி பெற்றுள்ளன.

இந்தூர் (5.91 மடங்கு), பிம்ப்ரி-சின்ச்வாட் (5.13 மடங்கு) ஆகியவை பசுமை பத்திரங்களுக்கு பெரும் வரவேற்பை பெற்றதால், சென்னையிலும் ஆர்வம் இருக்கும் என மாநகராட்சி எதிர்பார்க்கிறது.

இது மாநகராட்சியின் இரண்டாவது பத்திர வெளியீடு, முதல் பசுமை பத்திரம். அம்ரூத் 2.0 திட்டத்தில் ரூ.100 கோடிக்கு ரூ.10 கோடி ஊக்கத்தொகை கிடைக்கும். இத்திட்டம் மாநில அரசின் ஒப்புதலுக்கு விரைவில் சமர்ப்பிக்கப்படும். முன்னதாக, மே மாதம் ரூ.200 கோடி பத்திரங்கள் 7.97% வட்டியில் 10 ஆண்டுகளுக்கு வெற்றிகரமாக வெளியிடப்பட்டன.

# லோடு ஆட்டோ உரிமையாளரை தாக்கி, கண்ணாடி உடைப்பு: ஒருவர் கைது

**சென்னை ஆக 01-**

சென்னை, வியாசர்பாடி, பி.வி காலணி 29வது தெருவில் வசித்து வரும் ஆரோக்கியசாமி, என்பவர் செங்கல், மணல், சிமெண்ட் ஆகிய கட்டுமான பொருள் கடை வைத்து நடத்தி வருவதாகவும், இவருக்கு சொந்தமான லோடு ஆட்டோவை கடந்த 29.07.2025 அன்று இரவு வழக்கமக நிறுத்தும் இடத்தில் நிறுத்திவிட்டு, சிறிது நேரம் கழித்து வந்து பார்த்தபோது, அவரது லோடு ஆட்டோ அருகே 3பேர் நின்று கொண்டு ஆட்டோவில தாளம் தட்டி கொண்டிருந்தபோது, ஏன் இவ்வாறு செய்கிறீர்கள் என கேட்டதாகவும், 3 பேர்களில் ஒருவர் தன்னை தகாத வார்த்தைகளால் பேசி கையால் தாக்கியதாகவும், மற்ற 2 பேர் அவரை தடுத்தும், அந்த நபர் கீழே இருந்த கல்லை எடுத்து ஆட்டோவின் கண்ணாடியை உடைத்துவிட்டு, கொலை மிரட்டல் விடுத்து சென்றதாகவும், தன்னை தாக்கி, தனது ஆட்டோவை சேதப்படுத்திய நபர் மீது நடவடிக்கை எடுக்கும்படி, ஆரோக்கியசாமி எம்.கே.பி. நகர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் வழக்குப் பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர். எம்.கே.பி நகர் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து, மேற்படி குற்ற சம்பவத்தில் ஈடுபட்ட எதிரி பிரவீன்குமார், என்பவரை கைது செய்தனர். விசாரணையில் எதிரி பிரவீன்குமார் மீது ஏற்கனவே 6 குற்ற வழக்குகள் உள்ளது தெரியவந்தது. கைது செய்யப்பட்ட எதிரி பிரவீன் குமார் நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார்.

# வங்கியில் கடன் பெற்று தருவதாக கூறி ரூ.16 லட்சம் பணம் பெற்று மோசடி செய்த இருவர் கைது

**சென்னைஆக் 01**

சென்னை, கீழ்பாக்கம், பூந்தமல்லி நெடுஞ்சாலையில் வசித்து வரும் அழகுபாண்டியன், என்பவர் தனியார் நிறுவனத்தின் கீழ்பாக்கம் பகுதி விநியோகஸ்தராக உள்ளதாகவும், முகநூல் மூலம் அறிமுகமான கீர்த்தனா மற்றும் அவரது கணவர் பிரபு இன்பதாஸ் ஆகியோர் தனது தொழில் அபிவிருத்திக்காக அவருக்கு தெரிந்த செல்வாக்கு மிகுந்த நபரிடம் கூறி கடன் பெற்று தருவதாகவும் கூறியதன்பேரில், இதனை நம்பிய அழகுபாண்டியன் அக்டோபர் 2023ம் ஆண்டு முதல் 2024ம் ஆண்டு மே வரை பல தவணைகளாக மொத்தம் ரூ.16 இலட்சம் பணத்தை வங்கி மூலம் அனுப்பியதாகவும், ஆனால் சுமார் ஒரு வருடமாக கடன் பெற்று தராமல் காலம் தாழ்த்தி வந்த நிலையில், கடந்த 3 மாதங்களாக இருவரும் செல்போனை எடுக்காமல் இருந்ததால், அவர்கள் வசித்து வந்த முடிச்சூருக்கு சென்று பார்த்தபோது, இருவரும் தலைமறைவான தாகவும், மேற்கண்ட இருவர் மீதும் நடவடிக்கை எடுத்து தனது பணத்தை திரும்ப பெற்று தருமாறும், அழகுபாண்டியன் G-3 கீழ்பாக்கம் காவல் நிலையத்தில் புகார் கொடுத்ததின்பேரில், போலீசார் மோசடி பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து விசாரணை மேற்கொண்டனர்.

கீழ்பாக்கம் காவல் நிலைய குற்றப்பிரிவு ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை செய்து மேற்படி மோசடியில் ஈடுபட்ட பிரபு இன்பதாஸ் வரதராஜபுரம், முடிச்சூர், சென்னை மற்றும் இவரது மனைவி கீர்த்தனா, இன்பதாஸ் ஆகிய இருவரை கைது செய்தனர்.கைது செய்யப்பட்டவர்கள் இருவரும் சிறையில் அடைக்கப்பட்டனர்.

# புளியந்தோப்பு, கொடுங்கையூரில் ரவுடிகள் 3 பேர் கைது

**சென்னை ஆக 01-**

சென்னை வியாசர்பாடி பி.வி.காலனி பகுதியை சேர்ந்தவர் ஆரோக்கியசாமி (40). இவர் மணல், ஜல்லி கடை நடத்தி வருகிறார். நேற்றுமுன்தினம் மாலை பி.வி.காலனி 29வது தெருவில் தனது ஆட்டோவை நிறுத்தி வைத்திருந்தார். அப்போது குடிபோதையில் கூட்செட் மெயின் ரோடு பகுதியை சேர்ந்த பிரவீன்குமார் (23) என்பவர் ஆட்டோ கண்ணாடியை உடைத்துவிட்டு ஆரோக்கியசாமிக்கு கொலை மிரட்டல் விடுத்து சென்றுள்ளார். இதுபற்றி ஆரோக்கியசாமி கொடுத்த புகாரின்படி, எம்கேபி.நகர் போலீசார் வழக்குபதிவு செய்து பிரவீன் குமாரை கைது செய்து சிறையில் அடைத்தனர். கொடுங்கையூர் லட்சுமிஅம்மன் கோயில் தெருவை சேர்ந்தவர் சீனிவாசன் (37). இவர் நேற்றுமுன்தினம் கொடுங்கையூர் மணலி சாலை திருவள்ளுவர் சாலை சந்திப்பில் நின்றிருந்தபோது குடிபோதையில் தகராறில் ஈடுபட்ட ரவுடி ஒருவர் கண்ணாடியால் சீனிவாசனை குத்தியதில் படுகாயம் அடைந்தார். இதுகுறித்து புகாரின்படி, கொடுங்கையூர் போலீசார் விசாரணை நடத்தி ரவுடி அரவிந்த்தை (28) கைது செய்தனர்.புளியந்தோப்பு திக்காகுளம் பகுதியை சேர்ந்தவர் பிரேம் (24). இவர் வங்கியில் பணியாற்றுகிறார். இவர் நேற்று முன்தினம் இரவு பைக்கில் சென்றபோது 2 பேர் மறித்து கத்தியால் பிரேம் தலையில் வெட்டிவிட்டு தப்பினர். இதில் காயம் அடைந்த பிரேம், ராஜீவ்காந்தி அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெறுகின்றார்.இதுகுறித்து புளியந்தோப்பு போலீசார் வழக்குபதிவு செய்து பட்டாளம் தேவராஜ் தெருவை சேர்ந்த மகேஷை (19) கைது செய்தனர். ஒருவரை தேடி வருகின்றனர்.

# கோயம்பேடு பகுதியில் மனைவி கொலை வழக்கில் கணவர் கைது

**சென்னை ஆக 01-**

சென்னை, அரும்பாக்கம், ஜெய் நகர் 3வது தெருவில் அருள்மணி, என்பவர் கணவர் ராதாகிருஷ்ணன் மற்றும் 2 மகன்களுடன் வசித்து வந்தார். அருள்மணி மகளிர் விடுதியிலும், கணவர் ராதாகிருஷ்ணன் டீ மாஸ்டராகவும் வேலை செய்து வந்த நிலையில், ராதாகிருஷ்ணன் அடிக்கடி மது அருந்திவிட்டு, மனைவி அருள்மணியிடம் தகராறு செய்து வந்துள்ளார். இந்நிலையில், நேற்று முன் தினம் இரவு, ராதா கிருஷ்ணனுக்கும், அருள்மணிக்கும் வாக்குவாதம் ஏற்பட்டபோது, வாக்குவாதம் முற்றிய நிலையில், ராதாகிருஷ்ணன் தகாத வார்த்தைகளால் பேசி, ஆத்திரத்தில் அருள்மணியின் கன்னத்தில் அறைந்தபோது, அருள்மணி மயக்கமடைந்து வலிப்பு ஏற்பட்டு கீழே விழுந்துள்ளார். உடனே அருள்மணியை, 108 ஆம்புலன்ஸ் மூலம் கீழ்ப்பாக்கம் மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றபோது, அவரை பரிசோதனை செய்த மருத்துவர்கள் அருள்மணி ஏற்கனவே இறந்துவிட்டதாக தெரிவித்தனர். இது குறித்து அருள்மணியின் மகன், கோயம்பேடு சி.எம்.பி.டி. காவல் நிலையத்தில் கொடுத்த புகாரின் மீது போலீசார் கொலையாகாத மரணம் உள்ளிட்ட பிரிவுகளில் வழக்குப்பதிவு செய்து ராதாகிருஷ்ணன், என்பவரை கைது செய்தனர்.

# நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட குற்றவாளி கைது

**சென்னை ஆக் 01-**

2021ம் ஆண்டு, வடபழனி காவல் நிலையத்தில் பதிவான வழக்கில் எதிரி ரோசாரியகுமார் (எ) சின்னா (எ) சின்னராசு, என்பவர் கைது செய்யப்பட்டு, நீதிமன்றக் காவலுக்கு உட்படுத்தப்பட்டார். பின்னர் நீதிமன்ற பிணையில் வெளியே சென்ற எதிரி ரோசாரியாகுமார், சென்னை, 4வது கூடுதல் அமர்வு நீதிமன்றத்தில் வழக்கு விசாரணைக்கு தொடர்ந்து ஆஜராகாமல் தலைமறைவாக இருந்த காரணத்தினால் எதிரி ரோசாரியாகுமாரை கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர் செய்ய கடந்த 27. ந் தேதி அன்று நீதிமன்றம் பிடியாணை பிறப்பித்தது

**விசாரணை**

வடபழனி காவல் காவல் நிலைய ஆய்வாளர் தலைமையிலான காவல் குழுவினர் தீவிர விசாரணை மற்றும் தேடுதலில் ஈடுபட்டு, மேற்கண்ட நீதிமன்ற பிடியாணை பிறப்பிக்கப்பட்ட எதிரி ரோசாரியகுமார் (எ) சின்னா (எ) சின்னராசு, என்வரை கைது செய்து விசாரணை செய்தனர்.

# மேல்மலையனூர் ஒன்றியம் எய்யில் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்

## செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ. தொடங்கி வைத்தார்



**செஞ்சி ஆக.-01,**
விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் ஒன்றியம் எய்யில் ஊராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்டம்முகாம் நடைபெற்றது.

நிகழ்ச்சிக்கு மாவட்ட கவுன்சிலர்கள் சாந்தி சுப்பரமணியன், செல்வி ராமசரவணன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.எய்யில் ஊராட்சி மன்ற தலைவர் வான்மதி உதயக்குமார் அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் முன்னாள் அமைச்சர் செஞ்சி மஸ்தான் எம்.எல்.ஏ கலந்துகொண்டு உங்களுடன் ஸ்டாலின்திட்டத்தினை தொடங்கி வைத்து பொதுமக்களிடமிருந்து வரப்பெற்ற கோரிக்கை மனுக்களைப் பெற்று கணினி மூலம் பதிவு செய்வதற்கு அவர் அறிவுறுத்தினார்.முகாமில் பெறப்பட்ட மனுக்களுக்கு உடனடியாக தீர்வு காண வேண்டுமென அவர் அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

முன்னதாக மருத்துவம் மற்றும் நல்வாழ்வுத்துறை மூலம்மேல்மலையனூர்ஆரம்ப சுகாதார மருத்துவமனை சார்பில் கர்ப்பிணி பெண்களுக்கு ஊட்டச்சத்துடன் கூடியபெட்டகத்தினையும்,ரத்த அழுத்தம்,நீரழிவு நோய் பாதிக்கப்பட்ட நபர்களுக்கு மக்களை தேடி மருத்துவம் திட்டத்தின் கீழ் மருந்து மாத்திரைகள் அடங்கிய பெட்டகத்தினைஅவர் வழங்கினார்.முகாமில் எய்யில், சங்கிலிகுப்பம், நாரணமங்கலம் ஆகிய ஊராட்சிகளில் இருந்து ஏராளமான பொதுமக்கள் முகாமில் கலந்து கொண்டு கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, முதியோர் ஓய்வூதியம், இலவச வீட்டு மனை பட்டா, குடும்ப அட்டை கேட்டு மனு செய்தனர்.

நிகழ்ச்சியில் ஒன்றிய துணை சேர்மன் விஜயலட்சுமி முருகன், ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் வெங்கடேசன், முகம் கண்காணிப்பாளரும், உதவி செயற்பொறியாளர் முகமது யாசின், ஒன்றிய குழு உறுப்பினர்கள், ஊராட்சி மன்ற தலைவர்கள். உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள்,திமுக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.வட்டார வளர்ச்சி அலுவலர் ஜெயசங்கர் அனைவருக்கும் நன்றி கூறினார்.

# அவலூர்பேட்டையில் காவல்துறை சார்பில் கண்காணிப்பு கேமரா அமைப்பு: எஸ்.பி.சரவணன் துவக்கி வைத்தார்



**செஞ்சி ஆக-01,**
விழுப்புரம் மாவட்டம் மேல்மலையனூர் வட்டம் அவ லூர் பேட் டை யில் காவல்துறை சார்பில் கண்காணிப்பு கேமரா துவக்க விழா மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி சரவணன் சிறப்புரையாற்றி துவக்கி வைத்தார்.

செஞ்சி காவல்துறை துணை கண்காணிப்பாளர் மனோகரன், பாரத ஸ்டேட் வங்கி மண்டல மேலாளர் சிஜவகர், அவலூர்பேட்டை காவல் உதவி ஆய்வாளர் சுந்தர்ராஜன், ஆகியோர்முன்னிலை வகித்தார்.

வளத்தி காவல் ஆய்வாளர் சுரேஷ்பாபு அனைவரையும் வரவேற்றார்.

நிகழ்ச்சியில் அவலூர் பேட்டை ஊராட்சி சுற்றி54 பொருத்தப்பட்டு அதற்கான திறப்பு விழாவை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் பி.சரவணன், துவக்கி வைத்தார் நிகழ்ச்சியில் ஊராட்சி மன்ற தலைவர் ஆர். எஸ். செல்வம், ஒன்றியகவுன்சிலர் ஷாஹீன் ஹர்ஷத், முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர்கள் கலா ராஜ வேலாயுதம், பழனி, வார்டு உறுப்பினர் ஜான், ஸ்டேட் பேங்க் மேலாளர் சம்பத்குமார், சிறப்பு உதவி ஆய்வாளர் கேசவன் தனிப்பிரிவு தலைமை காவலர் முனுசாமி, மற்றும் மக்கள் பிரதிநிதிகள் வர்த்தக சங்க உறுப்பினர்கள் அரிமா சங்க உறுப்பினர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

வடக்கு மாவட்ட விசிக சார்பில்

# மதசார்பின்மை காப்போம் பேரணியின் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம்



**செஞ்சி ஆக.01,**
விழுப்புரம் மாவட்டம் செஞ்சியில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் விழுப்புரம் வடக்கு மாவட்டம் சார்பில் வடக்கு மாவட்ட செயலாளர் அ.ஏ.தனஞ்செழியன் தலைமையில் திருச்சியில் நடைபெற்ற மதசார்பின்மை காப்போம் பேரணியின் தீர்மான விளக்கப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

இதில் செஞ்சி நகர துணை செயலாளர் தலித் மகிழ்வரசு வரவேற்புரை ஆற்றினார்

ஒன்றிய செயலாளர்கள் ராசாராமன், தவசீலன், திருநாவுக்கரசு, கிருஷ்ணன், குணபாலன், ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த நிகழ்வில் விசிக செய்யூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் பனையூர் மு.பாபு, செஞ்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் செஞ்சி கே.எஸ்.மஸ்தான், விசிக தேர்தல் பணிக்கு மாநில செயலாளர் குணவழகன் ஆகியோர் கலந்து கொண்டு தீர்மான விளக்க உரை ஆற்றினார்கள்.

மேலும் அரசு ஊழியர் ஐக்கிய பேரவை மாநில செயலாளர் கடலூர் பாவாணன், தமிழ்நாடு காங்கிரஸ் கமிட்டி மாநிலத் துணைத் தலைவர் வழக்கறிஞர் ரங்க பூபதி, மனிதநேய மக்கள் கட்சியின் மாநில பொதுக் குழு உறுப்பினர் சையத் உஸ்மான், விசிக மண்டல செயலாளர் செல்வம், அம்பேத்கர் மக்கள் கட்சி தலைவர் வழக்கறிஞர் மழைமேணிபாண்டியன், தமிழக வாழ்வுரிமைக் கட்சியின் செஞ்சி தொகுதி பொறுப்பாளர் ராசநாயகன் உள்ளிட்ட இந்தியா கூட்டணி கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டு கருத்துரை வழங்கினார்கள்.

இந்த நிகழ்வில் விசிக மாநில துணை செயலாளர் துரைவளவன், இனியவளவன், மாவட்ட அமைப்பாளர் செஞ்சி அரசு, ஒன்றிய பொருளாளர்கள் பார்வேந்தன், ஜான், மகளிர் அணி நிர்வாகிகள் மனோன்மணி, ஒன்றிய கவுன்சிலர் பனிமலர், அலமேலு உள்ளிட்ட விசிக நிர்வாகிகள் ஏராளமானவர்கள் கலந்து கொண்டனர்.

இறுதியாக இளஞ்சிறுத்தை எழுச்சி பாசறை மாவட்ட துணை அமைப்பாளர் அம்பேத்கர் சிவகுமார் நன்றி உரையாற்றினார்.

Printed, Published and Owned by S.Manimaran and Printed at Manimaran Printers
No. 61, Cuddalore Main Road, Mudaliyarpet, Puducherry-4.
Ph:0413-2280613
E-Mail: pondyedi@thinaboomi.com
RNI.Regn No.Pontam 2002/7660
EDITOR: S.MANIMARAN
Subject to Madurai Jurisdiction Only

கடலூர் மாவட்டத்தில்

# குழந்தைத் திருமணம் இல்லாத கிராமத்தினை உருவாக்குவதற்கு தன்னார்வலர்களுக்கான பயிற்சிக்கூட்டம்

## கலெக்டர் சி.பி.ஆதித்யா செந்தில் குமார் தலைமையில் நடந்தது





**கடலூர், ஆக.1**
கடலூர் கலெக்டர் அலுவலக கூட்டரங்கில், குழந்தைத் திருமணம் இல்லாத கிராமத்தினை உருவாக்குவது தொடர்பாக கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில் குமார் தலைமையில் தன்னார்வலர்களுக்கான பயிற்சிக்கூட்டம் நடைபெற்றது.

கூட் டத் தின் போது கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில் குமார் தெரிவிக்கையில்,

குழந்தை திருமணச் சட்டத்தின் படி, பெண்ணைப் பொறுத்தமட்டில் 18 வயதும், ஆண்களைப் பொறுத்தமட்டில் 21 வயதும் நிறைவடையாத நிலையில் செய்யப்படும் திருமணம் குழந்தை திருமணம் ஆகும். குழந்தை திருமணம் பிணை ஆணை வழங்கா குற்றமாகும். குற்றம் புரிந்தவர்களுக்கு 2 ஆண்டு கடுங்காவல் தண்டணை அல்லது ரூ.1 இலட்சம் அபராதம் அல்லது இரண்டும் விதிக்கப்படும்.

குழந்தை திருமணத்தினை பற்றி தகவல் அறிந்தால் கலெக்டர், மாவட்ட நீதிபதி, குழந்தை திருமண தடுப்பு அலுவலர் (மாவட்ட சமூக நல அலுவலர்), மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர், சிறப்பு சிறார் காவல் அலகு (காவல் துறை), கிராம நிருவாக அதிகாரி, பஞ்சாயத்து தலைவர், குழந்தைகள் பாதுகாப்பு அலகு, பள்ளி ஆசிரியர் மற்றும் தலைமையாசிரியர் இவர்களில் யாரிடம் வேண்டுமானாலும் தகவல் அளிக்கலாம். மேலும், குழந்தைகளுக்கு எதிரான உரிமை மீறல்கள் ஏதேனும் நிகழ்ந்தால் உடனடியாக 1098 என்ற குழந்தைகள் உதவி உதவி எண்ணினை தொடர்பு கொண்டு தகவல் அளிக்கலாம்.

தன்னார்வலர்கள் ஒவ்வொரு மாதமும் 15ஆம் தேதி விவரித்த அறிக்கை தாக்கல் செய்ய வேண்டும். குழந்தை திருமணம் இல்லாத நிலையை உருவாக்கிட விழிப்புணர்வு ஏற்படுத்த வேண்டும். ஒவ்வொரு தன்னார்வலரும் 10 குழந்தைகளை கண்காணித்திட வேண்டும்.

தொடர்ந்து கல்வி கற்பதை உறுதி செய்திட விட வேண்டும். ஒவ்வொரு தன்னார்வலும் விழிப்புணர்வுடன் செயல்பட வேண்டும். குழந்தைகள் கல்வி பயணம் பள்ளி மற்றும் கல்லூரி ஆசிரியர்களுடன் தொடர்பு ஏற்படுத்தி கல்வி கற்பதனை உறுதி செய்திட வேண்டும்.

குழந்தை திருமணத்தைப் பற்றி தகுந்த ஆதாரங்கள் சேகரித்தல், குழந்தையின் வயதை உறுதிப்படுத்துதல், சம்மந்தப்பட்ட குழந்தையின் திருமண வீட்டார்கள் இருவரிடமும் குழந்தை திருமணம் செய்தால் அதற்கான தண்டனைகள் மற்றும் அதன் விளைவுகளை தெரிவிக்க வேண்டும்.

மீட்கப்பட்ட குழந்தையை குழந்தைகள் நலக்குழுவிடம் ஒப்படைத்து மறுவாழ்வு அளித்திடவும் துறை அலுவலர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது என கலெக்டர் சிபி ஆதித்யா செந்தில்குமார் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் மாவட்ட சமூக நல அலுவலர் சித்ரா, துறை சார்ந்த அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



**விழுப்புரம் மாவட்டத்தில் ஊர்க்காவல் படை பிரிவில் காலியாக இருந்த 12 இடங்களுக்காக தேர்ந்தெடுக்கப்பட்ட 12 நபர்களுக்கு மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ப.சரவணன் மாவட்ட காவல் அலுவலகத்தில் பணி நியமன ஆணை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் ஆயுதப்படை காவல்துறை கண்காணிப்பாளர் ஞானவேல் மற்றும் மாவட்ட ஊர் காவல் படை தலைவர் நட்டர்ஷா ஆகியோர் கலந்து கொண்டனர்.**

விழுப்புரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில்

# ஓரணியில் தமிழ்நாடு திமுக உறுப்பினர் சேர்க்கை குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்கள்

## மாவட்ட செயலாளர் கௌதம்சிகாமணி வழங்கினார்



**விழுப்புரம் ஆக. 1**
தமிழக முதலமைச்சர் ஆணைக்கிணங்க திமுக முன்னாள் அமைச்சர் க. பொன்முடி எம்எல்ஏ ஆலோசனைப்படி திருக்கோவிலூர் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்,

விழுப்புரம் தெற்கு மாவட்ட மாணவர் அணி சார்பில், ஓரணியில் தமிழ்நாடு திமுக உறுப்பினர் சேர்க்கை குறித்து விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர் கௌதமசிகாமணி மாணவ, மாணவிகளுக்கு வழங்கினார்கள்.

உடன் மாவட்ட ஊராட்சி குழு தலைவர் ஜெயச்சந்திரன், மாவட்ட துணைச் செயலாளர் முருகன், மாவட்ட ஊராட்சி குழு துணை தலைவர் தங்கம், நகர செயலாளர் கோபிகிருஷ்ணன், ஒன்றிய செயலாளர் பிரபு, நகர மன்ற துணை தலைவர் குணா, நகர மன்ற உறுப்பினர் சக்திவேல், தொ.மு.ச சரவணன், மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அன்பழகன், மாவட்ட மாணவர் அணி துணை அமைப்பாளர்கள் அறிவழகன், வினோத், மோகன், அருண், இளவரசன், மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி அமைப்பாளர் கிருஷ்ணராஜ், நகர இளைஞர் அணி அமைப்பாளர் நவநீதகிருஷ்ணன், நகர மாணவர் அணி அமைப்பாளர் ஸ்டான்லி செல்வா, சஞ்சய், ஆகாஷ், ஹரி, மோகன், ஒன்றிய மாணவர் அணி அமைப்பாளர் ஜீவானந்தம் , மற்றும் கழக நிர்வாகிகள் உடனிருந்தார்கள்.

# உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் வீட்டு மனை பட்டா கோரி அதிகளவில் மனு: மேயர் நிர்மலா வேல்மாறன் தகவல்

**திருவண்ணாமலை ஆக.1-**
தி ரு வண் ணா மலை மாநகராட்சிக்குட்பட்ட 21வது வார்டு அஜிஸ்கா லனி கரிகாலன் தெரு ஐயங்குளத்தெரு வாணியத்தெரு 22வது வார்டு சமுத்திரம் காலனி எள் குட்டை தெரு மாரியம்மன் கோவில் தெருவிலுள்ள ஒரு தனியார் திருமண மகாலில் 5 ஆயிரம் மக்களுக்கான உங்களுடன் ஸ்டாலின் திட்ட சிறப்பு முகாம் நேற்று நடந்தது.

இந்த முகாமினை ஆய்வு செய்த மாநகராட்சி மேயர் நிர்மலாவேல்மாறன் பொதுமக்களிடம் பெறப்பட்ட மனுக்களுக்கான தீர்வுகள் குறித்து கேட்டறிந்தார். மேலும் பொதுமக்கள் அளிக்கும் மனுக்களுக்கு 45 நாட்களுக்குள் தீர்வு காணப்படு என்றார்.



இந்த முகாமில் மகளிர் உரிமைத்தொகை கோரியும் வீட்டு மனை பட்டா கோரியும் பொதுமக்கள் அதிகளவில் மனு அளித்தனர்.

முகாமில் மாநகர செயலாளர் ப.கார்த்திவேல்மாறன் துணை மேயர் சு.ராஜாங்கம் மாநகராட்சி ஆணையாளர் எஸ். செல்வபாலாஜி மாமன்ற உறுப்பினர்கள் மண்டி ஆர். பிரகாஷ் பானுகருணாமூர்த்தி தாசில்தார் சு.மோகனராமன் வருவாய் ஆய்வாளர் எஸ்.ஏங்கல்ஸ்பிரபு நகர துணை செயலாளர் ஏ.அருணாச்சலம் வட்ட செயலாளர்கள் கௌதம் முரளி மற்றும் மாநகராட்சி நகராட்சி வருவாய்துறை அலு வ லர் கள் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

புதுச்சேரி அடுத்த கோட்டகுப்பம் நடு குப்பத்தில்

# நிலத்தை மீட்க வந்த அதிகாரிகளுடன் மீனவர்கள் வாக்குவாதம்

**புதுச்சேரி ஆக.1**
புதுச்சேரி அடுத்த தமிழக பகுதியான கோட்டகுப்பம் பகுதியைச் சார்ந்த நடுக்குப்பம் மீனவர்கள் 40 ஆண்டு காலம் பயன்படுத்தி வந்த தனியாருக்கு சொந்தமான இடத்தை நீதிமன்ற உத்தரவு படி மீட்க வந்த அதிகாரிகளுடன் மீனவர்கள் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் இதனால் அதிகரிகள் திரும்பிச் சென்றனர் அதன் விபரம் ஆவது புதுச்சேரி ஒட்டியுள்ள தமிழக பகுதியான கோட்டகுப்பம் நடுக்குப்பம் மீனவ கிராமத்தில் தனியாருக்கு சொந்தமான இடம் உள்ளது இந்த இடத்தில் நடு குப்பத்தில் உள்ள மீனவர்கள் கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக படகுகள் உள்ளிட்ட மீன் பிடி சாதனங்களை வைத்து தொழில் செய்து வருகின்றனர் இந்த நிலையில் அந்த இடத்தில் உரிமையாளர் நீதிமன்றத்தில் தொடர்ந்த வழக்கை விசாரித்த நீதிமன்றம் இடித்து மீட்டு உரிமையாளரும் ஒப்படைக்க வேண்டும் என்று மாவட்ட வருவாய் மற்றும் காவல்துறைக்கு உத்தரவிட்டிருந்தது அதன்படி நேற்று முன்தினம் நடுக்குப்பம் மீனவர் கிராமம் வந்த தாசில்தார் வித்யாதரன் மற்றும் கோட்டகுப்பம் ஆய்வாளர் விசுவநாதன் தலைமையிலான அதிகாரிகள் மீனவர்கள் பயன்படுத்தி வந்த இடத்தை அளவீடு செய்ய முயற்சித்தனர் இதற்கு எதிர்ப்பு தெரிவித்த மீனவர்கள் தாசில்தார் வித்யாதரன் மற்றும் காவல் ஆய்வாளர் விஸ்வநாதன் ஆகியோருடன் கடும் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர் இதனால் சிறிது நேரம் பரபரப்பு ஏற்பட்டது மேலும் நீதிமன்ற உத்தரவை காட்டி தாசில்தார் வித்யாதரன் விளக்கம் அளித்தார் ஆனாலும் இதனை ஏற்க மறுத்த மீனவர்கள் தொடர்ந்து அவர்களுடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அந்த இடத்தை அளக்க முடியாமல் அதிகாரிகள் மற்றும் காவல் ஆய்வாளர் மற்றும் போலீசார் திரும்பிச் சென்றனர் இதனால் அவ்விடம் சிறிது நேரம் போர்க்களம் போல் காணப்பட்டது.

# புதுச்சேரி பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியில் பணியிடங்களில் பாலின சமத்துவ கருத்தரங்கம்



**புதுச்சேரி ஆக. 1**
புதுச்சேரி பாரதிதாசன் அரசு மகளிர் கல்லூரியில் பணியிடங்களில் பாலின சமத்துவம் என்ற தலைப்பில் பேராசிரியர்கள் பங்கு பெற்ற கருத்தரங்கம் நடைபெற்றது இந்நிகழ்ச்சியில் கல்லூரி முதல்வர் முனைவர் வீரமோகன் தலைமை தாங்கினார் பேராசிரியர் நிஷா ஷர்மா அனைவரையும் வரவேற்றார் இந்த கருத்தடைஞ்சிருக்கு சிறப்பு விருந்தினராக வருகை புரிந்த வழக்கறிஞர் மேரி அன்னா தயாவதி பணியிடத்தில் பெண்களுக்கு எதிரான பாலியல் துன்புறுத்தல் சட்டம் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் மற்றும் தீர்வுகள் பற்றி விரிவாக விழிப்புணர்வு ஏற்படுத்தினார் இவரைத் தொடர்ந்து பேசிய மற்றொரு சிறப்பு விருந்தினர் காஞ்சி மாமுனிவர் பட்ட மேற்படிப்பு நிறுவனத்தில் ஆங்கில பேராசிரியராக பணிபுரியும் மேரி ஜோஸ்பின் அருணா பாலின சமத்துவம் அடைவதற்கு நிறுவனங்கள் பின்பற்ற வேண்டிய நடவடிக்கைகள் குறித்து உரையாற்றினார். இந்த நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை கல்லூரியின் உள் தர மதிப்பீடு உறுதி பிரிவு ஒருங்கிணைப்பாளர் சுரேஷ் மற்றும் கல்லூரியின் சட்ட சேவைகள் மையம் தலைவர் ஷாந்தி செய்திருந்தனர் நூற்றுக்கும் மேற்பட்ட பேராசிரியர்கள் மாணவிகள் கலந்து கொண்டனர்.



**புதுச்சேரி என்.ஆர்.டி.யூ.சி. தலைவர் பாலாஜி பிறந்த நாளையொட்டி கடற்கரை சாலை சிறு வணிகர்கள் அவருக்கு மாலை அணிவித்து வரவேற்று, தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிவழங்கினர். இந்நிகழ்ச்சியில் ஆனந்த கண்ணன் மற்றும் வணிகர்கள் கலந்து கொண்டனர்.**

# வேலூர் மாநகரில் போக்குவரத்தை ஒழுங்குபடுத்த ஆலோசனை கூட்டம்



**வேலூர் ஆகஸ்ட் 1:**
வேலூர் சரக காவல்துறை துணைத்தலைவர் ஜி.தர்மராஜன், வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் எ.மயில்வாகனன் அவர்களையும் மரியாதை நிமித்தமாக மாவட்ட சாலை பாதுகாப்பு ரோந்துப்படையின் செயலாளர் டாக்டர்.அ.மு.இக்ராம் தலைமையில் சாலை பாதுகாப்பு படையின் செயல்பாடுகள் குறித்தும் விபத்து காலங்களில் செயல்பாடுகள் குறித்த அறிக்கையினை வழங்கி பேசினார்.

பின்னர் வேலூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் மயில்வாகனன் அவர்கள் தலைமையில் வேலூர் மாநகரில் போக்குவரத்து ஒழுங்குபடுத்துதல் குறித்தும் போக்குவரத்து வார்டன் அமைப்பில் ஆர்வமும் விருப்பமும் உள்ள தகுதியான நபர்களை இணைப்பது குறித்தும் ஆலோசனைக்கூட்டம் நடைபெற்றது.

இக் கூட்டத்தில் மாவட்ட காவல் கூடுதல் கண்காணிப்பாளர் பாஸ்கர், மாவட்ட சாலை பாதுகாப்பு ரோந்துப்படையின் செயலாளர் டாக்டர்.அ.மு.இக்ராம், துணைத்தலைவர்கள் எஸ்.ரமேஷ்குமார்ஜெயின், இரா.சீனிவாசன், பி.என்.ராமச்சந்திரன், துணைச்செயலாளர் சாந்திபாஸ்கர், செயற்குழு உறுப்பினர்கள் செ.நா.ஜனார்த்தனன், டாக்டர் வீ.தீனபந்து, தலைமையாசிரியர் அ.சிவக்குமார் உள்ளிட்டோர் பங்கேற்றனர். வேலூர் மாநகரில் போக்குரத்து நெரிசல் குறித்தும் விபத்துகள் தவிர்பதற்கான வழி முறைகள் குறித்தும் கேட்டறிந்தார். காவல் துறையுடன் போக்குவரத்து வார்டன் குழுமம் இணைந்து செயலாற்றி போக்குவரத்தினை ஒழுங்குபடுத்திட வேண்டுமென கூறினார்.

தின பூமி நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்

## இந்திய டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில்
# மாபெரும் சாதனை படைத்த கில்




**லண்டன், ஆக.01-**

இந்திய டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு தொடரில் அதிக ரன் குவித்த கேப்டன் என்ற மாபெரும் சாதனையை சுப்மன் கில் படைத்துள்ளார்.

**கடைசி டெஸ்ட் போட்டி...**

இந்தியா-இங்கிலாந்து கிரிக்கெட் அணிகள் இடையிலான 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரின் கடைசி போட்டி லண்டன் ஓவல் மைதானத்தில் நேற்று தொடங்கியது. இதில் டாஸ் வென்ற இங்கிலாந்து அணி பந்துவீச்சை தேர்வு செய்தது. அதன்படி முதல் இன்னிங்சை தொடங்கிய இந்திய அணிக்கு தொடக்க ஆட்டக்காரர்களாக கே.எல்.ராகுல் - ஜெய்ஸ்வால் களமிறங்கினர்.

**ஆமை வேகத்தில்...**

இதில் ஜெய்ஸ்வால் 2 ரன்களில் விரைவில் ஆட்டமிழந்தார். அடுத்து சாய் சுதர்சன் களமிறங்கினார். இந்திய அணி தடுப்பாட்டத்திலேயே கவனம் செலுத்தியது. இதனால் ரன் ரேட் ஆமை வேகத்தில் நகர்ந்தது. சிறிது நேரம் நிலைத்து விளையாடிய கே.எல். ராகுல் 14 ரன்களில் அவுட்டானார். பின்னர் கேப்டன் சுப்மன் கில் வந்தார். உணவு இடைவேளை வரை இந்திய அணி 23 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து 72 ரன்கள் எடுத்திருந்தது. சாய் சுதர்சன் 25 ரன்களுடனும், சுப்மன் கில் 15 ரன்களுடனும் களத்தில் இருந்தனர்.

**வரலாற்று சாதனை...**

இந்த தொடரில் இந்திய டெஸ்ட் அணியின் கேப்டனாக அறிமுகம் ஆன சுப்மன் கில் ரன் குவிப்பில் அசத்தி வருகிறார். இந்த தொடரில் இதுவரை 737 ரன்கள் குவித்துள்ளார். இதன் மூலம் டெஸ்ட் கிரிக்கெட் வரலாற்றில் ஒரு தொடரில் அதிக ரன் குவித்த இந்திய கேப்டன் என்ற மாபெரும் சாதனையை சுப்மன் கில் படைத்துள்ளார். இதற்கு முன்னர் சுனில் கவாஸ்கர் 732 ரன்கள் அடித்திருந்ததே சாதனையாக இருந்தது. தற்போது அதனை முறியடித்துள்ள சுப்மன் கில் புதிய சாதனை படைத்துள்ளார். இந்த பட்டியலில் 655 ரன்களுடன் விராட் கோலி 3-வது இடத்தில் உள்ளார்.

## ஓவல் கடைசி டெஸ்ட் போட்டி:
# முதல் இன்னிங்ஸில் இந்தியா நிதான ஆட்டம்

**லண்டன், ஆக.01-**

இங்கிலாந்துக்கு எதிரான கடைசி டெஸ்டில் இந்திய அணி அதன் முதல் இன்னிங்ஸில் நிதான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது.

**போட்டி தாமதம்...**

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 5-வது மற்றும் கடைசி போட்டி லண்டனின் ஓவல் மைதானத்தில் நேற்று (ஜூலை 31) துவங்கியது. இந்தப் போட்டி தொடங்குவதற்கு முன்னதாக சிறிது நேரம் மழை பெய்ந்ததால் போட்டி தாமதமானது.

**பொறுப்பு கேப்டன் போப்...**

பின்னர், மழை நின்றவுடன் போட்டி துவங்கியது. இங்கிலாந்து அணியின் கேப்டன் பென் ஸ்டோக்ஸ் காயம் காரணமாக விலகியதால், அவருக்குப் பதிலாகப் பொறுப்பு கேப்டன் ஆலி போப் கேப்டன் பதவியை நிர்வகிக்கிறார். இங்கிலாந்து அணி டாஸ் வென்றதும் பொறுப்பு கேப்டன் ஆலி போப் முதலில் பந்துவீசுவதாகத் தெரிவித்தார்.

**டாஸ்ஸில் தோல்வி...**

இந்தத் தொடரில் மொத்தமுள்ள 5 போட்டிகளிலுமே இந்திய டாஸ்ஸில் தோல்வியடைந்துள்ளது. மேலும், டெஸ்ட் போட்டிகளில் இந்திய அணி தொடர்ச்சியாக சந்தித்த 15 டாஸ் தோல்வி இதுவாகும்.

**அதிரடி நீக்கம்...**

இங்கிலாந்து அணியில் லியாம் டாஸன், ஜோஃப்ரா ஆர்ச்சர், கார்ஸ், காயமடைந்த கேப்டன் பென் ஸ்டோக்ஸ் நால்வரும் நீக்கப்பட்டுள்ளனர். இந்திய அணியில் ஜஸ்பிரீத் பும்ரா, கடைசியாக நடைபெற்ற டெஸ்ட் போட்டியில் சரியாக சோபிக்காத அன்ஷுல் காம்போஜ், காயமடைந்த விக்கெட் கீப்பர் ரிஷப் பந்த், ஷர்துல் தாக்குர் உள்ளிட்ட நல்வர் நீக்கப்பட்டுள்ளனர். இவர்களுக்குப் பதிலாக விக்கெட் கீப்பர் துருவ் ஜுரேல், ஆகாஷ் தீப், பிரசித் கிருஷ்ணா, கருண் நாயர் உள்ளிட்டோர் சேர்க்கப்பட்டுள்ளனர்.

**தொடக்க வீரர்கள் ஏமாற்றம்...**

ஜெய்ஸ்வால், கே.எல். ராகுல் ஆகியோர் தொடக்க வீரர்களாக களம் இறங்கினர். ஓவல் சீதோஷ்ண நிலையை பயன்படுத்தி இங்கிலாந்து பந்து வீச்சாளர்கள் பந்தை சிறப்பாக ஸ்விங் செய்தனர். இதனால் ஜெய்ஸ்வால் பந்தை எதிர்கொள்ள சிரமப்பட்டார். அவர் 2 ரன்கள் எடுத்த நிலையில் அட்கின்சன் பந்தில் எல்.பி.டபிள்யூ. ஆனார். அடுத்த கே.எல். ராகுல் உடன் சாய் சுதர்சன் ஜோடி சேர்ந்தார். இருவரும் இங்கிலாந்து பந்து வீச்சாளர்களின் ஸ்விங் பந்தை திறமையாக எதிர்கொண்டு விளையாடினர். என்றாலும், கிறிஸ் வோக்ஸ் வீசிய 16ஆவது ஓவரில் கே.எல். ராகுல் இன்சைடு எட்ஜ் மூலம் ஸ்டம்பை பறிகொடுத்தார்.

**இந்தியா 72/2...**

அப்போது இந்தியா 15.1 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 38 ரன்கள் எடுத்திருந்தது. 4ஆவது விக்கெட்டுக்கு சாய் சுதர்சன் உடன் சுப்மன் கில் ஜோடி சேர்ந்துள்ளார். இருவரும் நேர்த்தியாக பந்தை எதிர்கொண்டு ரன்கள் சேர்த்து வந்தனர். இந்திய அணி 23 ஓவரில் 2 விக்கெட் இழப்பிற்கு 72 ரன்கள் எடுத்திருக்கும் போது மழை குறுக்கிட்டது. அத்துடன் முதல் நாள் உணவு இடைவேளை விடப்பட்டது. சாய் சுதர்சன் 23 ரன்களுடனும், சுப்மன் கில் 15 ரன்களுடனும் களத்தில் உள்ளனர்.

# பாகிஸ்தான் அணியுடன் விளையாட மறுத்தது ஏன்..? இந்தியா விளக்கம்

**பர்மிங்காம், ஆக.01-**

லெஜெண்ட்ஸ் உலக சாம்பியன்ஷிப் (டபிள்யூ.சி.எல்.) தொடரில் பாகிஸ்தானுடன் விளையாட மறுத்தது குறித்து இந்திய அணி காரணம் தெரிவித்துள்ளது.

**லெஜெண்ட்ஸ் கிரிக்கெட்...**

ஓய்வுபெற்ற சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் இந்த டபிள்யூ.சி.எல். தொடரில் அந்தந்த நாட்டைப் பிரதிநிதித்துவப்படுத்தி விளையாடி வருகிறார்கள். இந்தப் போட்டியில் அரையிறுதில் இந்தியா சாம்பியன்ஸ் அணியும் பாகிஸ்தான் சாம்பியன்ஸ் அணியும் மோதுவதாக இருந்தது.

**விளையாட மறுப்பு...**

பஹல்காம் தீவிரவாத தாக்குதலுக்கு எதிர்ப்பு தெரிவிக்கும்படி இந்திய அணியினர் பாகிஸ்தானுடன் விளையாடுவதை மறுத்துள்ளனர். ஏற்கெனவே, இந்தத் தொடரில் லீக் போட்டியில் ஒரு முறை இந்திய அணி பாகிஸ்தானுடன் விளையாட மறுத்தது குறிப்பிடத்தக்கது. இந்தியா சாம்பியன்ஸ் அணி வெளியேறியதால் பாகிஸ்தான் சாம்பியன்ஸ் அணி இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளது. மற்றுமொரு அரையிறுதியில் தென்னாப்பிரிக்க அணியும் ஆஸி. அணியும் மோதுகின்றன. ஆசிய கோப்பை டி20 தொடரில் இந்திய அணி பாகிஸ்தானுடன் விளையாட இருப்பதும் குறிப்பிடத்தக்கது.

**இந்தியா விளக்கம்...**

இந்நிலையில், ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு இந்தியா சாம்பியன்ஸ் அணியினர் கூறியதாக தகவல் கிடைத்துள்ளது. அதில் அவர்கள் கூறியதாவது: நாங்கள் பாகிஸ்தானுடன் விளையாட மாட்டோம். எங்களது நாடுதான் எப்போதும் எங்களுக்கு முதன்மையானது. பிறகுதான் மற்றவை. இந்திய அணியின் உறுப்பினர்கள் என்பதில் எங்களுக்கு பெருமையாக இருக்கிறது. நாங்கள் கடினமாக உழைத்து இந்திய கொடியை எங்கள் சட்டைகளில் அணிந்துள்ளோம். எப்போதும், எங்கள் நாட்டை கீழிறக்க மாட்டோம். பாரத் மாதா கி ஜெய்.

**இறுதிப் போட்டியிலும்...**

ஒருவேளை இறுதிப் போட்டியில் பாகிஸ்தானுடன் விளையாடும்படி வந்திருந்தாலும் நாங்கள் மறுத்திருப்போம். இந்தியர்களாகிய நாங்கள் எப்போதும் ஒரே மாதிரியாகத்தான் இருப்போம் எனக் கூறியுள்ளார்கள். இந்தியா சாம்பியன்ஸ் அணியினர் தங்களது எக்ஸ் பக்கத்திலும் எங்கள் கொள்கைகளில் இருந்து மாறமாட்டோம். நாடுதான் பிரதானம் எனக் கூறியுள்ளார்கள்.

## அதிக ரிஸ்க் எடுத்து விட்டேன்:
# காயம் குறித்து பென் ஸ்டோக்ஸ்

**லண்டன், ஆக.01-**

ஓவல் டெஸ்ட்டில் இங்கிலாந்து கேப்டன் பென் ஸ்டோக்ஸ் விளையாட முடியாமல் சென்றது குறித்து அவர் கருத்து தெரிவித்துள்ளார்.

**தோள்பட்டை காயம்...**

ஆண்டர்சன் - டெண்டுல்கர் தொடரில் 2-1 என இங்கிலாந்து முன்னிலை வகிக்கிறது. கடைசி டெஸ்ட் ஓவலில் இங்கிலாந்து டாஸ் வென்று பந்துவீச்சைத் தேர்வு செய்துள்ளது. இந்தப் போட்டியில் வலது தோள்பட்டையில் ஏற்பட்ட காயம் காரணமாக ஸ்டோக்ஸ் விலகியுள்ளார்.

**அதிக ரிஸ்க்...**

இந்தத் தொடரில் அதிக விக்கெட்டுகள் (17) எடுத்த அவர் இது பற்றி பேசியதாவது: இது அதிக ரிஸ்க், அதிக பலன் போன்றது. ரிஸ்க் அதிகமாக எடுத்ததால் இப்படியாகிவிட்டது. என்னுடைய எந்த வீரர் ஒருவருக்கும் இப்படி காயம் ஏற்பட நான் விரும்பவில்லை. தற்போது காயத்திலிருந்து குணமடைய தொடங்கியிருக்கிறேன். அடுத்த தொடரில் கவனம் செலுத்துகிறேன்.

**உச்சரிக்க தெரியவில்லை...**

ஆஷஸ் தொடருக்கு முன்பு இப்படியானது வருத்தம்தான். இந்தமாதிரி முடிவுகள் எடுக்க அதிக நேரத்தை வழங்குவேன். என்னால் உச்சரிக்க முடியாத தசையொன்று நன்றாகவே கிழிந்திருக்கிறது. அதன்பெயரை என்னால் உச்சரிக்க தெரியவில்லை (சிரிக்கிறார்). ஸ்கேன் எடுத்ததுமே பந்துவீச முடியாது எனத் தெரிந்தது. பின்னர் மருத்துவக் குழுவுடன் 20 நிமிடம் உட்கார்த்து இந்த முடிவுக்கு வந்தோம்.

**வெல்ல வேண்டுமென...**

களத்தில் இருக்கும் போது எதைச் செய்தாவது வெல்ல வேண்டுமென நினைப்பேன். அதனால், பணிச்சுமை எல்லாம் எனக்கு தெரியவில்லை. நான் பேட்டராக மட்டுமே விளையாடியிருக்கலாம். ஆனால், வெற்றிபெற 4 வேகப் பந்துவீச்சாளர்கள் வேண்டும். அதனால், இந்த மாற்றம் செய்யப்பட்டது என்றார்.

# திருநெல்வேலி பொருநை அருங்காட்சியகப்பணிகள்
## அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு

**சென்னை, ஆக. 01-**

திருநெல்வேலி பொருநை அருங்காட்சியகப் பணிகளை ஆய்வு செய்த அமைச்சர் எ.வ.வேலு, பணிகளை விரைவாக முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவர வேண்டும் என்று அவர் அறிவுறுத்தியுள்ளார்.

பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறை முகங்கள் துறை அமைச்சர் எ.வ. வேலு, சென்னை, தலைமை செயலகத்தில், பொருநை அருங்காட்சியகப் பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார். இது தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் கூறப்பட்டுள்ளதாவது;-

சென்னை, தலைமைச் செயலகத்தில், நேற்று (31.07.2025) பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு, திருநெல்வேலி மாவட்டம், பொருநை அருங்காட்சியகப் பணிகள் குறித்து பொதுப்பணித் துறை அலுவலர்களுடன் ஆய்வு மேற்கொண்டார்.

சட்டமன்றப் பேரவை விதி 110-ன் கீழ், தமிழ்நாடு முதல்-அமைச்சர் அறிவிப்பு ஒன்றை வெளியிட்டார். “வீரம் விளைந்த திருநெல்வேலி நகரத்தை ஒட்டி பொருநை அருங்காட்சியகம் அமைக்கப்படும்” என்று அறிவித்தார். அதனைத் தொடர்ந்து, தமிழ்நாடு முதல்-அமைச்சரால், 18.5.2023 அன்று அருங்காட்சியகத்திற்கு அடிக்கல் நாட்டப்பட்டது.

அதில், ஆதிச்சநல்லூர், சிவகளை, கொற்கை உள்ளிட்ட பகுதிகளில் தொல்லியல் துறை மூலமாக மேற்கொள்ளப்பட்ட அகழாய்வுகளின் மூலமாக கிடைத்தப் அரியப் பொருட்களை காட்சிப்படுத்தும் வகையில் அருங்காட்சியகம் கட்டப்படும் என்று முதல்-அமைச்சர் அறிவித்தார்.

கொற்கையில் 812 பொருட்கள், ஆதிச்சநல்லூரில் 1,620 பொருட்கள், சிவகளையில் 185 பொருட்கள் என 2,617 பொருட்கள் 106 முதுமக்கள் தாழிகள் அகழாய்வு மூலமாக கண்டறியப்பட்டுள்ளது. திட்ட மதிப்பீடு ரூ.33 கோடி மதிப்பீட்டில், 13 ஏக்கர் பரப்பளவில், 54,000 சதுர அடி கொண்ட 7 பகுதியாக கட்டப்பட்டுள்ளது.

பொருநையில் கட்டப்பட்டு வரும் இந்த அருங்காட்சியகத்தில், சிவகளைப் பகுதியில் அகழாய்வில் கண்டறியப்பட்ட அரியப் பொருட்களைக் காட்சிப்படுத்த ஓர் கட்டிடமும், ஆதிச்சநல்லூர் பகுதியில் அகழாய்வில் கண்டறியப்பட்ட அரியப் பொருட்களைக் காட்சிப்படுத்த 2 கட்டிடமும், கொற்கைப் பகுதியில் அகழாய்வில் கண்டறியப்பட்ட அரியப் பொருட்களைக் காட்சிப்படுத்த 2 கட்டிடமும் மற்றும் சுகாதார வசதிகள் கொண்ட கட்டிடங்களும் கட்டப்பட்டது. பொதுப்பணித்துறை அலுவலர்களிடம் மீதமுள்ள அனைத்து பணிகளையும் விரைவாக முடித்து, பொதுமக்களின் பயன்பாட்டிற்குக் கொண்டுவர வேண்டும் என்று அமைச்சர் உத்தரவிட்டார். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## யு-19: சூரியவன்ஷிக்கு வாய்ப்பு

ஆஸ்திரேலியாவுக்கு சுற்றுப்பயணம் செல்லும் 19 வயதுக்குள்பட்டோருக்கான இந்திய அணி 2 டெஸ்ட் மற்றும் 3 ஒருநாள் போட்டிகளில் விளையாடுகிறது. இந்தத் தொடரில் போட்டிகள் பிரிஸ்பேன் மற்றும் மேக்கேயில் நடைபெறுகின்றன. இந்த தொடருக்கான இந்திய அணி புதன்கிழமை அறிவிக்கப்பட்டது. இந்த அணியில் இங்கிலாந்துக்கு எதிராக அதிவேக சதம் விளாசி சாதனை படைத்து அசத்திய 14 வயதான இளம் வீரர் வைபவ் சூரியவன்ஷிக்கு மீண்டும் வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது.

அணியின் கேப்டனாக சென்னை சூப்பர் கிங்ஸ் அணியின் தொடக்க ஆட்டக்காரரான ஆயுஷ் மாத்ரே கேப்டனாக நியமிக்கப்பட்டுள்ளார். செப்டம்பர் 21 ஆம் தேதி தொடங்கும் இந்தத் தொடர் அக்டோபர் 10 ஆம் தேதி வரை நடைபெறுகிறது. இந்திய அணி விவரம்: ஆயுஷ் மாத்ரே (கேப்டன்), விஹான் மல்ஹோத்ரா (விக்கெட் கீப்பர்), வைபவ் சூரியவன்ஷி, வேதாந்த் திரிவேதி, ராகுல் குமார், அபிக்யான் குண்டு (விக்கெட் கீப்பர்), ஹர்வன்ஷ் சிங் (விக்கெட் கீப்பர்), ஆர்.எஸ். அம்ப்ரிஷ், கனிஷ்க் சௌஹான், நமன் புஷ்பக், ஹெனில் சிங், தீபேஷ், கிஷன் குமார், அன்மோல்ஜீத் சிங், கிலன் பட்டேல், உதவ் மோகன், அமன் சௌகான்.

## உழைத்தால் வெற்றி: கில்

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 5-வது மற்றும் கடைசி போட்டி லண்டனின் ஓவல் மைதானத்தில் நேற்று (ஜூலை 31) துவங்கியது. இந்தப் போட்டி தொடங்குவதற்கு முன்னதாக சிறிது நேரம் மழை பெய்ந்ததால் போட்டி தாமதமானது. இங்கிலாந்து அணியின் கேப்டன் ஆலி போப் டாஸ் வென்றதும் முதலில் பந்துவீசுவதாகத் தெரிவித்தார். இந்தத் தொடரில் 2-1 இங்கிலாந்து முன்னிலை வகிக்க, இந்தப் போட்டியில் இந்தியா வென்று சமனில் முடிக்க முனைப்பில் இருக்கிறது.

தொடர்ச்சியாக டாஸில் தோற்றது குறித்து இந்திய அணியின் கேப்டன் ஷுப்மன் கில் பேசியதாவது: நாங்கள் போட்டியில் வெல்லும்வரை டாஸில் தோற்பதை பெரிதாக கண்டுக்கொள்ள மாட்டோம். நேற்று பிளேயிங் லெவன் குறித்து அதிகமாக சிந்தித்தேன். மேகமூட்டமாக இருப்பதால் பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்குமென நினைக்கிறேன். முதல் இன்னிங்ஸில் ரன்கள் குவிக்க நினைக்கிறோம். விளையாடும் எல்லா போட்டிகளையும் வெல்ல நினைக்கிறோம். அருகில் வருகிறோம். இன்னும் 5-10 சதவிகிதம் கூடுதலாக உழைத்தால் வெற்றி பெறுவோம். அதை வீரர்கள் அளிப்பார்கள் என்றார்.

# டாஸில் தோற்பது குறித்து கவலை இல்லை: கேப்டன் சுப்மன் கில்

**லண்டன், ஆக.01-**

நாங்கள் போட்டியில் வெல்லும்வரை டாஸில் தோற்பதை பெரிதாக கண்டுக்கொள்ள மாட்டோம் என்று இந்திய அணியின் கேப்டன் ஷுப்மன் கில் தெரிவித்துள்ளார்.

**போட்டி தாமதம்...**

இந்தியா - இங்கிலாந்து அணிகள் மோதும் 5-வது மற்றும் கடைசி போட்டி லண்டனின் ஓவல் மைதானத்தில் நேற்று (ஜூலை 31) துவங்கியது. இந்தப் போட்டி தொடங்குவதற்கு முன்னதாக சிறிது நேரம் மழை பெய்ந்ததால் போட்டி தாமதமானது.

**டாஸ் வென்ற இங்கி...**

இங்கிலாந்து அணியின் கேப்டன் ஆலி போப் டாஸ் வென்றதும் முதலில் பந்துவீசுவதாகத் தெரிவித்தார். இந்தத் தொடரில் 2-1 இங்கிலாந்து முன்னிலை வகிக்க, இந்தப் போட்டியில் இந்தியா வென்று சமனில் முடிக்க முனைப்பில் இருக்கிறது.


**கண்டுக்கொள்ளவில்லை...**

தொடர்ச்சியாக டாஸில் தோற்றது குறித்து இந்திய அணியின் கேப்டன் ஷுப்மன் கில் பேசியதாவது: நாங்கள் போட்டியில் வெல்லும்வரை டாஸில் தோற்பதை பெரிதாக கண்டுக்கொள்ள மாட்டோம். நேற்று பிளேயிங் லெவன் குறித்து அதிகமாக சிந்தித்தேன். மேகமூட்டமாக இருப்பதால் பந்துவீச்சாளர்களுக்கு சாதகமாக இருக்குமென நினைக்கிறேன்.

**மாற்றங்கள்...**

முதல் இன்னிங்ஸில் ரன்கள் குவிக்க நினைக்கிறோம். அணியில் 3 மாற்றங்களை செய்திருக்கிறோம். ரிஷப் பந்த், ஷர்துல் தாக்குர், பும்ராவுக்குப் பதிலாக ஜுரெல், கருண் நாயர், பிரசித் கிருஷ்ணா சேர்க்கப்பட்டுள்ளார்கள். விளையாடும் எல்லா போட்டிகளையும் வெல்ல நினைக்கிறோம். அருகில் வருகிறோம். இன்னும் 5-10 சதவிகிதம் கூடுதலாக உழைத்தால் வெற்றி பெறுவோம். அதை வீரர்கள் அளிப்பார்கள் என்றார்.

# பிரேமலதா, ஓ.பி.எஸ்.க்கு முதல்வர் நன்றி



**சென்னை, ஆக.01-**

தன்னை சந்தித்து நலம் விசாரித்த பிரேமலதா, ஓ.பி.எஸ்.க்கு முதல்வர் மு.க. ஸ்டாலின் நன்றி தெரிவித்தார்.

முன்னாள் முதல்வரான ஓ. பன்னீர் செல்வம் நேற்று காலை நடை பயிற்சியின் போது முதல்வர் மு.க. ஸ்டாலினை சந்தித்து பேசினார். அதனைத் தொடர்ந்து நேற்று மாலை ஆழ்வார்பேட்டையில் உள்ள மு.க. ஸ்டாலின் வீட்டிற்கு சென்று முதல்வரை சந்தித்தார்.

ஆழ்வார்பேட்டைக்கு முதல்வர் வீட்டிற்குச் சென்ற ஓ.பி.எஸ்.-ஐ உதயநிதி ஸ்டாலின் வரவேற்றார். ஓ.பி.எஸ். உடன் அவரது மூத்த மகன் ரவீந்திரநாத்தும் உடன் சென்றிருந்தார். இந்த சந்திப்பின் போது, முதல்வர் உடல்நலம் குறித்து கேட்டறிந்தார்.

பின்னர், செய்தியாளர்களை சந்தித்த ஓ.பி.எஸ்., முதல்வர் உடனான சந்திப்பில் அரசியல் இல்லை எனத் தெரிவித்தார். இந்த நிலையில் தான் மு.க. ஸ்டாலின் தனது எக்ஸ் பக்கத்தில் “உள்ளன்போடு உரையாடி உடல் நலம் விசாரித்ததற்கு நன்றி” என ஓ.பி.எஸ்.க்கு நன்றி தெரிவித்துள்ளார்.

இதேபோல் நேரில் சந்தித்து நலம் விசாரித்த பிரேமலதாவிற்கு நன்றி என எக்ஸ் தளத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா விஜயகாந்த் முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை சந்தித்து, அவரது உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். இந்த நிலையில், நேரில் சந்தித்து நலம் விசாரித்த பிரேமலதாவிற்கு நன்றி என எக்ஸ் தளத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார். நட்புடன் நலம் விசாரித்தமைக்கு நன்றி! என பிரேமலதாவை நேரில் சந்தித்தபோது எடுத்த புகைப்படத்துடன் எக்ஸ் தளத்தில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பதிவிட்டுள்ளார்.

## அ.தி.மு.க ஆட்சிக்கு வந்ததும் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும்:
# ராமநாதபுரத்தில் சங்க பிரதிநிதிகளுடன் எடப்பாடி பழனிச்சாமி கலந்துரையாடல்




**ராமநாதபுரம், ஆக. 01-**

அ.தி.மு.க. மீண்டும் ஆட்சிக்கு வந்ததும் மக்களின் அனைத்து கோரிக்கைகளும் நிறைவேறும் என்று ராமநாதபுரத்தில் பல்வேறு சங்க பிரதிநிதிகள் மத்தியில் பொது செயலாளர் எடப்பாடி பழனிச்சாமி பேசினார்.

ராமநாதபுரத்தில் விவசாயிகள், மீனவர்கள் உள்ளிட்ட சங்க பிரதிநிதிகளை சந்தித்து கோரிக்கைகளை கேட்டறிந்து மனுக்களை அ.தி.மு.க. பொதுச்செயலாளர் சட்டமன்ற எதிர்க்கட்சி தலைவர் எடப்பாடி பழனிச்சாமி பெற்றார். இதன்பின்னர் அவர்கள் மத்தியில் எடப்பாடி பழனிச்சாமி பேசியதாவது:-

ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த பல்வேறு தொழிலாளர்கள் நிர்வாகிகள் சங்கத்தினர் தங்களுக்கு இருக்கின்ற பிரச்சனைகள் குறித்து தெரிவித்தனர். நாட்டுப்படகு மீனவர்கள் பிரச்சனைகளுக்கு அ.தி.மு.க. ஆட்சி அமைந்ததும் உடனடியாக தீர்வு காணப்படும். இலங்கை சிறையில் உள்ள மீனவர்கள் மற்றும் படகுகளை உடனடியாக மீட்பது குறித்து மத்திய அமைச்சரிடம் பேசி நடவடிக்கை எடுக்கப்படும். அ.தி.மு.க. ஆட்சி அமைந்த உடன் நெசவு செய்யும் நெசவாளர்களுக்கு தினசரி கூலி வழங்கப்படும். ராமநாதபுரம் மாவட்ட விவசாயத்திற்கு தேவையான தண்ணீரை வழங்கும் வகையில் காவிரி குண்டாறு இணைப்பு திட்டம் ரூ.14ஆயிரத்து 400 கோடியில் அ.தி.மு.க. ஆட்சியில் தொடங்கி வைத்தோம். நாங்கள் தொடங்கிய ஒரே காரணத்திற்காக திமுக ஆட்சிக்கு வந்ததும் அந்த திட்டத்தை கிடப்பில் போட்டு விட்டனர்.

மீண்டும் அ.தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் காவிரி குண்டாறு இணைப்பு திட்டம் நிச்சயமாக நிறைவேற்றப்படும். பகுதி நேர ஆசிரியர்களின் கோரிக்கைகள் குறித்து அ.தி.மு.க. ஆட்சி அமைந்ததும் தீவிரமாக பரிசீலனை செய்து நிச்சயமாக அவர்களின் குறைகள் அனைத்தும் தீர்க்கப்படும். மீனவர்களின் நீண்ட கால கோரிக்கையாக கச்சத்தீவை மீட்க வேண்டும் என்ற கோரிக்கை குறித்து மத்திய அரசிடம் பேசி கச்சத்தீவை மீட்க அழுத்தம் கொடுத்து வருகிறோம் ஆனால் பல ஆண்டு காலம் மத்திய அரசுடன் கூட்டணி வைத்திருந்த திமுக அரசு கச்சத்தீவை மீட்க எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

திமுகவை பொருத்த வரை ஆட்சிக்கு வருவதற்கு முன்பு பல வாக்குறுதிகள் கொடுப்பார்கள் ஆட்சிக்கு வந்த பிறகு அதையெல்லாம் மறந்து விடுவார்கள் இது தான் இன்று வரை வாடிக்கையாக இருந்து வருகிறது. அ.தி.மு.க.வை பொருத்த வரை மக்களுக்கு வேண்டிய உதவிகளை மத்திய அரசிடம் எப்படிப்பட்ட அழுத்தம் கொடுத்தாவது கேட்டுப் பெற்று வழங்கி வந்துள்ளோம். தமிழக மக்களும் அவர்களின் நலனும்தான் எங்களுக்கு முக்கியம். ஏனெனில் அவர்கள் தான் இந்த அரசை தேர்ந்தெடுத்தவர்கள். அவர்களுக்கு வேண்டிய உதவிகளை நலன்களை கிடைக்கச் செய்வது தான் எங்களின் ஒரே நோக்கம்.

மக்களுக்கு ஒரு பிரச்சனை என்றால் அதனை எப்பாடுபட்டாவது தீர்க்க வேண்டும் என்பது எங்கள ஒரே கடமை என்ற நோக்கத்தில் நாங்கள் செயல்படுவோம். ஆனால் இன்றைய ஆட்சியாளர்களுக்கு மத்தியிலும், மாநிலத்திலும் அதிகாரம் வேண்டும் என்பது ஒரே நோக்கம். மத்தியில் ஆட்சி அதிகாரம் வேண்டும் என்றால் சில விஷயங்கள் விட்டு கொடுத்து செல்ல வேண்டும். அவ்வாறு இல்லாததால் தான் இன்று மத்தியில் நமக்கு கிடைக்க வேண்டிய உரிமைகள் எல்லாம் மறுக்கபடுகிறது. வரும் தேர்தலில் உங்களின் ஆதரவோடு நாங்கள் நிச்சயம் வெற்றி பெறுவோம் என்ற நம்பிக்கை உள்ளது. நீங்கள் வைத்த கோரிக்கைகள் நிச்சயம் நிறைவேற்றப்படும் உங்கள் வாழ்வாதாரம் ஏற்றம் பெறும். இவ்வாறு பேசினார்.

# ஒரே நாளில் 2-வது முறையாக முதல்வருடன் ஓ.பி.எஸ். சந்திப்பு

**சென்னை, ஆக.01-**

காலையில் பூங்காவில் நடைபயிற்சியின்போது சந்தித்த நிலையில், மீண்டும் முதல்வரை ஓ. பன்னீர்செல்வம் சந்தித்துள்ள நிகழ்வு அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளாகியுள்ளது.

உடல்நலம் பாதிக்கப்பட்ட முதல்வர் மு.க.ஸ்டாலின், சென்னை ஆயிரம் விளக்கு பகுதியில் உள்ள அப்பல்லோ மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார். சுமார் ஒரு வார காலம் அங்கு தங்கி சிகிச்சை பெற்ற அவர் அங்கிருந்தபடியே அரசு அலுவல்களை கவனித்து வந்தார். உடல் நலம் தேறிய நிலையில் டிஸ்சார்ஜ் செய்யப்பட்ட அவர் வீட்டிலேயே ஓய்வெடுத்து வந்தார். 10 நாட்களுக்குப் பிறகு முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகம் வந்து தனது பணிகளை தொடங்கினார்.

இந்த நிலையில், நேற்று காலையில் முதல்வர் மு.க. ஸ்டாலின் அடையாறு பூங்காவில் நடைபயிற்சி செய்த போது, அவரை முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சந்தித்து பேசினார். அப்போது அவரது உடல்நிலை குறித்து முதல்-அமைச்சரிடம் ஓ. பன்னீர்செல்வம் கேட்டறிந்ததாக கூறப்பட்டது.

பின்னர் நேற்று தனது ஆதரவாளர்களுடன் ஆலோசனையில் ஈடுபட்ட ஓ.பன்னீர்செல்வம், பா.ஜ.க. கூட்டணியில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்தார். அப்போது செய்தியாளர்களிடம் பேசிய பண்ருட்டி ராமச்சந்திரன், தி.மு.க.வை வீழ்த்துவது எங்கள் இலக்கல்ல என்று கூறினார்.

இந்த நிலையில் ஒரே நாளில் 2-வது முறையாக தற்போது முதல்வரை ஓ. பன்னீர்செல்வம் சந்தித்துள்ளார். சென்னை ஆழ்வார்பேட்டையில் உள்ள முகாம் அலுவலகத்திற்கு வருகை தந்த ஓ. பன்னீர்செல்வம் முதல்-அமைச்சரை சந்தித்து அவரது உடல்நலன் குறித்து விசாரித்தறிந்தார். ஓ. பன்னீர்செல்வத்துடன் முன்னாள் எம்.பி. கோபால கிருஷ்ணன் உள்ளிட்ட நிர்வாகிகளும் சென்றனர். ஏற்கனவே காலையில் பூங்காவில் நடைபயிற்சியின் போது சந்தித்த நிலையில், மீண்டும் முதல்வரை ஓ. பன்னீர்செல்வம் சந்தித்துள்ள நிகழ்வு அரசியல் வட்டாரத்தில் பேசுபொருளாகியுள்ளது.

# ராகுலை வாங்க கொல்கத்தா ஆர்வம்



இந்திய அணியின் முன்னணி பேட்ஸ்மேன் கே.எல். ராகுல். ஐபிஎல் மெகா ஏலத்தில் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணி பெரும்தொகை கொடுத்து ஏலம் எடுத்தது. டெல்லி அணிக்காக சிறப்பாக விளையாடினார். மேலும், இந்திய அணிக்காக சிறப்பான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறார். இந்த நிலையில் கொல்கத்தா நைட் ரைடர்ஸ் அணி கே.எல். ராகுலை ஒப்பந்தம் செய்ய ஆர்வமாக உள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. ஒப்பந்தம் உறுதியானால், கேப்டன் பதவி கூட கொடுக்கப்படலாம் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

# விடுபட்டவர்களுக்கு மகளிர் உரிமைத்தொகை, முதியோர் உதவித்தொகை விரைவில் வழங்கப்படும்

## அமைச்சர் இ.பெரியசாமி பேச்சு



**வத்தலகுண்டு, ஆக. 01-**

பட்டிவீரன்பட்டி அடுத்த, தேவரப்பன்பட்டியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் கலந்து கொண்ட, அமைச்சர் இ.பெரியசாமி, விடுபட்டவர்களுக்கு மகளிர் உரிமைத்தொகை, முதியோர் உதவித் தொகை விரைவில் வழங்கப்படும் என, பேசினார்.

திண்டுக்கல் மாவட்டம், பட்டிவீரன்பட்டி அடுத்த, தேவரப்பன்பட்டியில் உங்களுடன் ஸ்டாலின் முகாம் நடைபெற்றது. முகாமிற்கு ஆத்தூர் வட்டாட்சியர் முத்து முருகன் தலைமை வைகித்தார். முகாமில், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித்துறை அமைச்சர் இ.பெரியசாமி கலந்து கொண்டு பேசியதாவது. தேர்தல் வாக்குறுதிகளை, மு.க.ஸ்டாலின் தலைமையிலான திமுக நிறைவேற்றும் வகையில், மக்களின் கோரிக்கை மனுகளை உடனுக்குடன் நிறைவேற்றி வருகிறது.

தமிழ்நாட்டில் ஒரு கோடியே 60 லட்சம் பேர் விண்ணப்பித்ததில் ஒரு கோடியே 16 லட்சம் பேருக்கு மகளிர் உரிமைக் காக வழங்கப்பட்டுள்ளது. விடுபட்டவர்களுக்கு மகளிர் உரிமைத் தொகை, முதியோர் உதவி தொகை, மாற்றுத்திறனாளிகளுக்கான உதவித் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு மாதம் ரூபாய் ஆயிரம் வழங்கப்பட்டு வருகிறது. கிராம மக்களுக்கு இலவச வீட்டு மனை பட்டாக்களும் வழங்கப்பட்டு வருகிறது.

இங்கு இதுவரை கொடுத்துள்ள 400 மனுக்களுக்கு விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும். திண்டுக்கல் மாவட்டத்தில் 10 ஆயிரம் கலைஞர் கனவு இல்ல திட்ட வீடுகளும், ஆத்தூர் தொகுதியில் 3 ஆயிரம் கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் வீடுகளும் கட்டப்பட்டு வருகிறது.

பொதுமக்களை அதிகாரிகளே நேரடியாக சென்று, மனுக்களைப் பெற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு வரும் இந்த முகாமில் உங்கள் கோரிக்கைகள் நிறைவேற்றப்படும். இவ்வாறு அமைச்சர் இ.பெரியசாமி பேசினார்.

முகாமில், திமுக தலைமை செயற்குழு உறுப்பினர் ஆத்தூர் க.நடராஜன், ஆத்தூர் ஒன்றிய திமுக செயலாளர்கள் (மேற்கு) ராமன், (கிழக்கு) முருகேசன், ஆத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர்கள், தட்சிணாமூர்த்தி, முருகன், வருவாய் அலுவலர்கள் அய்யம்பாளையம் ஷர்மிளா, ஆத்தூர் ஜானகி, அய்யம்பாளையம் பேரூர் திமுக முன்னாள் செயலாளர் ஐயப்பன், திண்டுக்கல் கிழக்கு மாவட்ட திமுக இளைஞரணி துணை அமைப்பாளர் மணலூர், மணிகண்டன், முன்னாள் திமுக ஒன்றிய கவுன்சிலர் காணிக்கைசாமி, தேவரப்பன்பட்டி ஊராட்சி மன்ற செயலர் கண்ணன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். முகாமில், 15 துறையைச் சேர்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டு, பொதுமக்களிடம் கோரிக்கை மக்களை பெற்றனர். முகாமில், கோரிக்கை மனு கொடுத்தவர்களில் 30 நபர்களுக்கு உடனுக்குடன், வருமானச் சான்று, சாதி சான்று, இருப்பிட சான்று, மருத்துவ காப்பீட்டு அட்டை ஆகியவற்றை அமைச்சர் இ.பெரியசாமி வழங்கினார்.

# நத்தம்- தில்லை காளியம்மன் கோவில் கும்பாபிஷேகம்



**நத்தம், ஆக. 01-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அசோக்நகர்- செட்டியார்குளத்தெருவில் அமைந்துள்ள தில்லை காளியம்மன் கோவிலில் கும்பாபிஷேக விழா நடந்தது. இதையொட்டி நேற்று முன்தினம் அனுக்ஞை, விக்னேஷ்வர பூஜை, மஹா பூர்ணாகுதி மற்றும் முதல்கால யாகசாலை பூஜைகள் நடந்தது.தொடர்ந்து நேற்று காலையில் 2-ம் கால யாக பூஜைகள் உள்ளிட்ட பல்வேறு பூஜைகள் நடந்தது. பின்னர் மேளதாளம் முழங்க ஏற்கனவே யாகசாலையில் வைக்கப்பட்டிருந்த அழகர்மலை, கரந்தமலை, காசி, ராமேசுவரம், வைகை, உள்ளிட்ட பல்வேறு தீர்த்த குடங்கள் ஊர்வலமாக எடுத்து செல்லப்பட்டது.

பின்னர் அங்கு சிவாச்சாரியார்களின் வேத மந்திரங்கள் முழங்க கோபுர கலசத்தில் புனித தீர்த்தம் ஊற்றப்பட்டு பூஜைகளும், தீபாராதனைகளும் நடந்தது.அப்போது வானத்தில் கருடன்கள் வட்டமிட்டது.இதில் கழக ஜெயலலிதா பேரவை இணை செயலாளர் கண்ணன், அதிமுக நகர அவைத் தலைவர் சேக் ஒலி உள்ளிட்ட ஏராளமான பக்தர்கள் கலந்து கொண்டு சாமி தரிசனம் செய்தனர். தொடர்ந்து அவர்களுக்கு பூஜை மலர்களும்,புனித தீர்த்தமும், அறுசுவை உணவு அன்னதானமும் வழங்கப்பட்டது.



மதுரை மாநகராட்சி மண்டலம் 3 வார்டு எண்.50 மற்றும் 51 ஆகிய பகுதிகளுக்கான உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமினை அமைச்சர் பழனிவேல் தியாகராஜன் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். உடன் மேயர் இந்திராணி, மாநகராட்சி ஆணையாளர் சித்ரா, துணை மேயர் நாகராஜன், மாமன்ற உறுப்பினர் இந்திராகாந்தி மற்றும் மாநகாரட்சி அலுவலர்கள் உள்ளனர்.

# சிவகாசியில் இருசக்கர வாகனம் மீது லாரி மோதி விபத்து; மாமனார்- மருமகன் பலி

**விருதுநகர், ஆக. 01-**

சிவகாசி அருகேயுள்ள திருத்தங்கல் பாண்டியன் நகரில் வசித்தவர் சார்லஸ் பொன்ரசல் ( 28 ) அச்சக பணியாளர்,கேரள மாநிலம் மூணாறை சேர்ந்த ஜோதிராஜ் ( 60 ) என்பவரின் மகள் சந்தியா (25 )வுக்கும் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்பு திருமணமாகி,ஒரு வயதில் பவ்யா என்ற மகள் உள்ளார். தனது மகள் சந்தியாவையும்,பேத்தி பவ்யாவையும் பார்க்க திருத்தங்கல்லுக்கு வந்திருந்த ஜோதிராஜ் மீண்டும் மூணாறுக்கு செல்ல இருசக்கர வாகனத்தில் சிவகாசி பேருந்து நிலையத்திற்கு திருத்தங்கல் சாலையில் வந்து கொண்டிருந்தார்.மருமகன் இருசக்கர வாகனத்தை ஓட்டி வர மாமனார் பின்னால் அமர்ந்திருந்த நிலையில், அந்தப் பக்கமாக வந்த லாரி எதிர்பாராத விதமாக இரு சக்கர வாகனத்தின் மீது மோதியது.

விபத்தில் சம்பவ இடத்திலேயே மாமனார் ஜோதிராஜ் உயிரிழந்த பட்சத்தில்,சிவகாசி அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டபோது மருமகன் சார்லஸ் பொன்ரசலும் உயிரிழந்தார்.விபத்து குறித்து தகவலறிந்த போலீசார் சம்பவ இடத்தில் விசாரணை செய்து விபத்தில் உயிரிழந்த உடல்களை உடற்கூறாய்வுக்காக சிவகாசி அரசு மருத்துவமனைக்கு அனுப்பி வைத்தனர். சம்பவம் குறித்த சிவகாசி நகர் காவல் நிலைய போலீசார் வழக்கு பதிவு செய்து லாரி ஓட்டுநர் கணேஷ்குமாரை கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அருப்புக்கோட்டை நகர மன்ற கூட்டத்தில் வார்டு குறைகளை காரசாரமாக தெரிவித்த கவுன்சிலர்கள்



**அருப்புக்கோட்டை, ஆக. 01-**

அருப்புக்கோட்டை நகர மன்ற குழுவின் சாதாரண கூட்டம் நகர சபை தலைவர் சுந்தரலட்சுமி தலைமையில் நடைபெற்றது. துணைத் தலைவர் பழனிச்சாமி, இன்ஜினியர் அபூபக்கர் சித்திக், மேலாளர் குமார், வருவாய் ஆய்வாளர் கிருஷ்ணமூர்த்தி முன்னிலை வகித்தனர். கவுன்சிலர்கள் கலந்து கொண்டனர். கூட்ட விவாதத்தில் பாலசுப்பிரமணியன்:-

மாதம் மாதம் நடைபெறும் நகர் மன்ற கூட்டம் தற்போது இரண்டு மாதத்திற்கு ஒரு முறைதான் நடைபெறுகிறது. துணைத் தலைவர் பழனிச்சாமி:- தற்போது தீர்மானங்கள் இருந்தால் மட்டும் கூட்டம் நடத்தலாம் என்ற நடைமுறை உள்ளது. வரும் காலங்களில் மாதா மாதம் நகர்மன்ற கூட்டம் நடத்துவதற்கான ஏற்பாடுகளை கொண்டு வருவோம். பாதாள சாக்கடை திட்டப் பணிகளை முழுமையாக முடித்துவிட்டு அடுத்த பகுதிக்கு செல்ல வேண்டும். துப்புரவு பணியாளர்களை குப்பையை அல்லும் வேலைக்கு அனுப்பக்கூடாது. தனலட்சுமி :மக்களைத் தேடி மருத்துவத் திட்டம் செயல்படுகிறதா? இல்லையா? மருந்து இல்லை மாத்திரை இல்லை என சம்பந்தப்பட்டவர்கள் கூறுகின்றனர். இதனால் பெரும்பாலான முதியோர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

மீனாட்சி :எங்கள் பகுதியில் அரசு நிகழ்ச்சி எது நடந்தாலும் தெரிவிப்பதில்லை. இதனால் எங்கள் வார்டு மக்களுக்கு தகவல் தெரிவிக்க முடியவில்லை. தெருக்களில் வாங்கும் குப்பைகளை ரோட்டில் கொட்டி செல்கின்றனர். இதனால் சுகாதாரக் கேடு ஏற்பட்டுள்ளது. குப்பைத் தொட்டி வைக்க வேண்டும்.

டுவிங்கிளின் ஞானபிரபா :5-வது வார்டில் புதர் மண்டி கிடக்கும் நகராட்சிக்கான இடத்தில் பூங்கா அமைக்க வேண்டும். தெரு விளக்குகள் கூடுதலாக அமைக்க வேண்டும். கண்ணன் :நேரு நகரில் உள்ள வாருகாலை மண்ணைப் போட்டு மெத்தி நகராட்சி இடத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளனர். அதை நகராட்சி நிர்வாகம் கைப்பற்ற வேண்டும். கவுன்சிலர் இளங்கோ. மேற்குப் பகுதிகளில் தாமிரபரணி தண்ணீர் வருவதில்லை. தாமிரபரணி கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும். தமிழ் காந்தன் : பாரதி நகரில் வாருகால் முழுவதும் சேதம் அடைந்து கிடப்பதால் கழிவு நீர் செல்ல முடியாமல் தேங்கி உள்ளது. ராம திலகவதி : பட்டாபிராமர் கோவில் ஓடையை மழைக் காலத்திற்குள் தூர்வார வேண்டும். செந்தில் வேல் : நாடார் மயானம் செல்லும் பாதையில் பல ஆண்டுகளாக முறையான வாருகால் இல்லாமல் சாலையில் தேங்கி கிடக்கிறது . இதனால் வாகன ஓட்டிகள் கடும் சிரமத்திற்கு உள்ளாகி உள்ளனர். தலைவர் : கவுன்சிலர்களின் கோரிக்கையில் அனைத்தும் பரிசீலிக்கப்பட்டு தீர்வு காணப்படும் என்று நகர மன்ற தலைவர் சுந்தர் லட்சுமி கூறினார்.

## அருப்புக்கோட்டை ஒன்றிய பகுதிகளில்

# 1 கோடியே 30 லட்சம் மதிப்பிலான வளர்ச்சி பணிகளை அமைச்சர் தொடங்கி வைத்தார்



**அருப்புக்கோட்டை, ஆக. 01-**

அருப்புக்கோட்டை ஊராட்சி ஒன்றிய ராமச்சந்திரன்று சுமார் ரூ 1 கோடியே 30 லட்சம் மதிப்பிலான வளர்ச்சி பணிகளை அமைச்சர் கே கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன் துவக்கி வைத்தார். அதன்படி பந்தல்குடி நெடுங்கரைப்பட்டியில் ரூ 20 லட்சம் மதிப்பில் அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டுவதற்கும், அரசு ஆரம்பப் பள்ளியில் ரூ 34.23 லட்சம் மதிப்பில் புதிதாக கூடுதல் வகுப்பறை கட்டிடங்கள் கட்டுவதற்கும் அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி துவக்கி வைத்தார். அதனைத் தொடர்ந்து பந்தல்குடி மேட்டுப்பட்டியில் ரூ 6 லட்சம் மதிப்பில் புதிதாக கட்டப்பட்டுள்ள சுகாதார வளாகத்தை அமைச்சர் திறந்து வைத்தார். மேலும் வேலாயுதபுரம் மற்றும் கொப்புசித்தம்பட்டியில் தலா ரூ 20 லட்சம் மதிப்பில் புதிதாக அங்கன்வாடி மைய கட்டிடம் கட்டுவதற்கும் அமைச்சர் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்த அமைச்சர் ரூ 10 லட்சம் மதிப்பில் பந்தல்குடியில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் புதிதாக கலையரங்க கட்டிடம் கட்டுவதற்கு அமைச்சர் கே கே எஸ் எஸ் ஆர் ராமச்சந்திரன் அடிக்கல் நாட்டி பணிகளை துவக்கி வைத்தார்.

இந்த நிகழ்ச்சியில் முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சுப்பாராஜ்,முன்னாள் பந்தல்குடி பஞ்சாயத்து தலைவர் பாலாஜி பக்ரீநாத், ஒன்றிய செயலாளர் பாலகணேஷ், பொன்ராஜ், வட்டார வளர்ச்சி அலுவலர்கள் காஜா மைதீன், காமேஸ்வரி, தாசில்தார் செந்தில் வேல் மற்றும் அரசு அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

## திருமங்கலம் அருகே

# பொதுமக்களின் எதிர்ப்பை மீறி செயல்பட்டு வந்த மாட்டிறைச்சி கழிவு கூடத்திற்கு அதிகாரிகள் சீல்



**திருமங்கலம், ஆக. 01-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் அருகேயுள்ள கண்டுகுளம் கிராமத்தில் பால்பாண்டி என்பவருக்கு சொந்தமான மாட்டிறைச்சி கழிவுக் கூடம் செயல்பட்டு வந்தது. இங்கு மாட்டின் தலை,எலும்பு,கால் ஆகியவற்றை மாட்டு இறைச்சி கடைகளிலிருந்து எடுத்து வந்து உலரவைத்து மீண்டும் கேரளாவுக்கு அனுப்புவது வழக்கம்.மாட்டு இறைச்சி கழிவு கூடம் உள்ள பகுதி அருகே குடியிருப்புகள் இருப்பதால் இறைச்சிக் கழிவுக் கூடத்தில் இருந்து வரும் துர்நாற்றம் குடியிருப்பு வாசிகளை அவதிக்கு ஆளாக்கியது. வயதானவர்கள், குழந்தைகளுக்கு மூச்சுத் திணறல் உட்பட பல்வேறு நோய்கள் ஏற்படுவதாக குற்றம் சாட்டி கடந்த இரண்டு மாதத்திற்கு முன்பு மாட்டு இறைச்சி கழிவு கூடத்தை அகற்ற வேண்டும் என கோரிக்கை வைத்து சாலை மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.இதைத் தொடர்ந்து அங்கு பார்வையிட்ட அதிகாரிகள் சம்பந்தப்பட்ட மாட்டு இறைச்சி கழிவு கூடத்தை அகற்ற வேண்டும் என உரிமையாளருக்கு உத்தரவிட்டனர்.ஆனால் தொடர்ந்து மாட்டிறைச்சி கழிவு கூடம் இயங்கி வந்துள்ளது. இதே போல் அந்தப் பகுதியிலேயே முத்தையா,அழகர் ஆகியோருக்கு சொந்தமான மாட்டு தோல் பதப்படுத்தும் தொழிலும் நடைபெற்று வருவதால் கண்டு குளம் கிராமமே நோய் தொற்றுக்கு ஆளாகும் சூழ்நிலை ஏற்பட்டது.

அதிகாரிகள் உத்தரவிட்டும் தொடர்ந்துசெயல்பட்டு வரும் மாட்டு இறைச்சி கழிவு கூடத்தை நிரந்தரமாக மூட வேண்டும் என கோரிக்கை எழுந்து வந்ததால் சம்பந்தப்பட்ட இறைச்சிக் கழிவு கூடங்களை மூட உத்தரவிட்டு மூவருக்கும் கடந்த 25ம் தேதி ஊராட்சி ஒன்றிய அலுவலகம் மூலம் நோட்டீஸ் அனுப்பப்பட்டு இறைச்சிக்கழிவு கூடத்தின் கதவிலும் நோட்டீஸ் ஒட்டப்பட்டது.இதனிடையே நோட்டீஸ் ஒட்டிய பின்பும் இறைச்சி கழிவுகளை அகற்றாததால் மாவட்ட ஆட்சியர் பிரவீன் குமார் உத்தரவின் பேரில் நேற்று சம்பவ இடத்திற்கு திருமங்கலம் வட்டார வளர்ச்சி அலுவலர் சந்திரகலா தலைமையில் பலத்த போலீஸ் பாதுகாப்புடன் சென்ற வருவாய்த் துறையினர் மற்றும் சுகாதாரத் துறையினர் சம்பவ இடத்தில் ஆய்வு செய்ததில் இறைச்சி கழிவுகள் அங்கேயே இருப்பதை அறிந்து அதிரடியாக செயல்பட்டு பால்பாண்டிக்கு சொந்தமான இறைச்சி கழிவு கூடத்தையும் அழகர், முத்தையா ஆகியோருக்கு சொந்தமான மாட்டு தோல் பதப்படுத்தும் கூடத்தையும் பூட்டி சீல் வைத்தனர்.அதிகாரிகள் சீல் வைத்ததற்கு எதிர்ப்பு தெரிவித்து இறைச்சி கூட உரிமையாளர்கள் வாக்குவாதத்தில் ஈடுபட்டதால் அங்கு பரபரப்பான சூழல் நிலவியது. இதை தொடர்ந்து போலீசார் பேச்சு வார்த்தை நடத்தி அங்கிருந்து அனைவரையும் வெளியேற்றினர். இதனால் அங்கு சிறிது நேரம் பரபரப்பான சூழல் நிலவியது.

## பேரையூர் பேரூராட்சியில் நடந்த

# 'உங்களுடன் ஸ்டாலின் திட்டம்' முகாம்: மாவட்ட செயலாளர் மணிமாறன் பங்கேற்பு



**திருமங்கலம், ஆக. 01-**

மதுரை மாவட்டம் திருமங்கலம் சட்டமன்ற தொகுதி பேரையூர் பேரூராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாமில் மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் பங்கேற்று பொதுமக்களின் மனுக்கள் பதிவேற்றம் செய்யப்படுவதை பார்வையிட்டார். தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் ஆணைக்கிணங்க பொதுமக்கள் குறைகளை விரைவாக நிவர்த்தி செய்திடும் வகையில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம்கள் மாநிலம் முழுவதிலும் 10 ஆயிரம் நடைபெற ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த முகாம்களில் கலைஞர் மகளிர் உரிமைத்தொகை, மருத்துவ காப்பீடு, பேரூர் வளர்ச்சித்துறை, வருவாய்த்துறை, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை, தொழிலாளர் நலத்துறை, தோட்டக்கலைத்துறை மற்றும் அரசின் பல்துறை சார்ந்த பொதுமக்களிடம் கோரிக்கை மனுக்களை அதிகாரிகள் நேரடியாக பெற்று வருகின்றனர். இதன் ஒரு பகுதியாக திருமங்கலம் சட்டமன்ற தொகுதி பேரையூர் பேரூராட்சியில் உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் பேரையூரில் நேற்று சிறப்பாக நடைபெற்றது. இந்த முகாமிற்கு பேரூராட்சி தலைவர் காமாட்சி தலைமை வகித்தார். துணை தலைவர் பிரியதர்ஷினி வருசை முகமது முன்னிலை வகித்தார். ஒன்றிய கழகச் செயலாளர்கள் நாகராஜ், பாண்டியன், தனசேகரன், பேரூர் செயலாளர் வருசை முகமது ஆகியோர் வரவேற்றனர். நூற்றுக்கனக்கான பொதுமக்கள் ஆர்வமுடன் கலந்து கொண்ட இந்த முகாமில் மதுரை தெற்கு மாவட்ட திமுக செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் சிறப்பாளராக கலந்து கொண்டு, பொதுமக்களின் பல்வேறு கோரிக்கை மனுக்கள் அரசு அலுவலர்கள் மூலம் பதிவேற்றம் செய்யப்படுவதை நேரில் பார்வையிட்டு அதிகாரிகளுடன் ஆலோசனை நடத்தினார்.

மேலும் முகாமிற்கு வருகை தரும் பொதுமக்களுக்கு உதவிடுமாறு கழக நிர்வாகிகளுக்கு மாவட்டச் செயலாளர் சேடபட்டி மு.மணிமாறன் ஆலோசனை வழங்கினார். உடன் தமிழக அரசின் பல்துறை அதிகாரிகள், கட்சி நிர்வாகிகள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# 16.புதூரில் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம்



**ஒட்டன்சத்திரம், ஆக. 01-**

தமிழகம் முழுவதும் மக்களின் குறைகளை வீட்டுக்கே வந்து கேட்டறிந்த தீர்வு காணும் உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாம் நடைபெற்று வருகிறது, அதன் ஒரு பகுதியாக திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் சட்டமன்ற தொகுதி தொப்பம்பட்டி ஒன்றியம் 16 புதூர் ஊராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் சிறப்பு முகாமில் தமிழ்நாடு அரசின் நான்காண்டு சாதனைகளை பொதுமக்களிடம் எடுத்துரைக்கப்பட்டது.

நிகழ்வில் மாவட்டத் துணைச் செயலாளர் ராஜாமணி, ஒன்றிய செயலாளர் பொன்ராஜ், ஒட்டன்சத்திரம் வட்டாட்சியர் சஞ்சய்காந்தி, வட்டார வளர்ச்சி அலுவலர் தாஹிரா, முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் சத்தியபுவனா, முன்னாள் ஊராட்சி மன்ற தலைவர் கிருஷ்ணசாமி, ஒன்றிய துணைச் செயலாளர் ராஜ்குமார் உள்ளிட்டோர்கலந்து கொண்டனர். முகாமில் விண்ணப்பித்த பயனாளிகளுக்கு முதலமைச்சரின் மருத்துவ காப்பீடு அட்டை, உள்ளிட்ட நலத்திட்ட உதவிகள் உடனடியாக வழங்கப்பட்டது.

# நத்தம் அருகே மெக்கானிக் தூக்குபோட்டு தற்கொலை

**நத்தம், ஆக. 01-**

திண்டுக்கல் மாவட்டம் நத்தம் அருகே ஆவிச்சிபட்டியை சேர்ந்தவர் இளஞ்செழியன்(42). டூவிலர் மெக்கானிக். இவர் கடந்த சில மாதங்களாக மதுவுக்கு அடிமையாகி தீராத வயிற்றுவலியால் அவதிப்பட்டு வந்துள்ளார்.

இதனால் கடந்த சில நாட்களாக மன உளைச்சலில் இருந்த இளஞ்செழியன் நேற்று முன்தினம் வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் கயிற்றால் தூக்கு போட்டு தற்கொலை செய்து கொண்டார். தகவலறிந்து சம்பவ இடத்திற்கு சென்ற நத்தம் போலீசார் இறந்தவரின் பிரேதத்தை கைபற்றி நத்தம் அரசு மருத்துவமனைக்கு பரிசோதனைக்காக அனுப்பி வைத்தனர். மேலும் இச்சம்பவம் குறித்து நத்தம் போலீசார் வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

மழைத்துளி மண்ணின் உயிர்துளி



● முதல்வர் மு.க.ஸ்டாலின் நேற்று தலைமைச் செயலகத்தில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை சார்பில் 27 கோடியே 4 இலட்சம் ரூபாய் செலவில் கட்டப்பட்டுள்ள 2 மாநிலவரி அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் 12 சார்பதிவாளர் அலுவலகக் கட்டிடங்கள் மற்றும் செங்கல்பட்டு பதிவு மாவட்டத்தில் திருப்போரூர் சார்பதிவாளர் அலுவலகத்தினை பிரித்து புதியதாக உருவாக்கப்பட்டுள்ள நாவலூர் மற்றும் கேளம்பாக்கம் ஆகிய இரண்டு புதிய சார்பதிவாளர் அலுவலகங்கள் ஆகியவற்றை திறந்து வைத்தார். இந்த நிகழ்ச்சியில், அமைச்சர்கள் எ.வ.வேலு, பி.மூர்த்தி, தலைமைச் செயலாளர் முருகானந்தம், மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



● அ.தி.மு.க. பொதுச் செயலாளரும், சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ் நாடு முன்னாள் முதல்வருமான எடப்பாடி பழனிசாமி நேற்று ராமநாதபுரம் சமஸ்தான இளைய மன்னர் நாகேந்திர சேதுபதியை அரண்மனைக்கு நேரில் சென்று பார்வையிட்டு, அவரது தந்தை ராஜா சூ. குமரன் சேதுபதி படத்திற்கு மரியாதை செலுத்தினார். இந்நிகழ்வின்போது, மாவட்ட செயலாளர்கள் உள்ளிட்ட முக்கிய கட்சி நிர்வாகிகள் உடன் இருந்தனர்.

### ராமநாதபுரம் மாவட்டத்தில்

# மீனவர்கள், நெசவாளர்களுடன் கலந்துரையாடினார் இ.பி.எஸ்.

ராமநாதபுரம், ஆக.01-

"மக்களை காப்போம், தமிழகத்தை மீட்போம்" என்ற பிரச்சாரத்தை மேற்கொண்டு வரும் அ.தி.மு.க. பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி, நேற்று ராமநாதபுரத்தில் மீனவர்கள், விவசாயிகள், நெசவாளர்களுடன் கலந்துரையாடினார்.

அப்போது பேசிய எடப்பாடி பழனிசாமி கூறியதாவது: எல்லை தாண்டி மீன்பிடித்தாக படகுகளை பறிமுதல் செய்து, மீனவர்கள் கைது செய்யப்பட்டு, இலங்கை சிறைகளில் தண்டனை அனுபவித்து வருகின்றனர். இலங்கையில் உள்ள மீனவர்களை விடுதலை செய்வதற்கு மத்திய அமைச்சர்களிடம் பேசி தீர்வு காண்பதற்கான முயற்சிகளை செய்வேன்.

விவசாயிகளுக்கு அ.தி.மு.க. ஆட்சி காலத்தில் தொடக்க வேளாண்மை வழங்கப்பட்ட பயிர்க்கடன் இரண்டு முறை தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது. வறட்சியான ராமநாதபுரம் மாவட்ட விவசாயிகளுக்கு ரூ.540 கோடி காப்பீடு தொகை அ.தி.மு.க. ஆட்சியில் வாங்கிக் கொடுக்கப்பட்டுள்ளது. அ.தி.மு.க. ஆட்சிக் காலத்தில் 24 மணி நேரம் மும்முனை மின்சாரம் விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. கண்மாய்கள் ஆழப்படுத்தப்பட்டன.

ரூ.14 ஆயிரத்து 400 கோடியில் காவேரி - குண்டாறு திட்டத்தை அ.தி.மு.க. ஆட்சியில் மேற்கொண்டோம். ஆனால் தி.மு.க. ஆட்சிக்கு வந்ததும் இந்த திட்டத்தை கிடப்பில் போட்டார்கள். தற்போது மேட்டூர் அணை நிரம்பி 1 லட்சத்து 24 ஆயிரம் கன அடி தண்ணீர் உபரி நீராக கடலில் வீணாக போய் கலக்கின்றது.

16 ஆண்டுகள் மத்தியில் ஆட்சி அதிகாரத்தில் இருந்த தி.மு.க. அரசு, கச்சத்தீவு இல்லாத காரணத்தினால் தமிழக மீனவர்கள் பாதிக்கின்றார்கள் என்று தெரிந்திருந்தும், கச்சத்தீவை மீட்பதற்கு அழுத்தம் கொடுக்கவில்லை. கச்சத்தீவை மீட்க அ.தி.மு.க. சார்பாக மத்திய அரசை தொடர்ந்து வலியுறுத்துவோம். இவ்வாறு அவர் கூறினார்.

இந்த ஆலோசனை கூட்டத்தில் முன்னாள் அமைச்சர் ஆர்.பி.உதயக்குமார், ராமநாதபுரம் மாவட்டச் செயலாளர் முனியசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். முன்னதாக ராமநாதபுரம் சேதுபதி மன்னர் அரண்மனையை அ.தி.மு.க. பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி பார்வையிட்டார்.



● துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலினை நேற்று, தலைமைச் செயலகத்தில் தேசிய மாணவர் படையின் (என்சிசி) தலைமை இயக்குநர் ஜெனரல், லெஃப்டினண்ட் ஜெனரல் குர்பீர்பால் சிங் மரியாதை நிமித்தமாக சந்தித்தார். இந்நிகழ்வில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் அதுல்ய மிஸ்ரா, சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், தேசிய மாணவர் படையின் துணை இயக்குநர் ஜெனரல் கமோடோர் எஸ்.ராகவ் மற்றும் அரசு அலுவலர்கள் உடனிருந்தனர்.

# 11 ஐ.ஏ.எஸ். அதிகாரிகள் மாற்றம்

சென்னை, ஆக.01-

**தமிழகத்தில் 11 ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை பணியிட மாற்றம் செய்து தமிழக அரசு உத்தரவிட்டுள்ளது.**

தலைமைச்செயலாளர் முருகானந்தம் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

*நிதித்துறை செலவின செயலர்- பிரசாந்த் மு வடநெரே

*நிதித்துறை இணைச் செயலர் -ராஜகோபால் சுன்கரா

*நில அளவைத்துறை இயக்குநர் - தீபக் ஜேக்கப்

* போக்குவரத்து, சாலைப் பாதுகாப்பு கமிஷனர்- கஜலட்சுமி

* கூட்டுறவு சங்க மேலாண்மை இயக்குநர்- கவிதா ராமு

* குடிநீர் வடிகால் வாரிய மேலாண்மை இயக்குநர்- சமீரன்

* மீன்வளத்துறை இயக்குநர் - முரளீதரன்

* வருவாய் நிர்வாக ஆணையர் - கிரண் குராலா

* கோவை வணிக வரி இணை கமிஷனர் - தாக்கரே சுபம் ஞானதேவ்ராவ்

* சென்னை வணிக வரி( அதிக வரி செலுத்துவோர் பிரிவு) இணை கமிஷனர் - நாராயண சர்மா ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

* போக்குவரத்துத்துறை முதன்மைச் செயலர் சுன் சோங்கம் ஜடக் சிருவுக்கு கூடுதலாக இயற்கை வளங்கள் துறை ஒதுக்கப்பட்டு உள்ளது.

இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# அரசியலில் நிரந்தர நண்பரும் இல்லை, எதிரியும் இல்லை

## முதல்வரை சந்தித்த ஓ.பி.எஸ். பேட்டி

சென்னை, ஆக.01-

முதல்வர் ஸ்டாலினை சந்தித்த முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம், அரசியலில் நிரந்தர நண்பரும் இல்லை, எதிரியும் இல்லை என்று பேசியிருப்பது அரசியல் களத்தில் பேசுபொருளாகியுள்ளது.

தேசிய ஜனநாயகக் கூட்டணியில் இருந்து விலகுவதாக முன்னாள் முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் நேற்று அறிவித்தார். இந்த நிலையில், சென்னை ஆழ்வார்ப்பேட்டையில் அமைந்துள்ள முதல்வர் ஸ்டாலின் வீட்டுக்கு சென்று அவரைச் சந்தித்துப் பேசினார். ஆனால், நேற்று காலையிலேயே முதல்வர் ஸ்டாலின் நடைப்பயிற்சியின் போதே இருவரும் சந்தித்துப் பேசியிருந்தனர்.

இந்த நிலையில், நேற்று இரண்டாவது முறையாக முதல்வர் ஸ்டாலினுடன் ஓ. பன்னீர்செல்வம் சந்திப்பு நடைபெற்றுள்ளது. முதல்வர் ஸ்டாலினை சந்தித்த ஓ. பன்னீர்செல்வம், செய்தியாளர்களுடன் பேசுகையில், முதல்வர் ஸ்டாலினின் உடல்நலன் குறித்து விசாரிக்கவே சந்தித்தேன். மு.க.முத்து-வின் மறைவுகுறித்தும் விசாரித்தேன். அரசியல் நிமித்தமாக எதுவும் பேசவில்லை.

அரசியலில் நிரந்தர நண்பரும் இல்லை, எதிரியும் இல்லை. எதிர்காலத்தில் தேர்தல் நெருங்கும்போது எதுவும் நடக்கலாம். அரசியலில் எனக்கென்று சுயமரியாதை உண்டு. அம்மாவின் (முன்னாள் முதல்வர் ஜெயலலிதா) நேரடி கண்காணிப்பில் 25 ஆண்டுகள் பணியாற்றியவன் நான். மும்மொழிக் கொள்கையை ஏற்காததால், தமிழகத்துக்கான நிதியை நிறுத்தி வைத்ததாக மத்திய கல்வித் துறை அமைச்சர் தெரிவித்தது வருத்தம்தான்.

தேர்தலில் ஒன்று சேர்ந்த பா.ஜ.க. - அ.தி.மு.க.வுக்கு வாழ்த்துகள்; பிரதமர் மோடியுடன் கூட்டணிவைத்த எடப்பாடி பழனிசாமிக்கும் வாழ்த்துகள் என்று தெரிவித்தார். தொடர்ந்து, த.வெ.க.வுடன் கூட்டணி குறித்த கேள்விக்கு, கூட்டணி தொடர்பாக த.வெ.க.வும் பேசவில்லை, தானும் பேசவில்லை என்று மறுப்பு தெரிவித்தார்.



● முதல்வர் மு.க.ஸ்டாலினை நேற்று, முகாம் அலுவலகத்தில், முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் சந்தித்து, உடல்நலம் குறித்து கேட்டறிந்தார். இச்சந்திப்பின்போது துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின், நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ரவீந்திரநாத் ஆகியோர் உடனிருந்தனர்.

# 2026-க்கு பிறகு விஜய் மீண்டும் சினிமாவுக்கு சென்று விடுவார்: அமைச்சர் சேகர்பாபு

சென்னை, ஆக.01-

விஜய் 2026-க்கு பிறகு மீண்டும் சினிமாவுக்கு சென்று விடுவார் என்று அமைச்சர் சேகர்பாபு தெரிவித்துள்ளார்.

வடசென்னை வளர்ச்சி திட்டத்தின் கீழ் சென்னை பெருநகர் வளர்ச்சி குழுமம் சார்பில் நடைபெற்று வரும் பல்வேறு வளர்ச்சி பணிகளை அமைச்சர் பி.கே. சேகர்பாபு நேற்று ஆய்வு செய்தார்.

சென்னை பெரம்பூரில் கட்டப்பட்டு வரும் சமுதாய நலக்கூடம், கொளத்தூர் சட்டமன்ற தொகுதியில் கட்டப்பட்டு வரும் திரு.வி.க. நகர் மற்றும் பெரியார் நகர் புதிய பஸ் நிலையம், சேத்துப்பட்டில் கட்டப்பட்டு வரும் நவீன சலவை கூடத்தில் அவர் ஆய்வு செய்தார்.

பின்னர் அமைச்சர் பி.கே.சேகர்பாபு நிருபர்களிடம் கூறியதாவது:-

செங்கல்பட்டில் மிகப்பெரிய பஸ் நிலையம் உருவாக்கப்பட்டு வருகிறது. மகாபலிபுரத்தில் பஸ் நிலையம் வடிவமைக்கப்பட்டு பணிகள் நடைபெற்று வருகிறது. ஆவடியில் புதிய பஸ் நிலையம் கட்டப்பட்டு வருகிறது. பெரியார் நகர் பஸ் நிலையம், திரு.வி.க.நகர் பஸ் நிலையத்தை செப்டம்பர் முதல் வாரத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் திறந்து வைக்க உள்ளார்.

தி.மு.க., கூட்டணி கட்சிகளை நம்பித்தான் தேர்தலை சந்திக்கிறது என்று எடப்பாடி பழனிசாமி விமர்சனம் செய்கிறார். நாங்கள் யாரையாவது கூட்டணிக்கு வருமாறு அழைக்கிறோமா? இல்லை. அவர்களது கூட்டணியில் உள்ள யாரையாவது விமர்சனம் செய்கிறோமா? எடப்பாடி பழனிசாமி மைக்கை பிடித்தாலே கம்யூனிஸ்ட்களை விமர்சனம் செய்வது, வி.சி.க.வை அழைப்பது என்று தேடித்தேடி அழைத்துக் கொண்டிருக்கிறார்.

1967, 1977 போன்று 2026-ல் மாற்றம் வரும் என்று விஜய் கூறுகிறார். நிச்சயமாக மாற்றம் வரும். இன்றைக்கு அரசியலுக்கு வருகிறோம் என்று சொன்னவர் 2026-க்கு பிறகு, மீண்டும் நான் சினிமாவிற்கு செல்கிறேன் என்ற மாற்றத்தை ஏற்படுத்துவார்.

இவ்வாறு அவர் கூறினார்.



● முதல்வர் மு.க.ஸ்டாலினை அவரது ஆழ்வார்பேட்டை இல்லத்தில் நேற்று தே.மு.தி.க. பொதுச்செயலாளர் பிரேமலதா, சுதீஷ் நேரில் சந்தித்து நலம் விசாரித்தனர். அருகில் முதல்வரின் துணைவியார் துர்கா ஸ்டாலின் மற்றும் துணை முதல்வர் உதயநிதி ஸ்டானின் உள்ளனர்.



● தலைமைச்செயலகத்தில், திருநெல்வேலி மாவட்டம், பொருநை அருங்காட்சியகப் பணிகள் குறித்து, பொதுப்பணித் துறை அலுவலர்களுடன் பொதுப்பணிகள், நெடுஞ்சாலைகள் மற்றும் சிறு துறைமுகங்கள் துறை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.